www.padippakam.com

# விருட்சம்

கவிதை

கேளுங்கள், பிராமணர்களே!

டிசம்பர், '94 - ஜனவரி, 1995. விலை ரூ. 8.

எனக்குத் தெரியாதா—
எனது ஞானம்
எல்லைக்கு உட்பட்டதென்று.

இருந்தாலும்
இதுவும் தெரியுமே
எல்லாருக்குமே இப்படித்தானென்று

எல்லாம் இங்கே
அங்குலங்கள்
வேறுபாட்டில்தான்.

மெகாமீட்டர் தூரத்தில்
எந்தக் கொம்பனு மில்லை.

வா நண்பா
தாராளமாய்
சண்டை போடலாம்.

—ஜெயந்தன்

படிப்பகம்

www.padippakam.com

## க. நா. சு. வின் 'குரு சிஷ்ய பாவம்'

குருபீடம் அமைத்துவிட்டேன்
இருபது ஆண்டுகளின் இடைவிடாத உழைப்பு இது,
மரத்தில் தொடங்கி மட்டையில் முடிந்து
தமிழில் மிதந்து மலையாளத்தில் அமிழ்ந்து
பிரவாகம் பெற்றிருந்தும்
குருபீடம் சுலபத்தில் வராது
புரியாததைச் சொல்லிச் சொல்லி
சுற்றி வந்து குருபீடம் அமைத்துவிட்டேன்.
ஹோ கபாலி, ஹோ அடுக்கா, ஹோ
சங்கட், ஹோ மாட்டுவண்டிச்சாமி
வந்து என்னைப் பீடத்தில் ஏற்றி
விடுங்கள் என்று கூறுகிறார்
வந்தபோது உணவளித்து அப்பா
வைத்துவிட்டுப் போன வியாபாரத்தையும்
மாளிகையையும் சமுதாய அந்தஸ்தையும்
காப்பாற்றிக்கொண்ட நாகர்கோவில்
சுந்தரய்யர் ராமசாமி அவர்கள்.

சிஷ்யர்கள் தயங்குகிறார்கள்.
இந்தக் காலத்தில் குருவுக்கு
மிஞ்சாத சிஷ்யர்கள் யார்?
சங்கட் தானே குருபீடத்தில் ஏறி
உட்காரத் தகுதி பெற்றவர்
என்று எண்ணுகிறார். ஆனால்
வாடகை தரவேண்டும் – அது
அவர் அமைத்ததில்லை.
கோவிலை மன்னன் கட்டினாலும்
அதற்குள் ஆன்மீகத்தைக் கொண்டுவர
ஒரு சித்தன் வேண்டும்

— தொடர்ச்சி பின் அட்டை உள்பக்கம்

படிப்பகம்

www.padippakam.com


# கவிதாசரண்

ஆண்டுச் சந்தா ரூ. 60·
ஆயுள் சந்தா ரூ. 600·
சந்தாவை **M. O.** செய்க.

படைப்பிலக்கிய மாத இதழ் ★ ஆசிரியர்: **கவிதாசரண்**



முகவரி:
**ஆசிரியர்,**
**"கவிதாசரண்",**
**31, டி. கே. எஸ். நகர்,**
**சென்னை-600 019.**
தொலை பேசி எண்: 54 44 99


**இப்போது எனக்குள்ள நிறைவெல்லாம் பிராமணர்கள் எவ்வித முகமூடிகளுமற்றுத் தங்கள் கேள்விகளை முன்வைக்கிறார்கள் என்பதே. மனத்துள் காயம் பட்டிருக்கலாம். வெளியில் நியாயம் பேசுவதற்கான கேள்விகள். அவர்களுக்கொரு சொல்: பிராமணப் பொது மனிதன் எல்லாரையும் போலவே அல்லல் படுகிறவன்தான். வெள்ளத்தோடு அடித்துச் செல்லப் படுகிறவன்தான். தலித்துகளைத் தள்ளிவைப்பதில் மேட்டுக்குடிமகன் இவனிலும் மூர்க்கன்தான். அது பற்றியல்ல நாம் பேசுவது. 'பிடித்து வைத்தால் அது பிள்ளையார்' என்பது போல சமூக மனிதனை இன்னமும் 'பிடித்து வைப்பது' பிராமணக் கருத்தியல்தானே? அந்த விற்பனம் நிகழ்த்தும் உற்பாதம் பற்றித்தான் பேச்சு.**


## புதிய தரிசனங்கள்

தந்த

## பொன்னீலன்

நம்மைப் பெருமிதங்கொள்ள வைக்கிறார்.

"மனித நேயப் பார்வையோடு, தமிழின்
கலாச்சார - பண்பாட்டு மதிப்பீடுகளை
இலக்கியத் தேடலாக்கும் இதழியக்கப்
பயணம். தமிழுக்கான பரிமாணங்கள்
யாவும் இதழுக்கான திசைகளாகும்.


படிப்பகம்

www.padippakam.com



# கடிதங்கள்

● கவிதாசரணின் கடிதங்கள் பல்வேறு முகங்களை அடையாளங் காட்டுவதாக அமைந்திருந்தது. முக்கியமாய் முப்பது வருடங்கள் தமிழில் ஒரு தீவிர இலக்கியவாதியாக இயங்கிவரும் திரு. வல்லிக் கண்ணனின் கடிதம் எனக்கு அதிர்ச்சியளிக்கும்படியாக இருந்தது.

குமுதத்தில் சுஜாதாவின் அரைப்பக்க, ஒரு பக்க இலக்கியப் பணிகள் கண்டு இவர் சிலாகித்து மகிழ்ந்து போனதும், அது தொடர்பாக சுஜாதா பற்றின அவர் மதிப்பீடும்...... வ. க. வின் பல முகங்களில் ஒன்றாகத்தான் இதை எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

சுஜாதாவின் மிகச் சில சிறுகதைகளிலும் (நகரம், மத்யமர், கஸ்தூரிகள்) அறிவியல் கட்டுரைகளிலும் வ. க. உடன் நான் உடன் படுகிறேன்.

ஆனால் ஒரு கையை ப்ரியா கல்யாணராமன், கிருஷ்ணா டாவின்ஸி... போன்றவர்கள் தோளிலும், இன்னொரு கையை (அநேகமாக அது இடது கை) ஞானக்கூத்தன், வண்ணதாசன், ஜெயமோகன் போன்றவர்கள் தோளிலும் போட்டுக் கொண்டு சுஜாதா நடத்தும் இந்த இலக்கியப் பயணத்தின் இலக்கு என்ன என்று வ. க. வுக்குப் புரியவில்லையா?

சுஜாதா ஒரு நல்ல இலக்கிய ரசிகரென்றால் - ஆசிரியர் என்றால் அவருக்கிருக்கும் செல்வாக்கிற்கும், பணபலத்திற்கும் ஒரு நல்ல இலக்கிய இதழைத் தொடங்கியிருக்கலாமே! சிற்றிதழாக இல்லாமல் கடைகளில் குமுதத்திற்குப் பக்கத்திலேயே தொங்கவிட்டுப் பரவசம் அடைந்திருக்கலாமே.

கவிதாசரணில் சில வெள்ளைத் தாள்கள் வீணாகிறது என்று இலக்கியக் கரிசனம் கொள்ளும் வ. க. அவர்கள் குமுதத்தின் 90 பக்கங்கள் வீட்டுக்குள் சாக்கடையைக் கொண்டு வருவது பற்றிக் கவலைப்படவில்லையா?

இந்த இடத்தில் இன்னொன்றையும் சொல்ல வேண்டும். வ. க. அவர்கள் 13 இதழ்களில் 13 விதமாக எழுதிப் புகழ் பெற்றவர் என்றதொரு புதிய தகவலை ஆசிரியர் தந்திருக்கிறார். இதே கவிதாசரண்தான் முந்தய இதழொன்றில் - வ. க. வின் பெருந்தன்மை பற்றி கையெழுத்துப் பிரதியானாலும் வாழ்த்துச் செய்தி அனுப்புவார் என்றும் கூறுகிறார். இப்பொழுது இவருக்கு முரண்பாடான ஒரு கருத்தைச் சொன்னவுடன் அவர்மீது சேற்றை வாரி இறைக்கிறாரே, இது என்ன விதமான விமர்சனப் போக்கு?

இரா. நடராசனின் 'இது தலித்துகளின் காலம்' நல்லதொரு யுத்தத்திற்கான முரசறிவிப்பாகவே முழங்குகிறது. காலங்காலமாக ஒடுக்கப்பட்ட பெண்கள் தம்மை உணர்ந்து வெளிவரத் தொடங்கி, பல அமைப்புகளில் தங்களை இணைத்துக் கொண்டு இயங்கத் துவங்கியபோது அவர்களுக்கு அடங்காப்பிடாரி தொடங்கி

படிப்பகம்

www.padippakam.com



விபச்சாரி வரையிலும் பட்டங்கள் வழங்கப்பட்டன. அதுபோலத் தலித்துகள் மீதும் இன்றைய இலக்கியவாதிகள் தாக்குதல் துவங்கியிருக்கிறார்கள். ஒருபக்கம் தலித் என்றாலே அலர்ஜிக்கு ஆளாகும் இலக்கிய கோஷ்டி இன்னொரு பக்கம் 'டிராயிங் ரூம்' தலித்துகள் மேற்கொள்ளும் மறைமுகத் தாக்குதல்— இந்த இரண்டு தாக்குதலுக்கிடையில் இருந்து கொண்டுதான் உண்மையான தலித்துகள் இங்கே போராட வேண்டியிருக்கிறது.

வாசிப்பு சுகம், படைப்பு சுகம், விமர்சன சுகம்......என்று எல்லாவற்றிலும் சுகம் தேடியலையும் சுகவாசிகள் பற்றின தங்கள் விமர்சனம் நூறு சதவீதம் உண்மையே. 'தலித்' என்றாலே அலர்ஜியுடன் அலறும் லஷ்மி மணிவண்ணனின் காலச்சுவடு, கேப்பியார் கட்டுரைகளைப் படித்தவர்கள் இதை உணர்ந்திருக்கலாம்.

கவிதாசரண் அதன் இலக்கை ஓரளவுக்கு அடைந்திருக்கிறது என்பதில் மனசு நிறைவு கொள்கிறது. நன்றி!

**வி. சுரேஷ், தூத்துக்குடி–6**

**(சேற்றை வாரி......? அடிப்படையற்ற குற்றச்சாட்டு. ஆ - ர்.)**

● கவிதாசரண் சிலரைத் தாக்கினாலும் அதன் பின் வெறும் கோபம் மட்டுமே இல்லை என்பது தெரிகிறது. போன இதழில் சமூகச் சார்பு அற்ற இலக்கியம் / சிந்தனை போதாது என்றெழுதியுள்ளீர்கள். அதனை நானும் ஏற்கிறேன். ஆனால் இன்று உலகம் வளர்ந்துள்ளது. சிந்தனையும் அதுபோல் வளர்ந்துள்ளது. சிந்தனைக் குவியலில் நாம் பின் தங்க முடியாது. அதுவே நம்மை அடிமைப்படுத்தும். எனவே அறிவுக்கான நம் சமூக நிறுவனங்களை நாம் பின் தங்க விடக்கூடாது. அறிவு வளரும்போது பழைய சமூகச் சார்புச் சிந்தனை தடுமாறும்; புதிய சமூகச் சார்புச் சிந்தனையை எப்படி கண்டெடுப்பது என்ற பிரச்சனைதான் அமைப்பியல், பின் - அமைப்பியல் போன்றன பற்றியவைகளின் தேடல். எனவேதான் என் போன்றோரின் ஈடுபாடு இவைகளில். இவைகளைக் கிண்டல் செய்வது, கரண்ட் கம்பி கிராமத்துக்கு வரும்போது பயந்து ஓடி ஒளியும் ஆதிவாசிகளின் மனநிலைக்கே நம்மைச் செலுத்தும்.

'உடனடியாகச் சமச்சீர்மை பேசுவதோ போதிப்பதோ இல்லை இங்கே கல்வி கற்றவர்களின் கைங்கர்யம்' என்ற அர்த்தத்தில் நீங்கள் எழுதிய ஒரு வரி இப்படி என்னை யோசிக்க வைத்தது.

**தமிழவன், பெங்களூர்.**

● தலித்தைப்பற்றி நீங்கள் (செப்டம்பர் இதழ்) எழுதியிருந்த விஷயங்கள் கொஞ்சம் அதிகமாகவே என்னைப் போன்றவர்களை சிந்திக்க வைத்தது. ஏதோ ஒரு தலைமுறை இப்போதுதான் தலை நிமிர்ந்து சில விஷயங்களைப் புரிந்து கொள்ள ஆரம்பித்திருக்கிறது. அதற்குள் இத்தனை கூப்பாடு! ஆர்ப்பாட்டம்!

படிப்பகம்

www.padippakam.com



## கடிதங்கள்

செருப்பு தைக்கும் தலித்தைவிட அலுவலகம் போய் ஆயிரம் பேர்களுக்கு நடுவில் அவர்களில் ஒருவனாக வாழ நினைக்கும் தலித்திற்கு ஏற்பட்டிருக்கும் பாதிப்புகள் அதிகம். செருப்பு தைப்பவன் விதியை நொந்து கொள்வான். எல்லாம் 'கர்மபலன்' என்பதற்கு மேல் அவனுக்கு யோசிப்பதற்கு எதுவுமில்லை. ஆனால், இந்த ஓரளவு படித்த, சிந்திக்க ஆரம்பித்திருக்கும் தலித்திற்கு பாவ புண்ணியத்தின் அர்த்தங்கள் தெரிகின்றன. அவர்களைவிட தான் எந்த வகையிலும் குறைந்தவனில்லை என்று நிரூபிக்கவும் முடிகின்றது. ஆனாலும் அவன் தலித் என்கிற சொந்த முகத்துடன் அவர்களில் ஒருவனாக வாழ முடிவதில்லை. உங்களுக்கே தெரியுமே... சென்னையில் வாழும் தலித்துகளில் எத்தனைபேர் சொந்த முகம் மறந்து, முதலியாராக, பிள்ளைமாராக, வேளாளராக, சரி போனால் போகட்டும் என்று நாடாராக நடமாடுகின்றார்கள். அப்பன் பேரைச் சொல்ல முடியாத அவலம் மாதிரி, அவர்கள் வாழ்க்கை நடக்கிறது. காரணங்கள் நடைமுறை வாழ்க்கையில் எவ்வளவோ இருக்கின்றன. அவர்களுடைய ஊமைக்காயங்கள் அவர்கள் சொந்தமுகம் மறைக்க வைத்துவிட்டது. (அவர்களில் ஒரு சிலருக்கு சொந்த முகம் மறந்துவிட்டது என்பது வேறு விஷயம்.) இவர்களால் யாரையுமே நம்ப முடிவதில்லை. (உங்களையும்தான்!) எல்லோருமே இவர்களைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். பயன்படுத்துகிறார்கள். அமெரிக்கா போனாலும் பூணூல் கல்யாணம் நடத்தத் தவறாத பார்ப்பனர்களின் நடுவில் சொந்த நாட்டில் அப்பன் பேர் மறைத்து, முகவரி மாற்றி, அகதிகளாய் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். ஏன்? இவர்களை தலித்துகள் இல்லை என்று சொல்லிவிட முடியுமா? வஞ்சிக்கப்படுவது தெரியாமல் வாழும் தலித்துகளைவிட - வஞ்சிக்கப்படுவது தெரிந்தே வாழும் இவர்களின் வலியின் வேதனை பயங்கரமானது. தலித்திலும் பணக்காரன் உண்டு; படித்தவன் உண்டு. ஆனாலும் அவர்கள் தலித்துகள். ஏனென்றால் 'தலித்' என்கிற ஒரே கர்மபலனுக்காக காயப்படுத்தப்படுகின்றார்கள். இவர்களின் காயங்கள் ஊமைக் காயங்கள்.

இரா. நடராசனின் கடிதமும், தலித்துகளைப்பற்றிய உங்கள் கேள்விகளும், 'ஒருவர்கூடத் தொடவில்லையே' என்ற உங்கள் திகைப்புந்தான் என் மௌனத்தை இந்த நடுநிசியில் உடைத்தது. எழுதிய கடிதங்களைவிட எழுதாத கடிதங்கள் இதைப்போல் எத்தனையோ இருக்கும்.

உங்களின் சைவ உணவுப் பழக்கமுள்ள சிறுவனின் தேவையை நான் விமர்சிக்க விரும்பவில்லை. என்ன செய்வது? நீங்களே 'கவுச்சி சாப்பிடாத சிறுவனைக்' கேட்டிருக்கலாம்; தோன்றவில்லை, பழகவில்லை என்கிறீர்கள். ஏன்? அடிப்படைக் காரணம் நாம் பழகிவிட்ட சில பழக்க வழக்கங்கள்.

'சைவம் தலித்திற்குத் தீண்டத் தகாததா? மேல் சாதிக்கு கவுச்சி ஆசை வரவே கூடாதா?' என்றெல்லாம் சொல்வது வாதத்

படிப்பகம்

www.padippakam.com



திற்கு எடுபடும். நடைமுறையில் உங்கள் வார்த்தைகளில் சொல்வதானால், "வாழ்க்கையின் எல்லாத் தடங்களிலும் வைதிகத்தின் சுவடுகள் பதிந்துள்ளன. எல்லாத் தளங்களிலும் அதன் படிமங்கள் வளர்ந்துள்ளன." கவிதாசரண் மட்டும் எப்படி அதற்கு விதிவிலக்காக முடியும்?

**புதிய மாதவி, பம்பாய்.**

● சைவம் உணவுப் பழக்கம்தான். அதன் பொருள் தமிழகத்தில் எவ்வாறு இருக்கிறதென்பதே நாம் விமர்சனத்திற்கு உட்படுத்தும் பகுதி. ஷாவையும் சைவத்தையும் வேண்டுமானால் இணைக்கலாம். ஷாவையும் தமிழகத்தையும் ஒருபோதும் இணைத்துப் பார்க்க முடியாது.

தமிழகத்தைப் பொருத்த வரையில் கவுச்சி உண்பது கீழான ஒன்றாய் மேல்தட்டு பார்ப்பன வர்க்கம் சாயம் பூசி வந்திருக்கிறது. சைவத்தைப் பின்பற்றும் மேல் சாதிகளுக்கும் இது பொருந்தும். கிண்ணம் அனுப்பி மாட்டுக்கறி வாங்கித் தின்றுவிட்டு குறை காணும்போது 'மாட்டுக்கறி திங்கிற பசங்க' என்று வசவாக மாறுவதைக் கரிகாலனின் கவிதையில் காணலாம்.

விமர்சிக்கும் பழக்கம் சுகத்திற்காக இயங்குவதாகக் கொண்டாலும் பரவாயில்லை. மனிதனது எந்தத் தேடலும் சுகத்திற்கானவைதான்.

**மு. சிவகுருநாதன், அண்ணாபேட்டை.**

● சிறந்த மடல் 'தலித்துகளின்' காலம். இன்றைக்கு தலித்தியம் பற்றி திருச்சபையின் திருத்தூதர்களும், புதிது புதிதாய் புறப்பட்டுள்ள 'இலக்கிய ஆண்டைகளும்' ரொம்பத்தான் அலட்டுகிறார்கள். அதன் இயல்பை மழுங்கடித்து புகழை வேட்டையாடத் துடிக்கிறார்கள். அவர்களுக்கு 'சூடு' தருவதாய் உள்ளது. 'மெல்ல உடையும் மௌனம்' தலையங்கம் மிகவும் விரிவாகவே வாழ்வை அலசுகிறது. பார்ப்பனியத்தின் அவலத்தை உணர்த்தும் இரு சிறுகதைகள் மிகவும் மனிதத்தன்மையோடு படைக்கப்பட்டுள்ளன. பலரின் கவிதைகள், கி. ரா. பற்றிய ராஜ்கௌதமன் கட்டுரை இலக்கிய ஆண்டைகளின் மௌனத்தைக் கேள்விக்குள்ளாக்குகின்றன. தலையங்கத்தில் தாங்கள் சொல்லியவாறு 'மௌனங்கள் உடைபடும் நேரம்' இது. உயர்சாதிப் பெண் உழைப்புச் சாதி ஆண்களைக் கற்பழித்துவரும் நிகழ்வுகள் இனி கதைகளாய், கட்டுரைகளாய், கவிதைகளாய் வெளிவரும். திராவிட இயக்கத்தால் பொருள் குவித்தவர்கள் எங்கோ போய்விட்டார்கள்.

விச்வநாதனின் கூற்று ஆர்.எஸ்.எஸ்., வி. ஹெச். பி. போன்ற மதவெறி ஸ்தாபனங்களில் பிராமணர் அல்லாதோர் அதிகம். சரி. தலைமைப் பீடம் யார் கையில் என்பதே கேள்வி.

**பட்டி. செங்குட்டுவன், திருமுதுகுன்றம்.**

படிப்பகம்

www.padippakam.com



## கடிதங்கள்

● இரா. நடராசனின் முகத்தில் அடித்தாற்போன்ற கடிதத்தின் மூலம் சில புரிதல்கள் ஏற்படுகின்றன. ஆனால், உடல் ரீதியில் பார்ப்பனர்களைவிட சூத்திரர்களும் பஞ்சமர்களும் வலுவானவர்கள் என்ற காரணத்தினால்தான் அகிம்சா போராட்டம் வலியுறுத்தப் பட்டது என்பது அவ்வளவு தூரம் சரியாயிருக்கும் என்று விளங்க வில்லை. இதையே திருப்பிச் சொன்னால், உடல் ரீதியான பலப் பரீட்சைதான் சரியானது என இவர் நினைக்கிறார் என்று கொள்ளலாமா? நடராசன் சொல்லக் கூடும்தான். 'நான் ஆரியன்; ஆளப்பிறந்தவன். நீட்ஷேக்கு ஸ்பெல்லிங் தெரியுமாடா உனக்கு?' என்று கேட்கும் சுஜாதாக்கள் ஒரு புறம். 'ஒண்டிக்கு ஒண்டி' கூப்பிடும் இவர் போன்றவர்கள் மறுபுறம்! என்றாலும், கடிதத்தின் கடைசி இரண்டு பத்திகளும் உண்மை நிலவரத்தைக் கண்கூடாகச் சொல்பவை; பாராட்டப்பட வேண்டியவை.

உயர்சாதி சர்மா ஹர்ஷத் மேத்தா விவகாரத்தில் என்ன செய்தார் என்று எந்த அடிப்படையிலோ கேட்கும் நீங்கள், அதே விஷயத்தில் நாராயணன் என்ன செய்தார் என்று கேட்கவில்லை. (வசதியாக மறந்து விட்டீர்கள்?) இன்னொன்று: தர நிர்ணயம் என்பது எல்லோருடைய அடிமனதிலும் இருப்பது. அதை விலக்க இயலாது.

நீங்கள் என்னதான், எப்படித்தான் சொன்னாலும், போதனை என்பது தேவையில்லைதான். 'போதனை என்பது அதிகார மனதின் செயல்' என்பதை யோசித்துப் பார்க்கலாம்.

**ஜீவராம் சுந்தர், சென்னை-1**

● கடிதங்களுக்கு மிகுந்த முக்கியத்துவம் தருவது 'கவிதாசரணின்' தனிச் சிறப்பாகத் தெரிகிறது. ஆயினும் ஒருசில கடிதங்கள் மேலெழுந்தவாரியான எதிர்வினையின் வெளிப்பாடாக உள்ளன. உதாரணத்திற்குப் பத்தாவது பக்கத்தில் பெயரில்லாமல் அச்சாகியுள்ள கடிதத்தைச் சொல்லலாம். 'ராஜ்கௌதமனின் கி.ரா. தெளிவுரை காலவிரயம். அவ்வளவே' என்று வெகு சுலபமாக ஒற்றைவரியில் ஒரு முயற்சியைத் தூக்கிஎறிய முடிகிறது. கால விரயம் பற்றிக் கவலைப்படும் இவர், ராஜ்கௌதமனின் கட்டுரையைத் 'தெளிவுரை' என்று எழுதுவதிலிருந்து இவருக்கு இக் கட்டுரையை வாசித்ததால் எவ்வளவு காலவிரயம் ஏற்பட்டிருக்கும் என்பது புரிகிறது! இரா. நடராசனின் இது 'தலித்துக்களின் காலம்' என்ற உணர்ச்சி பூர்வமான அறிவு சான்ற கட்டுரை / கடிதம் குறிப்பிடத் தக்கது. மொண்ணைத் தனமும் ஆங்காரமும் கொண்டு தலித்துக்கு எதிராக வீசப்படும் அருவெறுக்கத்தக்க கேள்விகளுக்கு மிக எளிதாக ஆனால் வலுவாகப் பதில்களை எழுதியிருக்கிறார்.

**ராஜ்கௌதமன், பாண்டிச்சேரி.**

● சுத்தமும் செம்மையுமாய் இருந்தது சென்ற இதழின் (10, 11 / 94) தலையங்கம். வெள்ளைத்தாள் வீணடிக்கப்படுவது

படிப்பகம்

www.padippakam.com



அற்பமாயிருந்தாலும், நோக்கம் சம்பூரணமாய் இருக்கிறது; இருக்கும். சேறில்லாமல் நாணல் ஓங்கி வளருமா?

தி. க. சி. யின் கடிதமும் அதனடியில் உம் குறிப்பும் படிக்கச் சந்தோஷமாயிருந்தது. பொத்தாம் பொதுவாக, கம்யூனிஸ்டுகளில் சிலர் வாய்ச் சாலகர்களோ (அ) நீதிமான்களோ அல்ல என்னும் அவரின் கருத்து GEM.

இதழுக்கு அகவை நான்கா? இப்பொழுதுதான் பிறந்த மாதிரியிருக்கிறது; வருங்காலத்தில் இதழ் முக்கிய இலக்கிய சரித்திரமாகும். இஃது சத்தியம்.

இதழில் எனக்கு இரு ஏமாற்றங்கள், —தனிப்பட்ட முறையில் தான். பரிசு பெற்ற கட்டுரை (பா. ரா.), கடிதத்தில் என் பெயர் இரண்டும் இடம் பெறவில்லை. ஏனோ?

ஏகாசரஸ், சாயிநாதபுரம்,

**கீழ் வரும் கடிதம் செப்டம்பர் '94 இதழ் பற்றிய பரிசு பெரும் சிறப்பு விமர்சனம். கவிஞர் பாரதிராமன் வெளிப்பாடு. அடிக்குறிப்பு இதழாசிரியருடையது. விமர்சிக்கும் உரிமை மதிக்கப்படுகிறது.**

## பாரதிராமன் விமர்சிக்கிறார்:

● தி. க. சி. யின் இரண்டு கடிதங்களுக்கான தங்கள் எதிரொலி சற்று உரத்தே இருக்கிறது.

ஆதிக்க மனோபாவம் வைதிகத்தின் ஊற்றுக்கண் என்றும், மதம், இனம், மொழி, அரசியல், கலை, இலக்கியம், ஆசாரம், மரபு, பாரம்பரியம், பண்பாடு இவையெல்லாம் வைதிகம் அணிந்து கொள்ளும் சட்டைகள் என்றும் உங்களுக்குப் புரிவதாகக் கூறுகிறீர்கள். மேலும் சட்டைகள் மாறும், சித்தாந்த சட்டைகள் உள்பட என்கிறீர்கள். அதே சமயம் தி. க. சி. யின் கொள்கைப் பிடிப்பையும் மனித நேயத்தையும், புரட்சிகர சமுதாயத்தின்பாலுள்ள வேட்கையையும், காலத்திற்கு ஏற்றவாறு-சமுதாயச் சூழலுக்கு ஏற்றவாறு அது வளர்க்கப்பட வேண்டும், செழுமைப்படுத்தப் பெற வேண்டும் என்பதே தன் கொள்கை என்று கூறுவதையும் வைதிகம் என்று வரையறுக்கிறீர்கள்.[1]

கொள்கைப்பிடிப்புள்ள எவனும், தன் கொள்கையை மற்றவர்களிடம் பரப்ப விரும்பும் ஒருவன் தன்னை மறுக்கும் சமூகத்தின் மத்தியில் வாழ்ந்து கொண்டுதான் தன் பணியைச் செய்ய வேண்டி இருக்கிறது. எனவே, ஒரு இந்தியக் கம்யூனிஸ்ட் 'ஹிந்து', டி. வி. எஸ். பங்களாக்களில் தங்குவது ஜாதிப்ப்ரஷ்டம் செய்யப்பட வேண்டிய குற்றம் அல்ல.[2] காந்தியடிகள்கூட ஆகாகான் அரண்

1 தவறான கணிப்பு. தலையங்கம் வரையறுக்கவில்லை,

2 எனில் பொள்ளாச்சி மகாலிங்கம் போன்ற முதலாளிகள் சமூகப் பிரஷ்

படிப்பகம்

www.padippakam.com



மனைகளிலும் பிர்லா பங்களாக்களிலும் தங்கி, தன் பிரசாரங்களை நடத்தியவர்தான். அது இழிவாகப் பேசப்பட்டதில்லை

சமுதாயச் சூழலுக்கு ஏற்றவாறு மார்க்சியம், லெனினியம் வளர்க்கப்பட வேண்டும் என்ற கருத்திலேயே இலக்கிய வாழ்விலும் தாமரை, செம்மலர் மட்டுமின்றி முன்றில், கவிதாசரன் மற்றும் பல ஏடுகளுடன் தி. க. சி. தனது உறவை விரிவு படுத்திக் கொள்வதாகக் கூறும் தன்னிலை விளக்கத்தை நீங்கள் ஏன் சந்தேகிக்கிறீர்கள்? கம்யூனிசம் ஒரு வளரும் விஞ்ஞானம் என்று கூறுபவரை கம்யூனிஸ்டுகள் தவறுகளுக்கு அப்பாற்பட்டவர்கள் என்று நம்புபவராய் நீங்கள் ஏன் நினைக்க வேண்டும்? வளரும் விஞ்ஞானமே தவறுகளைக் கண்டுபிடித்து, அவற்றைத் திருத்தித் தாண்டிச் செல்வதுதானே? இது தி. க. சி.க்கும் ஒப்புதல்தானே?

Racism, Facism, Nazism இவை மூன்றின் ரசாயணக் கலவைதான் இந்தியாவில் பிராமணர்களோடு சேர்ந்தும் தனியாகவும்கூட பிள்ளைமார்களும் வெள்ளாளரும் கடைபிடிக்கும் பார்ப்பனீயம் என்கிறீர்கள். இதை நீங்கள் சரியாக அடையாளம் காண உதவிய நிகழ்ச்சி பாபர் மசூதி இடிப்பு நிகழ்ச்சி. நல்லது. பம்பாய் குண்டு வெடிப்பு நிகழ்ச்சி உங்களுக்குள் ஒரு பாதிப்பையும் ஏற்படுத்தவில்லையா? பாபர் மசூதி இடிப்பின் பின்னணியில் இந்து மத வாதமும் பார்ப்பனீயமும் இருந்தது என்றால், பம்பாய் குண்டு வெடிப்புகளுக்குப்பின் இருந்ததாக நிரூபிக்கப்பட்டுள்ள முஸ்லீம் வகுப்புவாதம் ஏன் உங்களைக் காயப்படுத்தவில்லை? ஆனால் உங்களுக்கோ ஒன்று விழிப்பை ஏற்படுத்துவதாக ஆகிறது; மற்றது கண்களை மூடித் தூங்கச் செய்கிறது.[3]

தமிழர்களான இந்துக்களும் சமஸ்கிருதமும் சேர்ந்திருப்பது உங்களுக்கு இடிக்கிறது. தமிழர்களான இஸ்லாமியர்களும் கிறித்துவர்களும் அரபியுடனும் லத்தின் ஆங்கிலத்துடனும் சேர்ந்திருப்பது இடிக்கவில்லை. வெளிநாட்டுப் பணத்தின் செழிப்பை பிரதிபலிக்கும் அரபிக் கல்லூரிகளின் மினார்களும் கிறித்துவக் கலாசாலைகளின் கோபுரங்களும் உங்கள் கண்களில் படவில்லை. ஆனால் சமஸ்கிருத திண்ணைப் பள்ளிக்கூடங்கள் கண்களை உறுத்துகின்றன.[4]

சமஸ்கிருத மந்திரங்களை பொருள் அறியாமல் கொள்ளும் தமிழ் பிராமணர்கள் மொழி அகதிகள் என்றால் அரபியையும்

---

டம் செய்யப்பட வேண்டியவர்களா என்பதே கட்டுரையின் கேள்வி, காந்தியடிகள் செய்ததையெல்லாம் ராமன் சொற்படி இருக்கலாம். விமர்சனத்திற்கப்பாற்பட்டதல்ல.

3 தலையங்கம் பதில் சொல்கிறது.

4 விமர்சகரின் பார்வைத் தளம் பளிச்செனத் தெரிகிறது. அரபி படித்த எந்த இஸ்லாமியனும் முல்லாவாகலாம். இலத்தீன் அறிந்த ஒரு சுரங்கத் தொழிலாளிகூட போப் ஆகலாம். சமஸ்கிருதம் தெரிந்தால்?...

படிப்பகம்

www.padippakam.com



லத்தினையும் பொருள் விளங்காமல் கொள்ளும் இஸ்லாமிய, கிறித் துவத் தமிழர்களை என்னவென்று அழைப்பது? இன்னும் தமிழ் நாட்டில் தங்கள் மொழியின் லிபியையே அறியாமல் தெலுங்கை யும் மராட்டியையும் உருதுவையும் வீட்டில் பேசிக்கொண்டு, தமிழ் நாட்டில் பிறந்து வளர்ந்து, தமிழில் இலக்கியமும் செய்து, தமிழ் நாட்டிலேயே முடங்கி ஜீவனம் செய்துவரும் 'தமிழர்களை' என்ன வென்று அழைப்பது? அவர்களை பேசு மொழியை மாற்றிக் கொள்ளக் கட்டாயம் செய்வதா? அல்லது தமிழகத்தைவிட்டு வெளி யேற்றுவதா?[5]

இலக்கியத்தடத்தில் பிராமண வைதிகத்தை உடைத்துக்கொண்டு வெளியே வர ஒரு வழிகாட்டிய புதுமைப்பித்தனைப் பின்பற்றுகிற வர்தான் தி. க. சி. பு. பி. யின் படைப்புகளில் பீறிடும் யதார்த்த வாதம் இன்றைக்கும் பொருந்தும் என்பவர்தான் தி. க. சி. பு. பி. ஒருமுன்னோடி என்று அடித்துச் சொல்பவர்தான். அதற்காக பு. பி. யின் 'ஹீரோ வொர்ஷிப்'பில் இறங்கிவிடக் கூடாது என்ப வரும் கூட. (25 - 3 - 93 பு. பி. பற்றிய 'விருட்சம்' நடத்திய இலக் கியக் கூட்டத்தில் தி. க. சி. கூறிய கருத்துகள் இவை.) இதை சுற்றுச் சுவர் வைத்து உள்ளரங்காக்கி விட்டதாக நீங்கள் கருது வது விந்தை.[6]

பிராமண வைதிகத்தை வெறுத்து சைவ வைதிகத்தை அடை யாளம் கண்டுகொண்டவர் நீங்கள்.[7] அதை மற்றவர்களுக்கும் தெரியும்படியாக அடையாளம் காட்டினால் வைதிகத்தின் ஆதிக் கத்தை ஒழிக்க விரும்பும் பலர் தம்மிடம் சைவ வைதிகம் ஒரு வேளை குடி கொண்டிருந்தால் அதையும் ஒழிக்கக் கற்று கொள் ளலாமே! வைதிக மலங்களில் சைவ மலமென்ன, பிராமண மல மென்ன, வெள்ளாளர் - பிள்ளைமார் மலங்களென்ன. பெரும்பா லான தமிழ்நாட்டு நகரங்களில் அவைகளைக் கூட்டி வாரப் போகி றவனும் சுமந்து அகற்றப் போகிறவனும் தெலுங்கு பேசும் 'தலித்' தாக இருக்கும்வரை இதில் வெட்கப்பட வேண்டியது வைதிகம் அல்ல. சாதனையாளர்களையும் அவர்களுக்குத் துணையாக இருப்பவர்களையும் ஒரு 'சாடிஸ' மனப்பான்மையுடன் சாட

---

5 பார்ப்பனனாய்ப் பிறந்த ஒரு காரணத்துக்காகவே, தான் பேசி, புழங்கி, வாழ்ந்து, மகிழ்ந்திருக்கும் தமிழை விட சமஸ்கிருதம்தான் உயர்ந்த மொழி என்று சொல்லித் திரிகிற- பெரும்பான்மையாக அம்மொழி பற்றி ஒரு இழவும் தெரியாத பிராமணனுக்குத்தான் 'மொழி அகதி' என்னும் பட்டம். மற்ற தமிழர்கள் இப்படியா?

6 இவ்விந்தை பற்றி 'வெள்ளாளர் தமிழ்' என்று ஒரு புதுப் பிரிவைக் கண்டுபிடித்த தமிழவனிடம்தான் கேட்க வேண்டும்.

7 "நான் இந்துவாயிருக்கச் சகியேன். ஏனெனில் நான் சுத்த சைவன். நான் பிராமண வைதிகத்தை வெறுக்கிறேன்; ஏனெனில் என் சைவத் திற்கான வைதிகத்தை அடையாளம் கண்டுகொண்டேன்— எனில் இது என் மீட்சியா, வீழ்ச்சியா?"— என்பது என் கட்டுரையின் கேள்வி.

விமர்சகர் சரி பார்க்காதது யாது காரணமாகவாம்?

படிப்பகம்

www.padippakam.com



விரும்பும் அநாகரிகமே! "என்னிலும் தாழ்த்தப்பட்டவன் மேல் எனக்கு இரக்கமில்லை எனில் என்னைவிட உசத்தியாகப் பேசப் படுகிறவனோடு சமத்துவம் கோர எனக்கென்ன தகுதி இருக் கிறது" என்று கூறிக்கொண்டே உசத்தியாகப் பேசப்படுபவனை தாழ்த்தப்பட்டவனிலும் தாழ்த்தப்பட்டவனாக ஆக்கிப் பார்க்கும் அநாகரிகமே![8]

மூன்று பிரவசன வாக்கியங்களில் எதில் சங்கமிப்பது பற்றிய தங்கள் கருத்து கூட இன்றைய தமிழ்ச் சமுதாயத்தால் ஏற்கப் படுமோ என்பதும் சந்தேகமே. திருக்குறளின் பெண்கள் பற்றிய சிந்தனைகளையும் மற்றும் கடவுளர், வானவர், அந்தணர், புலால் மறுத்தல் போன்ற குண நலங்களாகக் காட்டப்படும் கருத்துக்க ளையும் வேறு பல வெளிப்பாடுகளையும் இன்றைய சமூகம் அப் படியே முழுதுமாக ஏற்கத் தயாராக இல்லை.[9] ஆடம்ஸ்மித், கார்ல்மார்க்ஸ், மாசேதுங், காந்தி போன்றோரின் பொருளாதார வேதங்களையும் தங்களுக்கான பரிட்சையில் தேர்ந்தாலே ஏற்கப் படக் கூடிய நிலையில்தான் சமுதாயம் அவற்றை இன்று வைத் துள்ளது. உலகம், அளவில் சுருங்கி எண்ணத்தில் விரியத் தொடங் கியிருக்கிறது.

சேரிடம் பற்றி:

பரீக்ஷா ஞாநி: மோசமான விஷயங்களும் சரியான விஷயங்க ளும் இன்றைய தனி மனிதனிடம் கலந்து காணப்படுவதால் முடி வுக்கு வரமுடியாத சிக்கல்களில் மாட்டியிருந்தாலும் முரண்களைப் பொருட்படுத்தாமல் வாழ்க்கை வாழலாம். அதன் அடையாளம் தான் இந்தக் கூட்டம் என்று கூறுகிற இவரால் சுஜாதா, ஞா. கூ. பற்றிய நேரடியான கருத்துகளோ, அல்லது ஜெயந்தனின் கேள்வி பற்றிய கருத்தோ தெரிவிக்கப்படவில்லை.

எஸ். பொன்னுத்துரை: பலருக்குப் பிடிக்காது என்று தெரிந்தும் ஈழத் தமிழ் இலக்கியவாதிகள் சிலரைப்பற்றி கருத்துகளை தைரி யமாகக் கூறும் இவர் இங்கே ஏன் தயங்கினார் என்பது புரிய வில்லை. ஏதாவது ஒரு கருத்தைப் பதிலாகவோ அல்லது கேள் வியைப்பற்றிய கருத்தையோ கூட சொல்லியிருந்தால் வரவேற்கக் கூடியதாக இருந்திருக்கும். சமரசமாக நழுவியிருக்க வேண்டாம்.

---

8 ஆக, விமர்சகர் அழுத்தமாய்ச் சொல்லிவிட்டார்: பிராமணனிடம் குறைகாண்பது சாடிச மனப்பான்மை; அநாகரிகம். (நரகம்தான் நமக்கு!) பிராமணர்கள் அப்பழுக்கற்றவர்கள். மனித வேற்றுமையை வேரறுத்து, சமத்துவப்படுத்திய சாதனையாளர்கள். உலகில் பாரதம் போலொரு புண்ணிய பூமி உண்டா? லோக க்ஷேமத்துக்கென்றே பிரம்மன் முகத்தில் பிறந்த பிராமணர்கள் வாழும் பூமியாயிற்றே! அவர்களை விமர்சிப்பது அநாகரிகம்தானல்லவா!

9 குறிப்பாக ராஜம் கிருஷ்ணன் ஏற்கத் தயாரில்லை. 20 நூற்றாண்டு களுக்கு முற்பட்ட கருத்துகளை 21ஆம் நூற்றாண்டுக் கருத்தோடு ஒவ் வாமை பேசத் துடிக்கும் ராஜம் கிருஷ்ணன் பரம்பரை- வேதம், கீதை போல்வன கட்டவிழ்க்கும் போக்கிரித்தனங்கள் பற்றி வாய்திறப்பதில்லை.

படிப்பகம்

www.padippakam.com



'வெளி' ரெங்கராஜன்: ஞா. கூ. ஒரு காலத்தில் கலகக்கொடி தூக்கியவராகவும் இப்போது கூர் மழுங்கிப்போய் Establishment இன் அடியாளான சுஜாதாவுக்குத் தலையாட்டுபவராகவும் தெரிகிறார். இவருக்கு இதில் சோகமிருந்தாலும் ஆச்சரியம் ஒன்றுமில்லை என்கிறார். கூர் மழுங்கிப்போனவருக்கா இப்போது விழா? Establishmentஐச் சாராத தனிப்பட்ட பிரமுகர்களும் ஏன் பாராட்டில் கலந்து கொள்கிறார்கள், என்று நம்மைக் கேட்க வைப்பதாக அவரது பதில்கள் இருக்கின்றன.

சா. கந்தசாமி: ஒரு இலக்கியவாதி (Mass Mediaவில் இருப்பவராக இருந்தாலும்) சிறுபான்மையினரின் கருத்துக்களை எடுத்துக் கிறதுக்குச் செய்யும் முயற்சியை நியாயப்படுத்தியுள்ளது அவரது சரியான எண்ணத்தைப் பிரதிபலிக்கிறது.

பெரியவர் சிட்டி: சுஜாதாவின் படைப்புகள் பற்றி சிலாகித்தும் கண்டித்து வசை பாடியும் புனையப்படும் கதைகளை அவர் படிப்பதில்லை என்ற பொருளிலேயே அவரது பதிலை எடுத்துக்கொள்ள வேண்டும்.

ந. முத்துசாமி: இந்த சர்ச்சையையே தவிர்க்கும் பதிலாக உள்ளது இவருடையது. ஞா. கூ. வைப் பிடித்திருக்கிறது என்பதைத் தவிர வேறெதுவும் பேச விரும்பாதவர்.

ஞானக்கூத்தன்: எல்லோரையும் நண்பராகப் பாவிக்கும் நல்லவராகவே அவரது பதில் மூலம் வெளிப்படுகிறார்.

அழகியசிங்கர்: அவரது கருத்துக்கள் எந்தத் திசையில் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதை அறிந்தும்கூட அவர் வாயிலிருந்து தனக்கொத்த கருத்துகளையே வரவழைக்க வேண்டுமென கேள்வி கேட்டவர் பாடுபட்டிருப்பது தெரிகிறது. பேட்டிகள் என்பவை 'ப்ராசிக்யூஷன்' விசாரணைகளாக மாறிவிட்டதை கேள்விகள் காட்டுகின்றன. அழகியசிங்கர் பாவம், சமாளித்துவிட்டார்!

உங்களுடைய 'மேலும் சில விமர்சனங்கள்' பற்றி: காரை உதிர்ந்த கட்டிடம், போதாத இருக்கைகள், கழன்று விழுந்த படம், மாலன் சிட்டியை வரவேற்றது, பாலகுமாரன் பின்னால் அமர்ந்து சிகரெட் பற்றவைத்துக் கொண்டது, சுரத்குமாருக்கு ஸ்தோத்திரம் சொன்னது போன்றவைகள் உங்களுக்கு முக்கியமாகப்பட்டிருக்கின்றன. அன்றாட வாழ்க்கையின் அவசியங்களுக்கிடையில் ஓய்வு நேரப் பணியாக ஓய்வையும் இழந்து இலக்கிய சேவை செய்துவரும் அழகியசிங்கரை நிறைய பணம் செலவழித்து வெளியீட்டு விழா நடத்தும் பெரிய நிறுவனங்களோடு ஒப்பிட்டுப் பார்ப்பது எவ்விதம் பொருந்தும்? சரிந்த படத்தைச் சரிசெய்வதற்கு உங்களுக்கு தூரம் ஒரு தடையாக இருந்திருக்கலாம். ஆனால் பாலகுமாரனை ஹாலுக்கு வெளியே சென்று புகை பிடிக்கும்படி கேட்டுக் கொண்டிருந்திருக்கலாமே![10]

[10] **கடைசியில் எனக்குத்தானா அந்த சூத்திர வேலை? பாலகுமாரனை நான் கேட்டு, "இந்த சூத்திரன் கலவரம் பண்ண வந்துட்டன்" என்று**

படிப்பகம்

www.padippakam.com



உயரமாகத் தெரிந்த பார்வையாளர்களுக்கு இந்த ஒத்தாசை யாவது தாங்கள் செய்திருக்கலாமே?

'விருட்சம்' நடத்திய இந்த ஒரு கூட்டத்துக்கு வந்துவிட்டுத் தாங்கள் பலவிதமான முடிவுகளுக்கு அவசரப்பட்டு வந்திருக்கிறீர்கள். இங்கு கூட கூட்டம் துவங்குவதற்குமுன் வந்திருந்தீர்களானால் நாற்காலிகளைப் பிரித்துப்போட்டது யார், சன்னல்களைத் திறந்தது யார் என்ற விவரங்கள் உங்களுக்குத் தெரிந்திருக்கும். இதற்கு முந்தைய கூட்டங்களுக்கு வந்திருந்தாலும் பார்வையாளர்களும் பேச்சாளர்களும் கௌரவம் பார்க்காமல் இலக்கிய விசாரமே குறியாக, ஒரு இசைவான சூழலில் விழாக்களில் பங்கு பெற்றது போன்றவற்றை காணும் வாய்ப்புகள் உங்களுக்குக் கிடைத்திருக்கும். அஃதின்றி இத்தகைய மலின குற்றச்சாட்டுகளை அடுக்க இறங்குவது சாந்தாதத் கூறுவதை உறுதிப்படுத்துவதாகவே இருக்கிறது.

ஜெயந்தன் சுஜாதாவுக்கும் ஞானக்கூத்தனுக்குமிடையே இட்டு நிரப்ப முடியாத பெரும் பள்ளத்தை ஏன் எதிர்பார்த்தார் என்பது எனக்குக்கூட ஆச்சரியமாக உள்ளது. ஆனால் நீங்கள் கற்பிக்கும் காரணங்களுக்காக அல்ல. ஞா. கூ. கூறியுள்ளபடி சுஜாதா கவிதைகளை ரசித்து ஊக்கம் காட்டுபவர்தான். தான் கலந்து கொள்ளும் இலக்கியக் கூட்டங்களிலெல்லாம் மனுஷ்யபுத்திரன், ரவிசுப்பிரமண்யன், ஞானதிரவியம், கரிகாலன் ஆகியோரது கவிதைகளை மேற்கோள் காண்பித்து மகிழ்பவர். சங்க காலப் பாடல்களுக்கும் இன்றைய கவிதைகளுக்குமான உறவை அறிந்து வியப்பவர். நிமோஷினி, ஞானதிரவியம் ஆகியோரின் படைப்புகள் புத்தகங்களாக வெளியிடப்பட பெரிதும் காரணமாக இருந்தவர். புதுக்கவிதையை 'பாபுலர்' பத்திரிகைக்கு எடுத்துப்போய் பரவச் செய்ய முயல்பவர். இந்த உண்மையைப் பார்க்க மறுக்கும் ஜெயந்தனைப் போலவே தாங்களும் மூன்றாமவர்கள் கூறுவதைக் கேட்டுப் போலும் சுஜாதா பங்கு பெறும் 'கணையாழி' கவிதைக் கூட்டங்களைப்பற்றி உண்மைக்குப் புறம்பான சில கருத்துகளை அள்ளி வீசுகிறீர்கள். அக்கூட்டங்களில் தன் பங்கு பற்றி அவரே தெளிவுபடுத்தியிருக்கிறார். மேலும் கூட்டத்தினரின் சில சுட்டிக்காட்டல்களை ஏற்று தன் போக்கையும் சில விஷயங்களில் மாற்றிக்கொண்டுள்ளதும் தெரிகிறது.

சுஜாதா கவிதை விஷயங்களில் காட்டும் அக்கறையே ஞா.கூ.வும் அவரும் ஒரே நேர்க்கோட்டில் வரக் காரணமாயிருந்திருக்கிறது என்பது என் கருத்து. அதே காரணத்தால்தான் இன்று இன்குலாப்பும் சுஜாதாவும் இணையும் வாய்ப்பும் நேர்ந்திருக்கிறது. (குமுதம் - ஏர் இந்தியா இலக்கியப்போட்டி நடுவர் குழு அளிக்கும் வாய்ப்பு) நாளைக்கு அக்கினிபுத்திரனையும் கவிதாசரணையும் கூட கவிதை ஈடுபாடு என்ற நேர்க்கோடு சுஜாதாவுடன் இணைத்

---

முத்திரை குத்தி... பிராமணர்கள் தங்கள் பூணலை நீவிவிட்டுக்கொள்ள ஒரு வாய்ப்பு. எனக்கது தேவையா?

படிப்பகம்

www.padippakam.com



தால் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஜெயந்தன் மட்டுமே விடுபட்டுப் போகலாம். காரணம் 'மீண்டும் அவர்கள்' விழாப்பேச்சாளர்களிடம் அவர் தொடுத்த கேள்விகளில் தொனிக்கும் காழ்ப்புணர்ச்சி ஏற்படுத்தியுள்ள நிரப்பமுடியாத பெரும் பள்ளம்தான்.

25 வருடங்களாக கவிதை எழுதிவருபவரின் 'சின்சியரிடி'யை சந்தேகிக்காதவரைக்கும் தாங்கள் இறங்கி வந்துள்ளது போற்றற்குரியது. மற்றபடி அவர் 'மேஜர்' கவியா, காளமேகத்தின் வாரிசா என்றெல்லாம் கணக்கெடுக்க வேண்டுமா? 25 வருடங்களாக நிலைத்து கவிதை எழுதிவருவதே ஒரு சிறப்புதானே? காளமேகம் கூட கவிரத்தினம், ஆசுகவி, சிலேடைப்புலி என்ற பட்டங்களை வென்றவர்தான். அவருடைய நேர்வாரிசாகத் தாங்கள் கருதுபவர்க்கு மூலவர்க்குரியதில் கால் பங்கு பெருமையையாவது தாங்கள் அளித்து மகிழலாமல்லவா? ஆனால் சம்பந்தா சம்பந்தமில்லாத விஷயங்களில் இடைச்செருகலாக தேவையற்ற ஒரு சம்பந்தத்தை நுழைத்து சம்பந்தம் இருப்பது போல் எதையாவது யாரையாவது சாடித்தான் தீருவேன் என்ற தீர்மானத்துடன் இருப்பவரிடமிருந்து இதை எப்படி எதிர்ப்பார்க்க முடியும்?

'என்பதாய் இருக்கிறது' என்பதன் விமர்சனத்தில் எங்கே ஞானதிரவியம் அடையாளம் தெரியாமல் போய்விடுவாரோ என்று ஆதங்கப்பட்டிருக்கிறீர்கள். அவரோ நகுலன், சுஜாதா, கவிதாசரண், பட்டுக்கோட்டை பிரபாகர் உள்ளிட்ட பலருக்கு நன்றி தெரிவித்திருக்கிறார். உங்கள் அறிவுரைகளை அவர் ஏற்பார் என்றே நம்புகிறேன். ஏற்காவிட்டாலும் பிறர் தர வருவனவா தீதும் நன்றும்?

மொத்தத்தில் "எந்தக் கொம்பன்களும் தளம் நழுவிய சில தருணங்களில் வும்பன்களாக இருக்க நேர்வதுண்டு" என்ற தங்கள் வார்த்தைகளையே இங்கு ஞாபகப்படுத்த வேண்டியிருக்கிறது.[11]

வாசகர் கடிதங்கள்: இந்தப் பகுதி மிகச் சிறப்பாக மிளிர்கிறது. அவற்றுக்கு நீங்கள் தரும் முக்கியத்துவம் எல்லா பத்திரிகையாளரும் கொள்ளவேண்டிய நல்லதொரு பண்பு.

மகாகவியின் கவிதை புடைத்து நொறுக்கிவிடுபவனைக் கூட தோழனாக்கிக் கொண்டு அவனை வாழ்த்தி வரவேற்கும் பண்பினைப் பேண வேண்டியதை அறிவுறுத்துகிறது. இப்பண்பு கவிதாசரணுக்கு அமைந்திருப்பது மகிழ்ச்சியுடன் தொடரட்டும்.

நீலமணியின் கவிதை திருத்தமாக இருக்கிறது. ஜெகதீஷின் கவிதைகள் நிஜங்களை உணர்த்துகின்றன. ஜீவராம்சுந்தரின் காத்திருப்பும் சுப்ரபாரதிமணியனின் காத்திருப்பும் பயமூட்டும் பிரமாண்டமாகவும் தனிமைப்படுத்தப்பட்ட தவிப்பாகவும் வெளிப்பட்டிருக்கின்றன.

---

11 **இதுதான் குறும்பு; பிராமணக் குறும்பு. என் கையாலேயே என்னுடைய கண்ணைக் குத்துகிறாராம். தேவதாசி ஒழிப்பை வன்மையாக எதிர்த்த சத்தியமூர்த்தி, ராஜாஜியை நான் விமர்சித்த கோபம் இவருக்கு இருக்க வேண்டாமா பின்னே?**

படிப்பகம்

www.padippakam.com



'நெஞ்சு பொறுக்குதில்லையே' வில் எழில்முதல்வன் கடிதம் பற்றிய விஷயத்திலும், அவரது A. K. R. பற்றிய கூற்று விஷயத்திலும் ஜெயகாந்தன் கூறிய சமாதானத்தை ஏற்றுக் கொள்வதே சரியெனப்படுகிறது.

மா. அரங்கநாதனின் கட்டுரைத் தொடர் சீக்கிரமே முடிந்து விட்ட தோற்றம். அவர் தன் கருத்துகளைப் பரிமாறிய விதம் தரமாக இருந்தது. இரண்டு மரபுகளுக்கிடையே சிக்கிக் கொண்டு விடுவதில் கஷ்டங்கள் இருக்கலாமேயொழிய கேவலமொன்றுமில்லை என்று முடித்திருந்த பாங்கு அவரது நடுநிலைப் பார்வைக்குச் சான்றாகத் தெரிகிறது உலகத் தமிழ் மகாநாடுகளுக்கு நமது அரசு ஒதுக்கும் பணத்தை தமிழகம் நீங்கிய பிற மாநிலப் பல்கலைக்கழகங்களிலும் இதர இலக்கிய மேம்பாட்டு மன்றங்களிலும் தமிழ் மற்றும் தமிழர் சரித்திரத்தைப் பரப்புவதில் செலவிட்டால் தமிழின் சிறப்பை வடவர் அறியமுடியும். அவர்களது அறிவும் விரியும்; அகம்பாவமும் அழியும்.

ஜெயந்தனின் தொடர் இப்போதுதான் சில Definitionகளைத் தொட ஆரம்பித்திருக்கிறது. போகப்போகப் பார்க்கலாம்.

ராஜ்கௌதமனின் கி. ரா. வைப்பற்றிய விமர்சனம், எழுதிய வரையில் ராஜ்கௌதமன் சரியான பாதையில்தான் விமர்சனத்தை எடுத்துச் செல்கிறார் என்று படுகிறது.

வல்லிக்கண்ணனின் நினைவுத்தடங்கள் கட்டுரைப் பகுதி படிப்பதையும் எழுதுவதையும் ஊர் சுற்றிப் பார்ப்பதையும்விடச் சிறந்த கல்வி வேறெதுவும் இல்லை என்று உறுதிப்படுத்துகிறது. அதைப் படிப்பதே நமக்கொரு சிறந்த கல்வியாக அமைகிறது.

கதைகள்: களந்தை பீர்முகமதுவின் கதையில் சாச்சியின் கட்சிக்கு தலையாட்டி வந்த சின்னப்பா ஜியாவின் மரணத்துக்குப்பின் தெளிவு பெற்று விஷயஞானம் அடைந்தவராகப் பேசுவது சிறிது உதைக்கிறது. கரிகாலனின் கதை சிறப்பாக விழுந்திருக்கிறது. சுடுகாட்டுக்குப் போறதுக்கு முன் அரை கிலோ ஆட்டுக்கறி சாப்பிட ஆசைப்பட்ட சின்னய்யனுக்கு கோழிக்கறியே 'லக்சுரி'யாக இருக்கிறது. ஆண்டையிடம் பட்டிருந்த அடிமைத்தனத்தில் எலிக்கறியும் செத்த மாட்டுக்கறியும் எப்போதாவது காட - கவுதாரி கறியும் என்றுதான் சின்னய்யனின் உணவுப் பழக்கம் இருக்க முடிந்தது. ஆட்டுக்கறியும் கோழிக்கறியும் கனவாகவே இருந்தன.

பெண்டாட்டி சுகத்தைக்கூட பறித்துக் கொண்டது ஆண்டையிடம் பட்ட அடிமைத்தனம். இதையும்விடப் பெரிய அடிமைத்தனம் இருக்க முடியுமா? இருக்கிறது என்கிறார் கரிகாலன். அதுதான் கைக்கு எட்டிய கோழிக்கறியையே வாய்க்கு எட்டாமல் செய்துவிடுகிறது. ஆம், சின்னய்யனுடைய குடிக்கு அடிமைத்தனம்தான் அது. குடிக்கு அடிமையாவதுதான் எத்தனை கொடியது என்பதை கதை சுட்டுகிறது. கறி பற்றிய கரிகாலனின் வர்ணனை சுத்த சைவர்களை மூக்கைப் பிடித்துக்கொள்ள வைத்தாலும் அதிலுள்ள யதார்த்தம் மூளையை வசீகரிக்கிறது. 'கவுச்சி ஆசை' இதழின் சிறப்பம்சம்!

படிப்பகம்

www.padippakam.com

என்னைத் தமிழ் அன்னை பெற்றாள்,
ஏடெடுத்து வாழ்ந்திருப்பேன்;
இன்னுயிரைத் தோற்ற பின்னே
என் குழியில் பூத்திருப்பேன்.

# கவிதாசரண்

மலர் நான்கு டிசம். '94 & ஜனவரி '95 இதழ் ஒன்று

## கேளுங்கள், பிராமணர்களே!

விதிவிலக்கே இல்லாமல் பிராமணர்கள் எல்லாரும் முன் வைக்கும் கேள்வி: "பாபர் மசூதி இடிப்புக்கு ஆவேசப்பட்டவர்கள் முஸ்லிம்கள் நிகழ்த்தும் அட்டூழியங்களை ஏன் கண்டுகொள்வதில்லை?"

காஷ்மீர் பிரச்சினையும், பஞ்சாப் பிரச்சினையும், வடகிழக்கு மாநிலங்களின் பிரச்சினையும், வெளியார் தலையீடு என்பதையும் மீறி, வேறு சில ஆழப்பரிமாணங்கள் கொண்டவை என்று இப்போதைக்கு ஒதுக்கி வைத்தால், இந்தக் கேள்விக்கு நாம் இன்னொரு துணைக்கேள்வியில் பதில் தேடலாம்.

அதாவது, "முஸ்லிம்களின் அட்டூழியங்கள் பாபர் மசூதி இடிப்பின் பின் விளைவா? அல்லது பாபர் மசூதி இடிப்பு முஸ்லிம் அட்டூழியங்களின் பின்விளைவா?"

கேள்விகள் யாவும் பதில்களுக்காகத்தானா? கேட்கும் மனங்களை இனங்காட்டவுந்தான்.

முன்னாள் பிரதமர் இந்திராகாந்தி படுகொலை செய்யப்பட்ட போது மூன்று நாட்கள் வீட்டோடு முடங்கும்படியாயிற்று. செய்தித்தாள்களுக்கும் பஞ்சம். ரேடியோ, டி. வி. தான் துணை. வெகு சாமானியர்கள்கூட என்னிலும் சாமார்த்தியசாலிகளாக B. B. C. கேட்டு, நிலவரம் புரிந்திருந்தார்கள். எனக்கந்த யோசனையும் சாமார்த்தியமும் இல்லை. மூன்று நாட்களும் 'இந்தியா தன் தலைவியைப் பறிகொடுத்த அதிர்ச்சியில் உறைந்து போய்விட்டதா? மத மாச்சரியங்களையெல்லாம் இந்திராவோடே எரித்துவிட்டுப் புதிய நாடாகப் பூத்துவிட்டதா?' என்று சோகத்தை மீறிய மனக் கிளர்ச்சியில் சிக்கிக் கிடந்தேன். பிறகுதான் தெரிந்தது—'அன்று இரவு நாலாயிரத்துக்கும் மேற்பட்ட சீக்கிய மக்கள் கண்டதுண்டமாக வெட்டிக் கொல்லப்பட்டார்கள். அவர்கள் உடைமைகள்

படிப்பகம்

www.padippakam.com



கொள்ளையடிக்கப்பட்டன; கொளுத்தப்பட்டன' என்பது. அது பற்றித்தான் 'ஒரு பெரிய ஆலமரம் சாயும்போது பூமி அதிரத் தான் செய்யும்,' என்று ராஜீவ் காந்தி புதுக்கவிதை வாசித்ததுகூட.

அந்த ரத்தக் களரியையும் சர்வ நாசத்தையும் விளைவித்த வர்கள் இன்னமும் டில்லித் தெருக்களில் உல்லாசமாகவே வலம் வந்துகொண்டிருக்கிறார்கள். 'அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்' என்று உணர்ச்சியுள்ளவர்கள் இன்னும் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள்

பாபர் மசூதி இடிக்கப்பட்ட பின் அதற்கும் ஒரு பின்விளைவு இருக்கும் என்பது எல்லாரும் திகிலோடு எதிர்பார்த்ததுதான். 'பல்லுக்குப் பல்; கண்ணுக்குக் கண்' என்னும் காட்டுமிராண்டித் தனம் இந்துக்களுக்கும் சமூக விரோதிகளுக்கும் மட்டும்தானா? முஸ்லிம்களுக்குக் கிடையாதா? அதுதான் பம்பாய், கல்கத்தா குண்டு வெடிப்புச் சம்பவங்களாய் அரங்கேறியது. பாகிஸ்தான் உளவமைப்பின் துல்லியமான திட்டமிடலோடு, கையில் பணமும் நெஞ்சில் அடங்காத ஆத்திரமும் கொண்டவர்கள் அரங்கேற்றிய கொலைவெறிச் செயல் அது.

குண்டு வெடிப்புக்குக் காரணமானவர்கள் வழக்கு மன்றத்தில் நிறுத்தப்பட்டுள்ளார்கள். இவர்கள் தண்டிக்கப்படுவதில் எவருக் கும் இரண்டு கருத்து இருக்கமுடியாது. இந்திரா கொலையின் பின் விளைவாய் ஈவிரக்கமின்றிக் கொன்று குவித்தவர்களைத் தண்டிக்காத வரை இவர்களையும் தண்டிக்கக் கூடாது என்று எவ னும் சொல்லமாட்டான்.

பாபர் மசூதி இடிபட்டபோது அனிச்சையாக அதிர்ந்துபோன பிராமணர்கள் யாரேனும் உண்டா என்பதை அவர்கள்தாம் நெஞ் சில் கைவைத்துச் சொல்ல வேண்டும். நானறிந்தவரை பிராமணச் சிந்தனையாளர்கள், இலக்கியவாதிகள், அறிவாளிகள் என்பவர்கள் கூட "இது நியாயமா?" என்று கேட்கப்பட்டபோதுதான், இப்படி யொரு கேள்வி இருக்கிறதா எனத் துணுக்குற்றவர்கள்போல, "அது தப்புதான்," என்று தப்பிக்கும் பதிலைச் சொன்னார்கள். உல கமே கேட்கும்படி வெளிப்படையாக, 'பாரதத்தின் ஒரு கரும்புள்ளி துடைக்கப்பட்டது' என்று செம்மாந்து சொன்ன சிந்தனையாளர் கள் உண்டு. மசூதி இடிப்பின்போது இந்துமதப் பிரதிநிதிகள் வெளிப்படையாகப் பங்கேற்றனர்.

ஆனால் பம்பாய் குண்டு வெடிப்பில் இஸ்லாத்தின் சமயப்பிரதி நிதிகளுக்குப் பங்குண்டு என்று இதுவரை மெய்ப்பிக்கப்படவில்லை.

பாபர் மசூதி இடிப்பில் மனம் புழுங்கி நொந்துபோனவர்கள் பம்பாய் குண்டு வெடிப்பைக் கேட்டு அதிர்ச்சியோடு, "அப்பாடா!" என்று மனசுக்குள் ஆசுவாசப்பட்டிருக்கலாம்தான். ஆனால், வெளிப்படையாக எந்த முஸ்லிமும் சந்தோஷம் காட்டியதில்லை. அவர்கள் கண்ணியம் அப்படிச் செய்ய விடவில்லை.

"கண்ணியமாவது கத்திரிக்காயாவது, பயம்," என்கிறீர்களா? இருக்கட்டுமே. 'முரட்டுத் துலுக்கர்கள்' என்று பட்டம் பெற்றவர்

படிப்பகம்

www.padippakam.com



களே உங்களிடம் பயப்படும் நிலைதான் என்றால் அவர்களைவிட தர்க்க நியாயங்களுக்கடங்காத முரடர்களாய் நீங்கள் இருக்கிறீர்கள் என்றுதானே அர்த்தம்? அதனால்தானே உங்களைப் போல் லட்சக் கணக்கில் ஒன்று திரண்டு வெளிப்படையாக உடைக்க முடியாமல், கடல் கடந்து போய், வெளிநாட்டுச் சதிகாரர்களோடு கூடி, பரம ரகசியமாய்த் திட்டமிட்டு இந்தக் கொடுமையைச் செய்ய நேர்ந்தது?

—கவிஞர் பாரதிராமன் என்னைப் பார்த்துச் சொல்கிறார், "மசூதி இடிப்பு உங்களுக்கு விழிப்பை ஏற்படுத்தியது; பம்பாய் குண்டு வெடிப்பு கண்களை மூடித் தூங்கச் செய்கிறது," என்று. அவர் கவிஞர். நயத்தோடு சொல்லுகிறார். நான் நயத்தக்க நாகரிகம் வேண்டுபவனாகவே இருக்க விரும்புகிறேன்.

பாபர் மசூதி இடிப்பில் இந்திய மதச்சார்பின்மை தகர்ந்த கொடுமை கண்டு பதறியவர்கள், பம்பாய் குண்டு வெடிப்பில் ஆத்திரக்காரர்களின் மதியீனம் கண்டும் கலங்கினார்கள். ஆனால் குண்டு வெடிப்பைக் காரணமாக்கி முஸ்லிம் சகோதரர்களை ஒட்டு மொத்தமாக வெறுத்தொதுக்கும் விழிப்பையா எதிர்பார்க்கிறீர்கள்? எனில், புண்பட்ட முஸ்லிம்களைவிடவும் நீங்கள் அந்தக் குண்டு வெடிப்புக்குத் தவம் இருந்தீர்கள் என்றாகிறது.

ஒரு முஸ்லிம் இந்தியனாயிருப்பது சந்தேகத்துக்குரியது என்னும் தத்துவத்தை மண்டையில் திணித்துக் கொண்டவன் எவன்? 'இந்து'வாயிருப்பவன்தான் இந்தியன் என்றதோர் மனநோய்க்கு ஆட்பட்டவன் தானே?

அப்படிப்பட்டதோர் மனநோயாளியின் கேள்வியை பிராமணர்கள் கேட்கிறார்கள் என்றால், அதில் அவர்களுக்கான நியாயம் இருக்கத்தான் செய்யும்.

மனிதனை விலங்கினப் பழக்கங்களிருந்து விடுவிக்க வேண்டிய காலகட்டத்தில் ஏசு சொன்னான்: "உன்னை ஒருவன் ஒரு கன்னத்தில் அறைந்தால் அவனுக்கு இன்னொரு கன்னத்தைக் காட்டு," என்று. ஆனால் இன்றும், இன்னும், மனிதன் நாகரிகம் என்னும் பெயரால் ஆதிக்க விலங்காய் வெளிப்படுகிற போது, "உன்னை ஒருவன் ஒரு கன்னத்தில் அறைந்தால் அவன் இரு கன்னங்களையும் உடை. இரு கைகளையும் முறி," என்று சொன்னால், அது அடிபட்டவனுக்கான நியாயமாக இருக்குமல்லவா? ஏசுவின் வாக்குப்படி நடந்தால், ஒருவன் இன்னொரு உலகத்தில் தேவனாக இருக்க ஆசீர்வதிக்கப்படலாம். அது ஒரு கற்பனை சுகம். இந்த நியாயத்தின்படி நடந்தால், குறைந்தபட்சம் அவன் இம்மண்ணிலேயே மனிதனாக வாழலாமல்லவா?

அடிக்கிறவன் ஏதோ தான் அடிப்பதற்கென்றே ஆசீர்வதிக்கப்பட்டவன் போல, திருப்பியடிக்கிறவனைப் பார்த்து "இந்த அதர்மம் உன்னை விழிப்புறச் செய்யவில்லையா?" என்று கேட்கிறான்.

பிராமணர்கள் கேட்கிறர்கள். பிராமணர்களின் எண்ணற்ற இருண்ட நிழல்களும் கேட்கின்றன.

படிப்பகம்

www.padippakam.com



—கேளுங்கள் பிராமணர்களே, கேளுங்கள். கூடவே கொழுக்கம்பியையே பேனாவாகப் பிடிக்கத் தொடங்கியவனின் குரலையும் நீங்கள் கேட்டுத்தான் ஆகவேண்டும்.

பிராமணர்கள் நல்ல புத்திசாலிகள் என்பதைவிட, தங்கள் கபடமான சூழ்ச்சித் திறத்தையே நயமான புத்திசாலித்தனமாக்கி, தங்கள் எதிரிகளின் மேல் ஏவி, இடறுகிறவர்கள் என்பது அவர்களை அசலாய்ப் பார்ப்பதாயிருக்கும். இந்த அவர்களின் கூரிய புத்தியைக் கற்றுக்கொள்ளவோ, குறைந்த பட்சம் கண்டுகொள்ளவோ பயிலாதவரை, மற்றவர்கள் அவர்கள் உச்சத்தை எட்டிப் பார்ப்பது கூட, பகல் தூக்கக்காரனின் பரிகாசக் கனவாகத்தான் இருக்கும்.

இந்துக்களுக்கு இனிக்காது என்றாலும் இஸ்லாமும் கிறிஸ்துவமும் இந்தியாவை ஆள வந்தவர்களின் மதங்களே. (வெகுகாலத்துக்கு முன்னரே ஒரு சேர மன்னன் இஸ்லாத்தைத் தழுவினான் என்றும் அவர்கள் வழிவந்தவர்களே கேரளத்து மாப்பிள்ளைமார்கள் என்றும், அதுபோன்றே ஏசுவின் நேரடிச் சீடர் புனித தாமஸ் இங்குதான் கொல்லப்பட்டார் என்றும் வரலாறு சுட்டுகிறதுதான்.)

கிறிஸ்துவத்தைவிடவும் இஸ்லாம் அதிக காலம் இந்தியாவை ஆண்ட மதம்.

ஆட்சியாளர்களின் மதம் ஒரு நாட்டில் பரவுவதற்கு ஆயிரம் வாய்ப்புகளும் வசதிகளும் உண்டு. ஆளுகிறவன் வெறும் பரிசுகளையும் சலுகைகளையுமே வழங்கித் தன் மதத்தை வளர்த்திருக்க மாட்டான். ஆளுகையின் அத்துமீறல்களும் அராஜகங்களும் அவ்வப்போது பயன்பட்டிருக்கும்.

உயரமான மினார்களுடன் கூடிய மசூதிகளும் மதரஸாக்களும் கம்பீரமான கோபுரங்களோடு கூடிய தேவாலயங்களும் கல்விக் கூடங்களும் இதற்குச் சான்று. அக்காலத்தில் படை திரட்டி வந்த கொள்ளைக்காரர்களால் கோயில்கள் சூறையாடப்பட்டது, அங்கு திரட்டி வைக்கப்பட்டிருந்த சொத்துகளுக்காகத்தானே அல்லாமல் மதத்தை அழித்துவிட அல்ல. அதனால்தான், பார்வையாலேயே துஷ்ட நிக்ரகம் செய்துவிடும் நம் சாமிகள் யாவும் வெகு சமர்த்தாக இக்கொள்ளையர்களை ஆசீர்வதித்து அனுப்பியுள்ளன! கோயில்களைக் காப்பதற்காக இந்த மதலோலர்கள் ஒரு துடைப்பக்குச்சியைக்கூடத் தூக்கிப் போட்டதில்லை என்பது கருவறைக் கல்லைப் போல கனமான உண்மை.

மேலும், மதமாற்றம் என்பது ஆக்கிரமிப்பாளர்களின் நிர்பந்தத்தால் மட்டுமே நடந்ததல்ல. இந்துமதம் கற்பித்து, கடைபிடித்து வந்த மனித வேற்றுமைக் கொடுமைகளும் அடிமைத்தனமும் கூட அடித்தள மக்களைத் தன்னிச்சையாக மதம் மாற வைத்தன. இந்தியாவைப் போல இத்தனை மத மாற்றங்களும் மத மாச்சரியங்களும் வேறெந்த நாட்டில் உண்டு?

சுதந்திரமாக சுவாசிக்க வேண்டும் என்ற ஆசை எந்த ஏழைக்குத்தான் இல்லை? ஆனால், இந்தியாவில் எந்த மதமும் இந்துமத

படிப்பகம்

www.padippakam.com



மனோபாவத்தை வென்று நிற்கவில்லை என்பது ஏழைகளுக்கான சாபம். இந்துமத மௌடிகத்தையும் வருண பேதத்தையும் எதிர்த்துக் கிளம்பியவைதான் சமணமும் பௌத்தமும். (ஆனால் இப்போது விநாயகர் ஊர்வலத்தை தெருவதிர நடத்துகிறவர்கள் சமணர்களாகிய நம்மூர் மார்வாடிகள்தாம்.)

இன்று அன்னிய ஆட்சிகள் முடிந்துவிட்டன. தூதரக மனிதர்களும் சுற்றுலாப் பயணிகளும் தவிர வேறெந்த அன்னியர்களோ ஆளுகையோ இல்லை. அவர்கள் கட்டிய பள்ளிவாசல்களும் தேவாலயங்களும் நிமிர்ந்து நிற்கின்றன. அவற்றை எந்த அரேபியனும் அல்லது ஐரோப்பியனும் சொந்தம் கொண்டாடவில்லை. அவை இந்தியச் செல்வங்களாக நிற்கின்றன. அவை வெறும் கல்லும் மண்ணுமாகவே இருந்தால், இந்திய வரலாற்றுச் சின்னங்களாக அவற்றைக் காப்பதா, அல்லது அடிமைச் சின்னங்களாக அழிப்பதா என்பதைப் பற்றி யோசிக்கலாம். அதுவும்கூட, முதலில் அது நம் சொத்து என்னும் சொந்தம் கொண்டாடுவதால்தான். ஆனால் அவையோ பலகோடி இந்தியர்களின் நம்பிக்கைச் சின்னமாக, பின்பற்றும் மதமாக, வழிபாட்டுத் தலமாக நிமிர்ந்து நிற்கின்றன. இதில் அன்னியம் கற்பிக்கும் உரிமையை இந்துக்களுக்கு யார் வழங்கியது?

இங்கிருந்து வெளிநாடுகளுக்குப் போய், அந்நாட்டு குடிமக்களான பின்னும் இந்துக்களாக வாழ இந்துக் கோயில்கள் கட்டிக் கொள்கிறார்கள். அக்கோயில்களுக்கு அர்ச்சகர்களை அனுப்பி வைத்து இங்குள்ள இந்துக்கள் பூரித்துப் போகிறார்கள்.

இங்கே பிழைக்க வழியின்றி வளைகுடா நாடுகளுக்குப் போகும் இந்திய முஸ்லிம்கள் அங்கு பணம் சம்பாதித்து (அல்லது அந்த நாடுகளிடம் கொடை வாங்கி) இங்கு பள்ளிவாசல் கட்டுகிறார்கள். அவைகள் மட்டும் இவர்களை ஏன் அவ்வளவு அன்னியமாய் உறுத்துகின்றன?

பள்ளிவாசலில் அரபியும் மாதாக்கோயிலில் லத்தீனும் வழிபாட்டு மொழிகளாயிருப்பது என்னையொன்றும் உறுத்தவில்லை. காரணம் அவை என்னைத் தெருவில் நிறுத்தியோ, என் வழிபாட்டில் குறுக்கிட்டோ என் மடியைப் பிடித்திழுப்பதில்லை. ஆனால் சமஸ்கிருதம் அப்படியா?

'இந்து' என்னும் சொல்லில் பல கோடி மக்களையும் ஒன்றாக்க முயல்வதே, — 'சமஸ்கிருதம் ஒன்றுதான் அவர்களின் வழிபாட்டு மொழி, சமஸ்கிருத வழிச் சமுதாயம் ஒன்றுதான் இந்த நாட்டின் ஒற்றைத் தனிப் பெருங்குடி' என்பதை நிலைநாட்டத்தானே?

தமிழ் நாட்டில் சிறிது காலத்துக்கு முன்பு வரை தலித்துகளின் கோயிலாயிருந்த பழனி முருகன் கோயிலைப் போல பல நூறு கோயில்களை சமஸ்கிருதம் முழங்கும் இந்துக் கோயில்களாக மாற்றிக் கொண்டார்கள் பிராமணர்கள். தெய்வங்களைப் பற்றி மனோகரமான கதைகளை உற்பத்தி பண்ணுவதில் மகா சமர்த்தர்கள். எந்தத் தெய்வத்துக்கும் ஒரு பூணூலை மாட்டிவிட்டு, சமஸ்கி

படிப்பகம்

www.padippakam.com



ருதத்தில் அர்ச்சனை செய்து, தங்களுடையதாக்கிக்கொள்வார்கள். பிராமண தெய்வங்கள் யாவும் அவர்களின் இச்சைகளின் சித்திரங்கள்தாம் என்பதால், பூவும் புணுகும், சந்தனமும் சவ்வாதுமாக மணப்பார்கள்; நம் மதியை மயக்குவார்கள்.

இந்த மயக்கத்திற்கு அப்பாற்பட்டு, காவல் தெய்வங்களாய் நடுகல் மறவர்களாய், அம்மன் சிலைகளாய், வடமொழியைத் தங்கள் வாசற்படிகூட ஏற்றாத பல்லாயிரம் வழிபாட்டிடங்கள் உண்டு. உழைக்கும் மக்களின் தமிழ் கேட்கும் தெய்வங்கள். இந்த மக்கள் சமஸ்கிருத வழிச் சமுதாயத்தை மிலேச்ச இனமாகக் கருதியவர்கள். 'இந்து' எனும் கட்டுக்குள் வேர் விடாதவர்கள். இவ்வாறு சமஸ்கிருத மரபுக்கு அப்பாற்பட்டவர்கள் யாவரும் இவர்கள் கணிப்பில் தீட்டுப்பட்டவர்களா? இந்தக் கொழுப்பு யாருக்கு வரும்? என்னை இழிவு படுத்தும் எந்த மொழியும் மரபும், அது எவ்வளவு உன்னதமாயிருப்பினும் எனக்குத் தூசுதான். அரபியும் லத்தீனும் இந்த அசிங்கத்தை எனக்குச் செய்யவில்லை.

ஆனந்தரங்கப்பிள்ளையின் நாட்குறிப்பிலிருந்து நாம் அறியும் மதம் பற்றிய ஒரு விஷயம்: மாதா கோயிலுக்கு இடைஞ்சலாயிருந்த பள்ளிவாசலை இடிக்க முயன்றபோது, "எங்கள் பிணத்தின் மீதுதான் அதைச் செய்ய முடியும்," என்று மூர்க்கமாய் முஸ்லிம்கள் எதிர்த்ததும் மசூதி பிழைத்தது. ஆனால் ஈசுவரன் கோயில் இடிக்கப்பட்டபோது, ரங்கப்பிள்ளையையும் சேர்த்து எல்லாப் பக்தர்களும் மரங்களாய்த்தான் நின்று கொண்டிருந்தார்கள். இப்படிப்பட்ட கோழைகள் இன்று முஸ்லிம்களின் ஒவ்வொரு செயலையும், ஒவ்வொரு தொழுகை இடத்தையும் கேள்விக்குள்ளாக்குகிறார்களே, எப்படி? மதச் சார்பின்மை என்னும் பெயரில் இன்று நடந்து கொண்டிருப்பது இந்து மத ஆட்சியும் பிராமண ஆதிக்கமும்தான் என்று உணர்த்தும் முயற்சியா?

திருப்பரங்குன்றம் மலையில் 'தர்க்கா' உள்ளது. திருச்சி மலைக்கோட்டையில் உச்சிப்பிள்ளையார் கோயிலுக்குப் பின்புறம் முஸ்லிம்கள் சென்று கொண்டாடி வருவதை 1956இல் கூட நான் பார்த்திருக்கிறேன். புகழ் பெற்ற பல கோயில்களுக்கருகே தர்க்கா இருப்பதை நாடு முழுதும் காணலாம்.

இவையெல்லாம் முஸ்லிம் ஆட்சியில் நடந்த அத்துமீறல்கள் என்று சொன்னால், அப்படியே இருக்கட்டும். அதன் பின்னர் இன்றுவரை இந்துக்கள் தாங்கள் வகுத்துக் கொண்ட நியதிப்படி கோவில் கடன்களை நடத்திக்கொண்டு வருகிறார்கள். உதாரணமாக முஸ்லிம்களின் மத உணர்வுகளை மதிக்கும் வகையில் திருப்பரங்குன்றத்தில் மலைமேல் விளக்கேற்றாமல், கோயில் மண்டபத்திலேயே விளக்கேற்றுகின்றனர் கோயில் நிர்வாகத்தினர். இந்த மரபை வெகுகாலமாகப் பேணிவருவதில் இந்துக்கள் அடைந்த அவமானம் என்ன? அனுபவித்த கேவலம் என்ன?

இப்போது தர்க்காவை துச்சப்படுத்திவிட வேண்டும் என்னும் தீவிரத்தோடு மலைமேல் விளக்கேற்ற முயல்வதில் இவர்கள் பெறப்

படிப்பகம்

www.padippakam.com



போகும் கௌரவம் என்ன? சமூக நல்லிணக்கத்திற்கு இவர்கள் ஊட்டப் போகும் வலிமை என்ன? அப்படியும் இவர்கள் யாரோடு மோத நினைக்கிறார்கள்? அராபியனோடு எனில் அவர்கள் வீரத்தை மெச்சலாம். ஆனால், கூடப் பிறந்த சகோதரனோடல்லவா?

முஸ்லிம்கள் வாழும் தெருக்களினூடே ஊர்வலம் நடத்தி, தெருமுனைகளில் கூட்டங்கள் போட்டு, தர்க்கா வாசலில் பம்பையடித்து, பட்டாசு கொளுத்தி, 'குத்திவிடுவேன், கொன்றுவிடுவேன், கூண்டோடு தொலைத்து விடுவேன்' என்று அறைகூவல் விட்டு, வயிறு வளர்க்க முடியாதபடி வசவுகளைத் தூற்றிவிட்டு, "சென்னையில் ஆர். எஸ். எஸ். அலுவலகம் தகர்க்கப்படுகிறது; மதுரையில் இந்து முன்னணித் தலைவர் கொல்லப்படுகிறார். இவைகளைப் பார்த்து 'ரத்தம் கொதிக்கவில்லையா?' என்று குமுறினால், இந்த அராஜகங்களின் ஆணிவேரை யார் சுட்டுவது? யாருக்கு யார் நீதி வழங்குவது? ஜல்லிக்கட்டுக் காளைகள் தங்கள் வீரத்தைக் காட்டவா விரட்டுகிறவன் மேல் பாய்கின்றன? வெருண்டு போயல்லவா பாய்கின்றன? அவற்றை விரட்டுவதிலும், கொம்பில் சிக்கிக் குடல் சரிந்து கீழே சாய்வதிலும் வீரம் என்ன வீரம்?

இந்தோனேஷியாவுக்கு அடுத்தபடியாக உலகிலேயே இந்தியாவில்தான் முஸ்லிம்கள் அதிகம். அவர்களில் 70 சதவீதம் பேர் எல்லா வகையிலும் பின் தங்கியவர்களாய், பீடி சுற்றியும், லாடம் கட்டியும், பிற மலின வேலைகள் செய்துமே பிழைக்கிறவர்கள். ஏதோ பட்டணங்களில் சில தெருக்களையே விலைக்கு வாங்கி விடும் கீழக்கரைச் சீமான்களைக் கொண்டு அவர்கள் எல்லாரையும் எடை போடக் கூடாது.

இந்தியா ஒரு மதச்சார்பற்ற நாடு என்பது உண்மையானால் மத அடிப்படையில் மக்களை சிறுபான்மையினர் - பெரும்பான்மையினர் என்று பிரித்துப் பார்ப்பதே ஒரு பிழையான செயல். ஆனால், அது நடந்துகொண்டுதான் இருக்கிறது.

இந்திய முஸ்லிம்கள் தங்கள் சொந்த மண்ணிலேயே சந்தேகத்துக்குரியவர்களாகவும் வந்தேறிகளாவும் பார்க்கப்படுகிறார்கள்; பகைக்கப்படுகிறார்கள். அப்படிப்பட்ட ஒரு இக்கட்டை மதவாதம் பேசும் இந்துக்கள் அவர்கள் மேல் திணித்துக் கொண்டிருக்கிறார்கள். அரசியல் மற்றும் சமூகம் சார்ந்த எல்லா தளங்களிலும் சமத்துவம் இழந்தவர்களாய், இந்தியப் பன்முகத் தன்மை என்னும் ஒற்றைப் பரிமாணத்திலும் அன்னியப்பட்டவர்களாய், அச்சத்தையே பார்வையாக வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்திய முஸ்லிம்களின் பிரச்சினையே இதுதான்.

இப்பிரச்சினையின் வித்து சுதந்திரப் போராட்டம் தீவிரமடைந்த காலத்திலேயே ஊன்றப்பட்டுவிட்டது.

முஸ்லிம்களாய் இருப்பதில் இவர்களுக்குள்ள கண்ணியம் காக்கப்படும் போதுதான், அவர்கள் இந்தியர்களாய் இருப்பது பெருமைக்குரிய விஷயமாகும். ஆனால், இந்தப் பெருமை சுதந்திரப்

படிப்பகம்

www.padippakam.com



போராட்டத்தில் திலகர் போன்றவர்கள் தலைமை ஏற்க வந்த போதே அவர்களுக்கு மறுக்கப்பட்டுவிட்டது.

"பானை செய்கிறவனும் பயிர் வேலை பார்க்கிறவனும் அரசில் பங்கு பற்ற வேண்டும் என்று ஏன் துடிக்கிறார்கள்? அவர்கள் தங்கள் வேலையைச் செய்யட்டும். அரசை அறிவாளிகள் பார்த்துக் கொள்வார்கள்," என்று தொடக்க காலத்திலேயே திலகர் சொல்லிவிட்டார். அவர் சொல்லும் அறிவாளிகள் யார் என்பது ஐயத்திற்கப்பாற்பட்ட விஷயம்.

ஆக, சுதந்திர அரசு யாரால் ஆளப்படும் அரசு என்பது அன்றே தீர்மானிக்கப்பட்டுவிட்டது. (இன்று நடைமுறையிலும் கொண்டுவரப்பட்டு விட்டது.)

"இந்து தர்மத்தை நிலை நாட்டுவதற்கே நான் சுதந்திரம் கோருகிறேன்."

இப்படியொரு பிரகடனமும் அப்போதே வைக்கப்பட்டது. வைத்தது யாருமல்லர். தேசப்பிதா காந்தியடிகள் தாம்.

விடுதலைப் போராட்டம் தீவிரம் அடைந்த போது அதன் போக்கும் நோக்கும் காந்தியடிகளின் பிரகடனத்தை மெய்ப்பித்துக் கொண்டுவருவதைக் கண்டு — சமூக நல்லிணக்கத்தில் நம்பிக்கை வைத்த பலரும் துணுக்குற்றதுண்டு. ஆனால் விடுதலை பெறுவதொன்றே முதன்மையாகக் கருதப்பட்டதால், இந்த அச்சம் பின்னுக்குத் தள்ளப்பட்டது. "தன்னுடைய தலைவிதியைத் தானே நிர்ணயிக்கும் பொறுப்பு ஏற்பட்ட பிறகு, வகுப்புவாத வெறுப்பு மறைந்துவிடுமென்று உறுதியாக நம்புகிறேன்," என்று சொன்ன அபுல்கலாம் ஆசாத்தைப் போல மற்றவர்களும் நம்ப முயன்றனர்.

காந்தியடிகளோ, தொடக்கத்திலிருந்தே தீவிர மத நம்பிக்கையாளராகவும் ராம பக்தராகவும் காட்டிக் கொள்வதில் கூச்சப்படவில்லை. அரசியல் சிக்கல்கள் தோன்றிய போதெல்லாம், அதற்கான தீர்வை ராமபிரானே அவரின் தியானத்தில் வந்து அளித்தான் என்றெல்லாம் சொல்லி, தெய்வத்தின் மேல் பித்துற்றுப் புலம்பும் ஆழ்வாராதிகளைப் போலவே அவர் தம் அரசியல் களத்தை அமைத்துக் கொண்டார்.

அதன் திரண்ட பலனாக, சுதந்திர இந்தியாவின் முதல் அரசியல் கொலைக்கு காந்தியடிகள் ஆளானார். (காந்தியடிகளைக் கொன்றவர்கள் பிராமணர்கள் என்று சொல்லிவிட்டால், உடனே கையையும் காலையும் உதறிக்கொண்டு 'எவனோ ஒரு கிறுக்கன் செய்த கொலைக்கு பிராமண இனமா பொறுப்பு?' என்று கிடந்து குதிப்பார்கள். ஆனால் அவன் எதற்காகக் கொலை செய்ததாகக் கூறினானோ, அதைத் தங்கள் சிந்தனையாலும், செயலாலும், உணர்வாலும், கால தேச வர்த்தமானத்துக்கேற்றபடி அவ்வப்போது சகித்துக் கொள்ளப்படும் மொழியாலும் இடையறாமல் உச்சாடனம் பண்ணிக் கொண்டிருப்பவர்கள்தாம் இந்த பிராமணர்கள். உண்மையில் இந்த உச்சாடனம்தான் இந்தியச் சமுதாயத்தின் தீர்க்கப்படாத நோய்.)

படிப்பகம்

www.padippakam.com



விடுதலைப் போராட்டத்தில் இந்துமதத் தீவிரமும் பிராமண ஆதிக்கமும் முதன்மை பெற்றதன் காரணமாக —மூன்று எதிர் விளைவுகள் தோன்றின.

முதலாவது, தென்னிந்தியாவில் (அப்போது சென்னை மாகாணம்) பிராமணர்களுக்கு எதிராக 'நீதிக்கட்சி' தோன்றியது. அந்தக் கட்சிதான் இந்தியாவிலேயே முதன்முதலாக நலிந்த பிரிவினருக்கான இட ஒதுக்கீட்டுக் கோரிக்கையை முன் வைத்து, பெற்றுத் தந்தது. வெள்ளையன் வெளியேறுவது நிச்சயம் என்றான பின் அவன் போவதற்கு முன்பே சில சமுதாய நியாயங்கள் நிலை நிறுத்தப்பட்டுவிட்டால் பிராமணத் தாக்குதலிலிருந்து வருங்காலத்தில் தங்களைக் காத்துக் கொள்ளலாம் என்பதற்கான செயல்பாடு அது. அதன் காரணமாக பிராமணர்கள் அவர்களை ஒருபோதும் மன்னித்ததில்லை. பிராமணத் தீர்ப்பில் மன்னிக்கவே முடியாத மூன்று குற்றங்களைப் புரிந்தவர்கள் அவர்கள்.

நீதிக்கட்சித் தலைவர்கள் யாவரும் மேட்டுக்குடி மக்கள்தாம் என்றாலும், நடைமுறை வாழ்க்கையில் சாதிச் சழக்குகள் அவர்களை இடுப்பு வேட்டியைப் போலப் பற்றியிருந்தாலும், அவர்கள் படித்த சுய சிந்தனையாளர்களாய், பார்ப்பனியக் கொடுமைகளால் காயம் பட்டவர்களாய், சமூகம் சார்ந்த அறிவார்ந்த விழிப்புணர்வு கொண்டவர்களாய் இருந்தார்கள். பார்ப்பனியக் கொடுமைகளின் ஓர் அங்கமே சாதிக் கொடுமை என்ற பகுத்தறிவு அவர்களுக்கு இருந்தது. ஆகவே அதற்கெதிரான தீர்மானங்களை முன் வைத்து வென்றெடுத்தனர்.

தாழ்த்தப்பட்டவர்களைச் சட்டப் பேரவை உறுப்பினர்களாக்கியதோடு, முதன் முதலில் அவர்களை அமைச்சராக்கிய பெருமை நீதிக்கட்சியைச் சேரும். அவர்களின் விடாப்பிடியால் சுப்பராயன் தலைமையிலான காங்கிரஸ் அரசு இட ஒதுக்கீட்டைச் சட்டமாக்கியது.

அந்தக் காலத்தில் மருத்துவக் கல்லூரியில் சேர சமஸ்கிருதம் படித்திருக்க வேண்டும் என்னும் விதி இருந்தது. (தேவதாசிக் குலத்தில் பிறந்த முத்துலட்சுமி ரெட்டிக்கு சமஸ்கிருதம் தெரிந்திருந்தது. ஆகவே டாக்டரானார்.) நீதிக்கட்சி அந்த விதியை ஒழித்து, மருத்துவப் படிப்புக்கு சமஸ்கிருதம் தேவையில்லை என்று சட்டம் கொண்டு வந்தது. அதன் பிறகுதான் சமஸ்கிருதம் படிக்காத தாழ்த்தப்பட்டவர்களும் பிற்படுத்தப்பட்டவர்களும் மருத்துவர்களாக முடிந்தது.

அப்போதெல்லாம் கோயில் சொத்துகள் யாவும் பிராமணர்கள் பொறுப்பிலேயே விடப்பட்டிருந்தன; அவர்கள் மட்டுமே சர்வ சுதந்திரத்துடன் அவற்றை அனுபவித்து வந்தனர். நீதிக்கட்சியின் ஆட்சியில்தான் கோயில்களையும் கோயில் சொத்துகளையும் பராமரிப்பதற்கென இந்து அறநிலையத்துறை உருவாக்கப்பட்டு பிராமணர்கள் பிடியிலிருந்து அவை மீட்கப்பட்டு பொதுவுடைமையாக்கப்பட்டன.

இவ்வாறு சமூக நீதி காக்கும் முயற்சியாக அவர்கள் எடுத்த

படிப்பகம்

www.padippakam.com



ஒவ்வொரு சட்ட பூர்வ நடவடிக்கையும் பிராமணர்களின் பல்லைப் பிடுங்கும் காரியமாகவும் அவர்கள் மேலாதிக்கத்தைக் கேள்விக் குள்ளாக்கும் நியாயமாகவும் அமைந்தது.

விடுவார்களா பிராமணர்கள்? இந்திய விடுதலை வரலாற்றில் அக்கட்சியைக் கருப்புப் பட்டியலில் சேர்த்தார்கள். மகாராஜாக்களும் சீமான்களும் தங்களின் நலன் காக்கத் தோற்றுவித்த கட்சி என்றும், வெள்ளையாட்சிக்குத் துணைபோனவர்கள் என்றும், விடுதலை போராட்டத்திற்கு எதிரானவர்கள் என்றும், பாரத சமுதாயத்தின் கருப்பு ஆடுகள் என்றும், பழிச்சொற்களாலேயே அவர்கள் வரலாற்றை அறியச் செய்தனர்.

'பிராமணர்கள் மட்டும்தானா திட்டினர்? திரு. வி.க. போன்ற பிற காங்கிரஸ்காரர்களும்தானே திட்டினர்,' என்பார்கள். உண்மையும் அதுதான். காரணம் என்னவென்று அறிந்துகொள்ளாமலே ராஜாஜி எதிர்க்கச் சொன்னார் என்பதற்காக ஒரு தீர்மானத்தை எதிர்த்தே வெற்றி கொள்ளவில்லையா பெரியார்? அப்படிப் பட்டதொரு நம்பிக்கையில் அடியொற்றியோடிய காலம் அது.

உண்மையில் நீதிக்கட்சியினர் சில உரிமைகளைச் சலுகைகளாகப் பெறுவதற்காக வெள்ளையனுடன் மோதலற்ற உறவு கொண்டிருந்திருக்கலாம். ஆனால் பிராமணர்கள் அப்படியல்ல. பிராமணர்களில் ஒரு சகோதரன் விடுதலைப் போராட்டத்தில் பங்கு பற்றினால், மற்றொரு சகோதரன் அரசு எந்திரத்தில் உயர்ந்த இடத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தான். போராட்டத்துக்கு எதிராக அரசு எந்திரத்தை முடுக்கிவிட உதவியவர்களே பிராமணர்கள்தாம். இந்தத் துரோகத்தை அவர்களால் மறைக்க முடிந்தது. நீதிக்கட்சியினருக்கு அந்த வசதியும் முயற்சியும் இல்லை.

இந்த நீதிக் கட்சியின் நல்லெச்சமாகத் தோன்றிய திராவிட இயக்கமோ, இன்று ஊதாரிப் பிள்ளைகள் அழித்த பரம்பரைச் சொத்தைப் போல, அதன் அரசியல் நோக்கங்கள் யாவற்றையும் தொலைத்து, சாம்பல் விழுங்கிய தீக்கங்காய்ப் ஒடுங்குகிறது.

விடுதலைப் போராட்டத்தில் நேர்ந்த இரண்டாவது எதிர்வினை அம்பேத்கர் தலைமையில் தலித்துகள் திரண்டு விழித்தது.

1910களின் பிற்பகுதியில் மாண்டேகு - செம்ஸ்போர்டு அறிக்கையானது, "தாழ்த்தப்பட்ட மக்களின் பாதுகாப்புக்காக அரசியல் நிர்ணய சட்டத்தில் உரிய ஏற்பாடு செய்யப்பட வேண்டும்" எனக் கோரியது. உண்மையில் தலித்துகள் பெறும் கொஞ்ச நஞ்ச சலுகைகளை இந்த அறிக்கைதான் உறுதி செய்தது. காந்தியும் காங்கிரசும் போட்ட முட்டுக் கட்டையையும் மீறி - என்று சொன்னால் தப்பில்லை.

இது சம்பந்தமான ராயல் கமிஷன் உறுதிமொழிப்படி 1930இல் வட்ட மேஜை மாநாடு துவங்கியது. இந்திய அரசியலமைப்புச் சட்டம் உருவாகும் முன் இந்தியப் பிரதிநிதிகளை அழைத்து, கருத்தறியக் கூட்டிய மாநாடு அது. மாநாட்டுக்கான பல குழுக்களில்,

படிப்பகம்

www.padippakam.com



இனப் பிரச்சினையை ஆராயும் சிறுபான்மையினர் குழு பிரிட்டிஷ் பிரதமர் தலைமையிலேயே இயங்கியது. பிரதமர் நடுவராக இருக்கவும், அவர் தீர்ப்பை ஏற்றுக்கொள்ளவும் எழுத்து மூலமாக முன்னதாகவே ஒப்புதல் தந்தவர் காந்தியடிகள். பின்னர அதை நிராகரித்தவரும் அவரே. வாக்கு மீறலுக்காக அவர் வருந்தியதில்லை.

இக்குழுவில் அம்பேத்கரும் இரட்டைமலை சீனிவாசனும் கலந்து கொண்டார்கள். தாழ்த்தப்பட்டவர்களின் சட்ட ரீதியான பாதுகாப்பு கருதி, அவர்களுக்குத் தனி வாக்காளர் தொகுதிகளைக் கேட்டார் அம்பேத்கர். தாழ்த்தப்பட்டவர்களையும் தாமே பிரதிநிதித்துவப் படுத்துவதாகக் கூறிக்கொண்ட காந்தியடிகள் அதைக் கடுமையாக எதிர்த்தார். அதே நேரத்தில் முஸ்லிம்கள், சீக்கியர்கள், ஆங்கிலோ இந்தியர்கள், ஐரோப்பியர்கள், கிறிஸ்தவர்கள், ஏன் பணியாக்களுக்குக் கூட சிறப்புப் பிரதிநிதித்துவம் வழங்க அவர் இணங்கினார். அதாவது தாழ்த்தப்பட்டவர்களுக்கென தனி அடையாளத்தையோ, அந்தஸ்தையோ அவர் தரத் தயாராயில்லை. 'தீண்டாமை அனுசரிப்பது குற்றம்' என்னும் ஒற்றை வரியிலேயே அவர்களின் ஆயிரங்காலத்து பிரச்சினையைக் கரைத்துவிட்டதாக வித்தை காட்டிய அரசியல் சித்தர் அவர்.

பிரதமரின் தீர்ப்பு வெளி வந்தது. அதில், 'சிறப்புத் தொகுதிகளிலிருந்து தேர்தல் மூலம் நிரப்பப்படுவதற்கு தாழ்த்தப்பட்டவர்களுக்காகப் பல தனி இடங்கள் ஒதுக்கப்படும். அத்தொகுதிகளில் வாக்களிக்கத் தகுதி பெற்ற தாழ்த்தப்பட்டோர் மட்டுமே வாக்களிப்பர். இவ்வுரிமை அரசியல் சட்டம் அமுலுக்கு வந்ததிலிருந்து 20 ஆண்டுகளுக்குத் தொடரும்," என்று வரையறுக்கப்பட்டது.

உடனே, காந்தியடிகள் தாம் ஏற்கனவே மிரட்டியபடி, தனி வாக்காளர் தொகுதியை எதிர்த்துத் தம் புகழ் பெற்ற 'சாகும்வரை உண்ணாவிரதத்தை'த் தொடங்கினார்.

கடைசியில் அவரின் உயிரைக் காப்பற்ற வேறு வழியின்றி தாழ்த்தப்பட்ட மக்களுக்கான தனி வாக்காளர் தொகுதியையும் சட்டமன்றங்களில் தனிப் பிரதிநிதித்துவக் கோரிக்கையையும் கைவிட்டு, 'புனே' ஒப்பந்தத்தில் அம்பேத்கர் கையெழுத்திட்டார். காந்தியடிகளும் தம் உண்ணாவிரதத்தை முடித்துக்கொண்டார்.

அம்பேத்கர் மறுத்திருக்க முடியும். ஆனால் அவர் நம்பிய மக்கள் ஒரு 'கட்டில்' திரண்டறியாத பாமரர்கள். கம்மர்கட்டைக் காட்டிக்கூட மேல் வர்க்கத்தினர் அவர்களைக் கலைத்திட முடியும். அடிமைத்தனம் போதித்து வைத்த எசமான விசுவாசம், காவல் தெய்வமாய் வந்த அம்பேத்கரை விட அவர்களுக்கு முக்கியமாய்ப் போகக்கூடும். இதற்கெல்லாம் மேலாக, அம்பேத்கர் வென்று, காந்தியடிகள் உயிர்விட்டிருந்தால், சாதி இந்துக்களின் கொலை வெறித் தாக்குதலில் பஞ்சமர்களுக்கு சர்வநாசம் ஏற்பட்டிருக்கும். உண்மையில் அம்பேத்கர் தம் மக்களின் உயிரைக் காக்கும் பொருட்டே அவர்களைக் காந்திக் குல்லாய்க்குள் பதுங்க விட்டுவிட்டார்.

காந்தியடிகள் தாழ்த்தப்பட்டவர்களைக் கைதூக்கிவிடப் பிறந்த

படிப்பகம்

www.padippakam.com



மகான் என்றே அறியப்படுகிறார். முட்டாள்களின் மோசமான நகைச்சுவை கூட சில சமயங்களில் தத்துவார்த்தமாகத் தெரிவதுண்டுதானே.

1937இல் இந்திய மாநிலங்களில் காங்கிரஸ் அமைச்சரவை அமைக்கப்பட்டது. மத்திய மாநிலத்தில், டாக்டர் காரே தலைமையில் அமைச்சரவை உருவானது. அவர் தம் அமைச்சரவையில் அக்னிபோஜ் என்ற தாழ்த்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினரைச் சேர்த்துக் கொண்டார். (அதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்பே நீதிக் கட்சி அமைச்சரவையில் தாழ்த்தப்பட்டவர் அமைச்சராகி விட்டார்.)

அக்னிபோஜை அமைச்சராக்கியதை அடுத்து, டாக்டர் காரே-ஒரு பெரும் கணிப்புத் தவறு புரிந்ததாகவும், கட்டுப்பாடில்லாமல் நடந்து கொண்டதாகவும் குற்றம் சாட்டப்பட்டு காங்கிரசிலிருந்து உடனடியாக விலக்கப்பட்டார்.

"தாழ்த்தப்பட்டவரை அமைச்சராக்கியதும், தாழ்த்தப்பட்டவர்கள் மனதில் உயர்ந்த ஆசையையும் பெருத்த ஆர்வத்தையும் ஊட்டியதும்தான் நான் செய்த குற்றமும் கட்டுப்பாடின்மையும். அதற்காக என்னை எப்போதும் மன்னிக்கப் போவதில்லை என்று காந்தி சொன்னார்," என்று காரே மேடைதோறும் வெளிப்படையாக முழங்கினார். காந்தியடிகள் அதற்கு என்றுமே மறுப்பு தெரிவிக்கவில்லை. இதையும் டாக்டர் காரே பதிவு செய்துள்ளார்.

இதுதான் மகாத்மாவின் குறுக்கு வெட்டுத் தோற்றம்.

'தாழ்த்தப்பட்டவர்களின் மேம்பாடு எப்படி பெறப்படும் என்றால், அவர்களுக்குக் காலம் காலமாக இழைத்து வந்த கொடுமைகளுக்கு மாறாக சாதி இந்துக்கள் செய்யும் சேவைகளால் மட்டுமே' என்பது காந்தியத் தத்துவம். கடந்த அரை நூற்றாண்டாக அந்தச் சேவையின் இலட்சணத்தைப் பார்த்துக் கொண்டுதானே இருக்கிறோம்.

'செல்வந்தர்கள் தங்கள் சொத்துகளுக்குத் தர்மகர்த்தாக்களாக இருந்து, ஏழை மக்களுக்குச் சேவை புரிய வேண்டும்' என்று சொன்னவரும் காந்தியடிகள்தான். மலினங்களின் தொகுப்பே மனிதர்கள் என்றான ஒரு சமுதாயத்தில், மனிதர்களை மகான்களாக வைத்து தீர்வு சொல்லுகிறார் மகாத்மா. ராமன் அவருக்குக் காட்டிய வழி அதுவாயிருக்கலாம்.

இல்லாத ஊருக்குப் போகாத வழியைக் காட்டுவதில் மகாத்மாவுக்கு இருந்த சாமர்த்தியம் கோட்சேக்களுக்கும் புரியவில்லை; பாமரர்களுக்கும் உதவவில்லை.

விடுதலைப் போராட்டத்தில் இந்துமதத் தீவிரமும் பிராமண ஆதிக்கமும் தலையெடுத்ததின் மூன்றாவது எதிர்வினை முஸ்லிம்கள் பற்றியது.

"என்னதான் முயன்றாலும், எவ்வளவுதான் விட்டுக் கொடுத்தாலும், சகித்துப் போனாலும் நாம் தனிதான். இந்துக்கள் நம்

படிப்பகம்

www.padippakam.com



மைச் சமமாக மதிக்க மாட்டார்கள்,'' என்று முஸ்லிம் தலைவர்கள் முடிவெடுக்க நேர்ந்தது.

இந்து - முஸ்லிம் ஒற்றுமைக்கு உன்னதமான முன்னுதாரணமாகத் திகழ்ந்த ஜின்னாவே, பின்னாளில் முஸ்லிம்களுக்காக மட்டுமே பேசத் தொடங்கிவிட்டது இதனால்தான்.

“விடுதலை தள்ளிப் போனால் அது நாட்டுக்கு இழப்பு. இந்து-முஸ்லிம் ஒற்றுமை தள்ளிப் போனால் அது மனித குலத்தின் இழப்பு,'' என்று சொல்லிச் செயல்பட்ட அபுல்கலாம் ஆசாத், கடைசிக் காலத்தில் தன் நூலின் ஒரு பகுதியைத் தான் இறந்து 30 ஆண்டுகளுக்குப் பிறகே வெளியிட வேண்டும் என்று எழுதி வைத்துவிட்டுப் போனதும் இதன் காரணமாகத்தான்.

ஜின்னா முஸ்லிம்களுக்குத் தனி நாடு கோரியபோது, காந்தியடிகள் வழக்கம் போலத் தம் ‘சாகும்வரை உண்ணாவிரதம்' என்னும் சாகச ஆயுதத்தைக் கையிலெடுக்கவே செய்தார். ஆனால் ஜின்னா மசிந்து கொடுக்கவில்லை. காந்தியடிகள் அவருக்கு ‘காயிதே சாகர்' என்று பட்டம் கொடுத்துப் புகழ்ந்தார். இது வஞ்சப் புகழ்ச்சியா, அல்லது மெய்யான வார்த்தையா என்ற சந்தேகம் ஜின்னாவுக்குக் கடைசி வரை இருந்தது. எந்த ஆயுதமும் பலன் தரவில்லை என்ற போது, பிரிவினை தவிர்க்கப்படாமல் போனது. அதற்கான விலையாகப் பலியும் கொடுக்கப்பட்டது.

இந்தப் பிரிவினையோடு பிரச்சினை தீர்ந்திருக்க வேண்டும். ஆனால் அதற்குப் பிறகுதான் அது நிரந்தரப் பரிமாணத்தைப் பெற்றுவிட்டது. காரணம், இந்திய மக்களிடையே மதச் சார்பின்மை என்பதே உடைத்தெறியப்பட வேண்டிய தளையாக உருவகப்படுத்தப் பட்டுவிட்டது. மதச் சகிப்பின்மைதான் இந்திய வல்லமை என்றொரு பொய்த்தோற்றம் குடிகொண்டுவிட்டது. பிரிந்து போன பாகிஸ்தானியர்களும் சரி, போகாமல் நின்ற இந்திய முஸ்லிம்களும் சரி, வெருட்சியின் பிடிக்குள் சிக்கிக் கொண்டுவிட்டனர்.

இந்த அச்சத்தை முற்றாகத் துடைக்கும் வல்லமை இந்தியாவுக்கு மட்டுமே உண்டு. ஆனால் இந்திய வல்லமை மதம் சார்ந்த மீட்டுருவாக்கத்தின் பொய்க் குழிக்குள் சிக்குண்டுவிட்டது என்பது தான் திகைப்புக்குரிய வீழ்ச்சி.

இந்தியா இன்று அச்சம் கொள்ளும்படியான வல்லமை மிக்க நாடு. ‘அச்சம் கொள்ளும்படியான' என்னும் அடைமொழிக்குப் பல பரிமாணங்கள் இருப்பினும், அதன் தலையாய பரிமாணம்—தியாக புத்தியும், தேசப்பற்றும், ஆலமரம் போல் நின்று அனைவரையும் அரவணைக்கும் நேசமும், மலினங்களைப் புறந்தள்ளி நிற்கும் ஆளுமையும் கொண்ட தேசியத் தலைவன் ஒருவன் இல்லாமை என்பதுதான். இன்றைக்குள்ள தலைவர்கள் யாவரும் அன்றையப் பொழுதைத் தங்கள் சுய மோகத்துக்குப் பங்கம் வராமல் ஓட்டிக் கொண்டிருக்கிறவர்களே. இது இந்தியா போன்ற ஒரு வளரும் நாட்டின்- பழமை வேர்களின் சங்கிலித் தொடர்களில் எப்போதும் சிக்கிக் கொள்ளத் தயாராயிருக்கும் பௌராணிக தேசத்தின் மோசமான சாபம்.

படிப்பகம்

www.padippakam.com



எப்போதுமே ஒரு தேசம் அதன் மக்களுக்கு உண்மையைக் கவசமாய்ப் பூண்டு, நியாயத்தை மொழியாகப் பயின்று, சத்தியத்தை வழியாகக் கொண்டு, நட்பைக் கரங்களாக வளர்த்து; உலக சகோதரத்துவ இலக்கை நோக்கிப் பயணம் மேற்கொள்ளும் புனித பூமியாகத்தான் அறிமுகப்படுத்தப்படுகிறது. இந்தியாவும் நமக்கான தேசிய தளத்தில் அவ்வாறே அறிமுகமாகியுள்ளது. ஆனால், சர்வ சேசிய தளத்தில் ஒவ்வொரு நாட்டுக்கும் ஒரு முகம் உண்டு. அண்டை நாடுகளின் அணுகு முறையும், உள் நாட்டிலேயே அன்னியமாகும் அபாயத்திற்காளானவர்களின் உணர்வுகளும் அந்த முகத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடிகள். இந்தியாவின் பிம்பத்தையும் அவ்வாறே நம்மால் அறிய முடியும்.

சுதந்திர இந்தியாவில் சர்தார் வல்லபாய் படேல் தம் ராஜதந்திரத்தால் எல்லா சமஸ்தானங்களையும் இந்தியாவுடன் இணைத்தார். ஹைதராபாத் நிஜாம் மட்டும் கொஞ்சம் முரண்டு பண்ணினார். அவர் ஒரு முஸ்லிம் மன்னர். அவருடைய குடிமக்களோ 80 சதவீதம் பேர் இந்துக்கள். அவர் தன் சமஸ்தானத்தை பாகிஸ்தானோடு இணைப்பதாகச் சொல்லவில்லை என்றாலும் கொஞ்சம் முரண்டு பிடித்தார். உடனே படேல் அதிரடி நடவடிக்கையாக வெறும் போலீஸ் பட்டாளத்தைக் கொண்டே அவரை வழிக்குக் கொண்டுவந்து, அவரது சமஸ்தானத்தை இந்தியாவுடன் இணைத்துவிட்டார். அந்த அரிய செயலுக்காகத்தான் அவர் ‘இரும்பு மனிதர்’ என்று அழைக்கப்பட்டார். (உண்மையில் அவர் ஒரு நோயாளி மனிதர்.)

அவர் செய்தது சரி. நிஜாம் ஒரு முஸ்லிம் என்பதற்காக இஸ்லாமிய நாடான பாகிஸ்தானோடு இணைத்து, பெரும் பகுதி மக்களைச் சிறுபான்மைக் குடிமக்களாக மாற்றுவதைவிட மதச்சார்பின்மை நாடான இந்தியாவுடன் இணைத்து, சிறுபான்மை - பெரும்பான்மை என்ற பேச்சுக்கே இடமின்றி, 20 சதவீதம் இஸ்லாமியர்களும் சமத்துவம் மிக்க குடிமக்களாய் வாழச் செய்த அவருடைய செயல் நூற்றுக்கு நூறு சரிதான். அதற்காக நாம் கர்வப்படலாம்.

பாகிஸ்தான் பிரிவினையைத் தொடர்ந்து, காஷ்மீரத்தின் மேல் இஸ்லாமிய மலை ஜாதியினரின் ஆக்ரமிப்பு நடந்தது. அதைச் சமாளிக்க முடியாத - அப்போது காஷ்மீரை ஆண்ட அரசரான ஹரிசிங் இந்தியாவின் உதவியை நாடினார். அரசர் இந்து எனினும், மக்களில் 85 சதவீதம் பேர் ‘அப்போது’ வெள்ளை மனங்கொண்ட இஸ்லாமியர்கள்.

ஹரிசிங் காஷ்மீரை இந்தியாவுடன் இணைக்கச் சம்மதித்ததன் பேரில், இந்தியா படை நடத்தி, மலை ஜாதிப் போர்வையிலான பாகிஸ்தானிய படையைத் தடுத்து நிறுத்தியது. ஆயினும் கணிசமான பகுதியைப் பாகிஸ்தான் அதற்கு முன்பே தன் வசப்படுத்திக் கொண்டுவிட்டது.

பிரச்சினை ஐ. நா.வுக்குச் சென்றது. அங்கு காஷ்மீரிகளின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் சுய நிர்ணய வாக்கெடுப்புக்குச் சம்

படிப்பகம்

www.padippakam.com



மதம் தெரிவிக்கப்பட்டது. அது இன்றுவரை நடைபெறவில்லை. பாகிஸ்தானும் இந்தியாவும் ஒன்றையொன்று குற்றம் சாட்டிக் கொள்வதிலேயே காலம் கழித்துவிட்டன. மேலும் பாகிஸ்தானின் ஆத்திரமும், அவசரமும், அதீத உரிமை கோரலால் நேரும் வரம்பு மீறலும் அதிகப்படியான காரணங்கள் என்பதில் நமக்கொரு சமாதானம்தான். இடையில் தேர்தல்கள் வந்தன. காஷ்மீர் சிங்கம் ஷேக் அப்துல்லா வந்தார். 'ரத்தத்தின் ரத்தமே' என்னும்படிக்கு ஜவாகர்லாலின் உற்ற நண்பர் அவர். காஷ்மீர் மக்களின் நலம் காக்கும் தலைவராக, இந்தியாவின் உரிமைகளை கேள்விக்குள்ளாக்காத வரை காஷ்மீர் பிரதம மந்திரியாக ஆண்டார். ஒரு கட்டத்தில் காஷ்மீரிகளின் சுய நிர்ணய உரிமையைக் கோர நேர்ந்த போது அவர் சிறையில் அடைக்கப்பட்டார். பதினான்கு ஆண்டுகள். நம்மூர் கொடைக்கானலில்தான் வாசம்.

சோவியத் யூனியனின் அரசியல் சட்டம் ஒவ்வொரு மாநிலத்துக்கும் பிரிந்து போகும் உரிமையை வழங்கியிருந்தது. ஆனால் ஸ்டாலின் காலத்தில் அது பேசப்பட முடியாத குற்றமாக இருந்தது. அதே குற்றம் கொர்பசேவ் காலத்தில் செயல் வடிவம் பெற்ற சட்டமாகி சோவியத் யூனியன் சிதறுண்டு போனது. அதே வகையிலான சுயாட்சி கோரும் உரிமையை இந்திய மாநிலங்களுக்கும் அரசியல் சட்டம் வழங்குகிறது. ஆனால், அது இன்றுவரை ஸ்டாலின் கால நிலவரம் போல, மதச் சார்பின்மை பேசும் சர்வாதிகார மைய அரசால் ஊமையாக முடக்கப்பட்டுள்ளது.

ஷேக் அப்துல்லா மீண்டும் முதலமைச்சராக்கப்பட்டார்.

இடைப்பட்ட காலத்திலும், இப்போதும் காஷ்மீர் பற்றி ஐ.நா. சபையில் இடைவிடாத விவாதம். இந்திய மதச் சார்பின்மையிலும், குடியுரிமையிலும் ஆழ்ந்த நம்பிக்கை கொண்ட இந்திய முஸ்லிம்களே இந்தியா சார்பில் பதிலளிக்கிறார்கள். அந்த நாளில் M. C. சாக்ளா— அவர் ஒரு முஸ்லிம் என்பதே பலருக்குப் பல காலம் தெரியாது. அவர் ஒருமையுணர்வு அப்படி. இந்த நாளில் நம் வெளியுறவுத் துணை அமைச்சர் சல்மான் குர்ஷித். முன்னாள் குடியரசுத் தலைவர் ஜாகிர் உசேனின் பெயரர்.

சமீபத்தில்கூட இஸ்லாமிய கூட்டமைப்பு நாடுகளின் ஆதரவுடன், காஷ்மீரில் மனித உரிமை மீறப்படுவதாக இந்தியாவுக் கெதிரான தீர்மானமொன்றை பாகிஸ்தான் கொண்டுவர முனைந்து, போதிய ஆதரவில்லாமல் தோல்வியுற்றது. இந்த விஷயத்தில் இஸ்லாமிய கூட்டமைப்பு நாடுகளிடம், "இந்தியாவுக்கெதிரான இந்தத் தீர்மானத்தை நீங்கள் ஆதரித்தால், இந்தக் கூட்டமைப்பை உடைப்பது பெரிய விஷயமாகிவிடாது," என்று சல்மான் குர்ஷித் எச்சரித்தே வெற்றி பெற்றிருக்கிறார். (பத்திரிகை செய்தி. இதைக் கேட்டு இந்தியா இவ்வளவு வலிமையுள்ளதா என்று வாய் பிளந்து மகிழலாம் நாம்.) பொதுவில் இந்தியாவுக்கெதிரான பாகிஸ்தானின் எந்தத் தீர்மானத்துக்கும் இஸ்லாமிய நாடுகள் தரும் ஆதரவு இந்திய முஸ்லிம்களை எரியும் நெருப்பில் தள்ளிவிடும் காரியமே

படிப்பகம்

www.padippakam.com



என்று அவரால் வற்புறுத்தப்படுகிறது.

அவரைக் கருங்காலி என்கிறார் பாகிஸ்தான் பிரதமர். அவர் சொல்வது இருக்கட்டும். இந்து மதவாதிகள் அவருக்கு உதட்டள வில் 'சபாஷ்' சொன்னாலும் மனத்தளவில் அவரும் அவரைப் போன்ற தேசிய இஸ்லாமியரும் 'கருப்பு ஆடுகளாகவே' இருத்தப் படுகிறார்கள். தங்கள் பெண்களைப் புருஷன்மார்களின் பிணங் களோடு சேர்த்தெரித்து, கோயில் கட்டிக் கும்பிடும் நம் மதவாதி கள் தஸ்லிமா நஸ்ரினுக்காகப் பெண்ணுரிமை பேசுகிறார்களே-அதற்கென்ன அர்த்தமோ, அதே அர்த்தம்தான் சல்மான் குர்ஷித் பெறும் 'சபாஷு'க்கும்.

காஷ்மீர் விவகாரத்தில் நம் தலைவர்கள் ஒட்டுமொத்தமாக, "அது இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதி. உலகத்தின் எந்தச் சக்தியும் அதைப் பிரிக்க முடியாது," என்று அடித்துக் கூறுகின்ற னர். சென்ற சுதந்திர நாள் விழாவில் செங்கோட்டையில் நின்று கொண்டு, "காஷ்மீர் பற்றிப் பாகிஸ்தானோடு நமக்கு ஏதேனும் பிரச்சினை இருக்குமானால், அது பாகிஸ்தான் வசமுள்ள பகுதி யினை மீட்பதொன்றுதான்," என்றொரு ஆண்மை மிக்க வாக்கி யத்தை நரசிம்மராவ் திருவாய் மலர்ந்தார். கேட்டு விம்மிதங்கொள் ளத் தோன்றியது.

இத்தனைக்கும் பிறகு கொசுறாக, "காஷ்மீர் பிரச்சினையை சிம்லா உடன்படிக்கையின்படி பேசித் தீர்த்துக்கொள்ள இந்தியா எப்போதும் தயார்," என்றும் சொல்கிறார்கள். இதன் தத்துவம் என்ன? நான் ஒரு சராசரி குடிமகன். விளங்க மறுக்கிறது.

நடைமுறையில் ராணுவத்தின் துணையோடுகூட கஷ்மீரில் நம் தேசியக் கொடியை ஏற்ற முடியவில்லைதான் எனினும் என் தேச பக்தி காஷ்மீரை இந்தியாவிலிருந்து பிரித்துப் பார்க்கச் சம்மதிப்ப தில்லை போங்கள். (முரளி மனோகர் ஜோஷிக்கு நான் இளப்பமா என்ன!) பாரத மாதாவுக்குக் காஷ்மீர்தான் நெற்றிப் பொட்டு மாதிரி. இந்தக் கூத்தை பாருங்கள்: காஷ்மீரின் பெரும்பாலான மக்கள் நெற்றிப் பொட்டு வைத்துக் கொள்ளாதவர்கள். ஆனாலும் என் பாரத மாதா காஷ்மீரை நெற்றித் திலகமாக அணிந்து, மங்கல மான இந்துப் பெண்ணாகத்தான் என்னுள் படிமங் கொள்கிறாள். "ஏ மாதா! என் இஸ்லாமிய சகோதரர்களுக்கு நீ இன்னொரு படிமங் கொள்வாயல்லவா? அல்லவெனில், அவர்களை என்ன செய்ய நினைத்தாய்?" என்று கூவத்தான் வேண்டும்.

பாகிஸ்தானும் இந்தியாவுக்கெதிராக இடைவிடாமல் ஓங்கிக் குரல் கொடுக்கிறது. பயங்கரவாதிகளை ஊடுருவச் செய்கிறது. இந்திய நகரங்களைக் குறி வைக்கிறது. இந்தியாவோடு ஆயிரங் காலத்துப் போருக்காகவே பிறந்தது போல் ஒரு மனோபாவத்தை உற்பத்தி செய்துகொண்டிருக்கிறது.

ஏன்?

குல்திப் நய்யார் சொல்வது கவனத்துக்கு வருகிறது. "இந்தியா முன் வந்து 'பாகிஸ்தானின் ஒருமைப்பாட்டுக்கு நாங்கள் துணை

படிப்பகம்

www.padippakam.com



நிற்போம். அது சிதறுண்டு போவதை நாங்கள் அனுமதியோம்,'' என்று உறுதி சொல்லட்டும். அடுத்த நிமிஷமே அது பேச்சுவார்த்தைக்கு வந்துவிடும்,'' என்கிறார்.

அதாவது, பாகிஸ்தான் அச்சத்தின் பிடியில் சிக்கியுள்ளது என்பதுதானே? இந்தியா தன்னை அழித்துவிடுமோ என்னும் அச்சம் அது. யோசித்தால் நியாயமாகத்தான் படுகிறது. 1971இல் இந்தியா பங்களாதேஷை முளைக்க வைக்கவில்லையா. அது என்ன சாதாரண இழப்பா! பாதிக்கு மேற்பட்ட மக்களும் கங்கைப் படுகையும் கை நழுவிப் போன கொடுமை. பாகிஸ்தானுக்கு எப்போதும் சிந்து மாகாணத்திலும் பலுசிஸ்தானத்திலும் இன்னும் சில இடங்களிலும் பிரச்சினைகள் உள்ளன. இவையெல்லாம் இந்தியாவினால் தீவிரப்படுமோ என்னும் அச்சம் இருக்கத்தான் இருக்கும்.

அந்த வாக்குறுதியை இந்தியா அளிக்குமா? அளிக்குமானால் அந்தக் கணமே இந்திய முஸ்லிம்களின் அச்சமும் அகன்றுவிடும். அல்லாமல் போனால், 'பாகிஸ்தானைப் பிரித்துக் கொண்டு போன பின் இவர்களுக்கு இங்கென்ன வேலை?' என்னும் பாமரத்தனமான (தாகத் தோன்றும் ஈவிரக்கமற்ற மதவாதக்) கேள்வி அவர்களைக் குறி வைத்துக் கொண்டுதானே இருக்கும்?

இந்தியாவின் மற்ற அண்டை நாடுகளும் வேறு வகையான காயங்கள் கொண்டுள்ளன. இறையாண்மை, சமத்துவம் பற்றிய காயங்கள்.

பங்களா தேஷ் பிறந்த பின், சில காலம் அது இந்தியாவின் ஒரு மானிலம் போலவே இந்திய அரசாலும், பனியாக்களாலும் அடாவடித்தனமான ஆக்ரமிப்புக்கு உள்ளானதாக அந்த நாட்டுத் தீவிர சுதேசிகள் கோபமுற்றனர். 'வங்க பந்து' என்று தலைமேல் வைத்துக் கொண்டாடப்பட்ட முஜிபுர் ரஹ்மான் இந்திய அக்ரமத்தைக் கண்டு கொள்ளாததோடு, அவரே ஊழலின் அங்கமாகிவிட்டார் என்னும் கோபமும், அதைத் தொடர்ந்து அவர் கொலையும் நிகழ்ந்தன. அத்தோடு பங்களாதேஷ்- இந்தியா உருவாக்கிக் கொண்ட இன்னொரு திருகு வலியாகத் தன்னை நிலைநிறுத்திக் கொண்டது.

நேபாளத்திற்கும் இந்தியாவின் மேல் குறையுண்டு.

இந்தியக் குற்றவாளிகள் நேபாளத்துள் நுழைந்துவிட்டதாகக் கூறிக் கொண்டு, 'அன்னிய நாட்டில் நுழைகிறோமே' என்கிற சுரணையே இல்லாமல் அதன் தலைநகர் வரைகூட சர்வ சுதந்திரமாய் நடமாடும் இந்தியப் போலீஸ்காரர்கள். இது போன்ற அத்துமீறல்களைச் சகிக்க முடியாமல் சில போலீசாரை நேபாளம் சிறையிலடைத்தது. இந்தியா அதுபற்றி அவமானமோ, வருத்தமோ கொண்டதாகத் தெரியவில்லை. சமீபத்தில், தனிப் பெரும் கட்சியாக வென்ற கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர் மன்மோகன்சிங் அதிகாரி ''நாங்கள் பதவிக்கு வந்தால் (வந்தாயிற்று) இந்தியாவுடனான ஒப்பந்தங்களை சமத்துவ அடிப்படையில் மீண்டும் பரிசீலிப்போம்'' என்று சொல்லக்கூடிய நிலைமை. ''டில்லியில் தலையாட்டிவிட்டு

படிப்பகம்

www.padippakam.com



வந்து, காட்மாண்டுவில் கதை பேச மாட்டோம்,'' என்றும் சொல்கிறார். 'இந்தியாவில் 20 லட்சம் நேபாளிகள் படை வீரர்களாகவும் பிற பணியாளர்களாகவும் வாழ அனுமதிக்கிறோம்' என்னும் பிரபுத்துவ குணம் இந்தியாவுக்கிருக்கலாம். இந்தியா ஒன்றும் சும்மா அவர்களை வாழ வைத்துவிடவில்லை. அப்பழுக்கற்ற அவர்களின் சேவையைப் பெற்றுக்கொண்டுதான் சோறு போடுகிறது. 'சேவை' என்பது இந்தியாவில் மரியாதைக்குரிய திருடர்களின் பிச்சைக்கார வார்த்தைதானே இப்போது.

இந்திரா காந்தி இருந்த வரையில் 'ஈழத் தமிழ் இளைஞர்களை 'என் பையன்கள்' (My Boys) என்றே அங்கீகரித்து, ஈழ விடுதலைப் போராட்டத்திற்கான எல்லா உதவிகளையும் செய்தார். (ஓரளவு உலகம் அறியவேதான்.) இந்திராவின் மகன் ராஜீவ் காந்தி யாழ் நகர் சிங்கள முற்றுகையில் கிடந்த போது விமானங்களை அனுப்பி உணவுப் பொட்டலங்களை வழங்கச் செய்தார். இந்த மனிதாபிமான உதவிக்கெல்லாம் இலங்கை அரசின் அனுமதியை இந்தியா போன்ற ஒரு கண்ணியமிக்க நாடு பெற வேண்டுமா என்ன?

முடிவில் இலங்கை அரசுடனான உடன்பாட்டுக்குச் சம்மதம் பெற, விடுதலைப் புலிகளின் தளபதி வேலுப்பிள்ளை பிரபாகரன் டில்லிக்குக் கொண்டு வரப்பட்டு, நட்சத்திர விடுதியில் ராஜ மரியாதையோடு தனி அறையில் சேமித்து வைக்கப்பட்டார். சம்மதம் பெற்ற பிறகுதான் சகல மரியாதைகளுடன் விடுவிக்கப்பட்டதாகத் தகவல். இந்தியா எதையும் தன்னிச்சையாகத்தான் செய்யும். பிறர் இச்சை பற்றிக் கவலை கொள்ள ஏது நேரம்?

எத்தனை சின்ன மனிதனுக்கும் தன்மானம் ஒன்றிருக்கும் என்பதை இந்தியப் பிரதமர் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை. அதற்கான விலை அற்பசொற்பமல்ல. ஆயிற்று. ராஜீவ் மரணத்தோடு 'ஈழ மக்களின் அவலம்' பற்றிப் பேசுவதே ஒரு குற்றமாகி விட்டது. அன்னை ஊட்டி வளர்த்த விடுதலை இயக்கம் மகன் மரணத்தில் தடை செய்யப்பட்டுவிட்டது.

ஆனால் ஈழ மக்கள் என்ன செய்தார்கள்?

''பாகிஸ்தான் பிடிக்குள் கிழக்கு வங்காள மக்கள் படும் அவலத்தைத் துடைக்க இந்தியா படை அனுப்பி உதவ வேண்டும். இல்லையேல் மேற்கு வங்கம் தன் காவல் படையை அனுப்பும்,'' என்று மேற்கு வங்க அரசு தீர்மானம் நிறைவேற்றியதுண்டு. நாடு வேறாயினும் மொழியால் பெறப்பட்ட ஒருமையுணர்வு அது. ஆனால் இங்கே? ஈழத் தமிழர்களின் கடைசித் துகளும் தமிழகத்திலிருந்து துடைக்கப்பட வேண்டும் என்பதில் சர்வ கட்சித் தலைவர்களிடையேயும் பலத்த போட்டி. நாமக்கல் கவிஞர் கண்டு சொன்ன தமிழனின் தனிக்குணம் இதுவாய்த்தான் இருக்கும்.

இந்தியாவின் அயலுறவுக் கொள்கை கோப தாபங்களால்தான் வகுக்கப் படுகிறதோ? அப்படியும் சொல்வதற்கில்லை. செஞ்சீனம் ஐ. நா. வில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும் என இந்தியா முன்

படிப்பகம்

www.padippakam.com



வைத்த கோரிக்கையை— சீனா, இந்தியாவைத் தாக்கி, இந்திய மண்ணை அபகரித்த பின்னும், தன் அவமானங்களை விழுங்கிக் கொண்டு மீண்டும் வலியுறுத்தவே செய்தது. தன்னிலும் வல்லமையுள்ளவர்களிடம் மட்டும்தான் இந்தியா சகிப்புத்தன்மையோடு தன் கோப தாபங்களை ஒதுக்கித் தள்ளிவிட்டு நியாயங்களை மட்டுமே முன்வைக்கும் என்று தெரிகிறது.

ஈழப் போராட்டத்தைப் பொறுத்தவரை நம் தமிழ் நாட்டு அறிவு ஜீவிகள் சில காலத்துக்கு முன்பே பேசிவைத்துக் கொண்டவர்களைப் போல் அதைக் கொச்சைப் பொருளாக்கித் தங்கள் காகிதக் குப்பையில் அள்ளிக் கொட்டிவிட்டார்கள். இவர்களின் இப்போதைய முயற்சி 1965 இல் நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைத் துச்சப்படுத்துவதுதான்.

இது போன்ற விஷயங்களில் அவர்கள் ஒன்று கூடிப் பேசிக் கொள்ளவே வேண்டாம். அவர்களுக்குள் ஒரு டெலிபதி உணர்வுப் பரிமாற்றமே நேர்ந்துவிடும்.

இந்தியாவின் சர்வ தேசிய முகம் அதனுடைய தேசிய முகத்தின் அசல் பிம்பம்தான் எனில், அதன் முகத்தில் புதிதாக ஒரு ரத்த நாளம் புடைத்துக் கொண்டு ஓடுவது தெரிகிறது. அதில் இந்து மத மறுமலர்ச்சி என்னும் புது ரத்தம் பாய்ச்சப்படுகிறது.

பிராமணர்களின் வாழ்க்கைச் சாரமே மதச் சுரணையோடு இருப்பதுதான். மேலும் அவர்கள்தான் இந்த நாட்டின் அறிவு வங்கியாக அடையாளப் படுகிறார்கள்.

மதம் மனிதர்களை ஒருமைப்படுத்தத்தான்; அறிவு அடுத்தவரையும் உயர்த்திவிடத்தான். பிராமணர்களிடம் இந்த இரண்டும் இசகு பிசகாகப் பொருந்திப் போயின. மதத்தைக் கொண்டு மற்றவர்கள் கையேந்தவும், இவர்கள் பிரசாதம் வழங்குவுமான ஒரு பீடத்தைத் தேடிக்கொண்டார்கள். அறிவைக் கொண்டு அரசியல் தளத்தில் தங்கள் புத்தியைக் கூர் தீட்டி, தீட்டிய மரத்திலேயே கூர் பார்க்கும் சாகசம் பயின்று கொண்டார்கள். அரசர்கள் காலத்திலும், ஆக்கிரமிப்பாளர்கள் காலத்திலும் இவர்கள் சிம்மாசனத்தின் கால்களாய்த்தான் நின்றார்கள். (பிராமண ரிஷிகள் நாடாண்ட கதைகள் புராணங்களில் உண்டுதான்.) இந்த சுதந்திர இந்தியாவில்தான் முதன் முறையாக சிம்மாசன வாசியாகவும் உட்கார்ந்துவிட்ட்டார்கள். இது அவர்களின் உச்சம்தான் என்றாலும் முதல் முறையாக உட்கார்ந்துவிட்டார்கள். இது இசை நாற்காலி காலம். இசை நின்றதும் யார் வேண்டுமானாலும் உட்காரலாம். வல்லவர்களுக்கு அந்த வாய்ப்பு அதிகம். என்னவாயினும் இவர்கள் ஆளப்பிறந்தவர்கள் என்பதைவிட ஆட்டி வைக்கப் பிறந்தவர்கள். இந்து மதவாதம் என்னும் வேப்பிலையைக் கொண்டு ஆட்டுவிக்கிறார்கள். ஆளவும் ஆட்படுத்தவும் ஒருசேரக் கிடைத்த சந்தர்ப்பத்தால், மதவாதம் ஒரு இயக்கமாகி, அந்த இயக்கத்தின் ஒற்றைப் பரிமாணமே முஸ்லிம்களை அடக்குவதுதான் என்பது வானுக்கும் மண்ணுக்குமாக வளர்த்துக் காட்டப்படுகிறது.

படிப்பகம்

www.padippakam.com



ஆயிரம் ஆண்டு கால அன்னிய ஆதிக்கத்தால் அழிந்து போகாத மதம் சுதந்திர இந்தியாவில் அழிந்து போய்விடும் என்றா இவர்கள் பதைக்கிறார்கள்? இல்லை. இதுதான் மற்ற மதங்களைத் துடைத்தெறியக் கிடைத்த மகத்தான சந்தர்ப்பம் என்ற கணிப்புதான். ஆக்ரமிப்பாளர்களின் மதமாக வந்து இந்தியாவின் ஒரு பகுதியை ஆளும் மதமாக மாறிவிட்ட இஸ்லாத்தை இந்த மண்ணிலிருந்து அகற்றிவிட வேண்டும் என்னும் ஆவேசம்தான். மொழிகளில்- பேசப்படாத மொழியாக சமஸ்கிருதம் இருப்பது போல், மதங்களில்- பின்பற்றப் படாத மதமாக ஒன்றிருந்தால் அது வேண்டுமானால் அகற்றப் படலாம். ஆனால், இந்தியாவின் 20 சதவீத சகோதரர்களின் இளைப்பாறும் நிழலை எவனால் சிதைத்துவிட முடியும்? இந்த எண்ணமே இந்துமதத்துக்கு இவர்கள் வைக்கும் கொள்ளியாகிவிடாதா?

இஸ்லாமும் இஸ்லாமிய சகோதரனும் எனக்கு அன்னியம் என்றால், 'பிள்ளையார் ஊர்வலம்' என்ற பெயரில் வெறியாட்டம் நடத்துகிற மார்வாடிகளோடு மட்டும் எனக்கென்ன உறவு?

திலகர், சுதந்திரப் போராட்டத்தை மக்கள் இயக்கமாக மாற்ற கணேஷ் சதுர்த்தியைப் பிரபலப்படுத்தினாராம். அரசியலில் மதத்தைக் கலந்ததன் மறுபக்கத்தைத்தான் இன்று அனுபவிக்கிறோமே. சென்னையில் ஒரு பத்தாண்டுகளுக்கு முன் பிள்ளையார் ஊர்வலம் ஏது? இந்து மத இயக்கங்கள் முஸ்லிம்களைக் காயப்படுத்தத்தானே அதைத் தெருவுக்கு இழுத்து வந்தன? இதன் எதிரொலியாகத்தானே முஸ்லிம்களும் மிலாது நபி ஊர்வலம் நடத்துகிறார்கள்? கண்ட பலன் என்ன? மனிதர்களாய் வாழ்ந்தவர்கள் நாய் நரிகளாய்க் கடித்துக் குதறிக் கொள்கிறார்கள்.

இஸ்லாம் பற்றியும் இஸ்லாமியர்கள் பற்றியும் இங்கே கொஞ்சம் சொல்ல வேண்டும்.

பொதுவாகவே முஸ்லிம்கள் யாரைவிடவும் தீவிர மதப்பற்றும் தொழுகை நியதிகளும் கொண்டவர்களாய் இருக்கிறார்கள். விமர்சனங்களைச் சகிக்காத இவர்களின் சுதந்திரமற்ற மருட்டும் நம்பிக்கைக்கு மரண வாக்குமூலங்களாய் சாட்சி சொல்கிறவர்கள் சல்மான் ருஷ்டியும், தஸ்லிமா நஸ்ரினும். எகிப்து போன்ற சில இஸ்லாமிய நாடுகளில் மதம் உறுத்தலில்லாமல் நவீன காலத்துக்கேற்றபடி பின்பற்றப்படுகிறதுதான். ஒருவகையில் இந்திய மதச்சார்பின்மையைவிட, சதாம் ஹுசேன் நிலைநாட்டியுள்ள மதச்சார்பின்மை போற்றும்படியாகவே உள்ளது.

ஆனால் இந்தியாவில் நீக்குப் போக்கில்லாத கடுமையில்தான் சிக்கியுள்ளது. இந்திய முஸ்லிம்களில் 70 சதவீதம் பேர் சேரிகளில் தான் வாழ்கிறார்கள். இஸ்லாமிய மத குருமார்கள் இம்மக்களின் கல்வி, சமூக, பொருளாதார மேம்பாட்டுக்காக ஒரு துரும்பைக் கூட எடுத்துப் போடுவதில்லை. மதக் கோட்பாடுகளை மட்டும் மக்களின் மேல் கடுமையாகப் பரிபாலனம் செய்ய முனைகிறார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



இந்தக் கடுமைக்கு நாம் புரிந்து கொள்ளும்படியான ஒரு காரணமும் இருக்கிறது.

இந்தியாவில் இஸ்லாம் ஒடுக்கப்படுகிறவர்களின் மதமாகிவிட்டது. ஆகவே ஒரு கோட்பாடு சரியா தவறா என்பதைக் காட்டிலும் பிடிவாதமாய் அனுசரிப்பதன் மூலமே தங்கள் இனக்குழுவைக் கட்டுடையாமல் காத்துக் கொள்ளமுடியும் என்னும் மனோ பாவம் வளர்ந்துவிட்டது. அதனாலேயே 'ஷாபானு தீர்ப்பு' போன்றவற்றையும் ஒன்று திரண்டு எதிர்த்தார்கள். நல்லதோ - கெட்டதோ, ஒன்றை விட்டுக்கொடுத்துவிட்டால், பின்னர் ஒவ்வொன்றாய்ப் பறிகொடுத்து, முடிவில் ஒட்டு மொத்த அடையாளத்தையும் இழக்க நேருமோ என்னும் அச்சமே அவர்களை ஆட்டிப் படைக்கிறது.

மதம் சார்ந்து அவர்கள் இத்தனை கடுமையாக, நெகிழ்ச்சியற்று நடந்து கொண்டாலும் இந்தக் கடுமை, பிற மதக்குழுக்களோடான அவர்களின் சகவாழ்வைக் கொஞ்சம் கூடப் பாதிப்பதில்லை. காரணம் அவர்கள் தீட்டு பார்ப்பதில்லை. இந்த விஷயத்தில் இந்து மதம் தவிர எல்லா மதங்களுமே மேன்மையானவை தான்.

இந்துக்கள் தீட்டு பார்க்கிறவர்கள்; ஜாதி பார்க்கிறவர்கள். வேறெந்த மதமும் குறிப்பாக இஸ்லாம் தீட்டு என்று சொல்லி யாரையும் தூர நிறுத்துவதில்லை.

பிராமணர்களுக்கு பக்தி முக்கியம். பக்தி என்று வந்துவிட்டால் அவர்கள் பத்து வயது குழந்தைகள்தான். தெய்வத்தைத் தொழாமல், கோயிலைக் கும்பிடாமல் அவர்கள் நாள் முழுமை பெறுவதில்லை. ஆனால் கோயிலில் ஒரு தாழ்த்தப்பட்டவன் ஆராதனைத் தட்டை எடுக்கட்டும். சத்தியமாக அவர்கள் கோயிலுக்குப் போவதையே அடியோடு நிறுத்திவிடுவார்கள். காரணம் தெய்வத்தைவிடவும் அவர்களுக்குத் தீட்டு முக்கியம். (தீட்டு என்பது தொட்டுக் கொள்கிற விஷயமட்டுமல்ல.) இந்தக் கோளாறுகளோடு இந்து மதவாதிகள் முஸ்லிம்களைச் சீண்டுவது அவர்களை அச்சத்தால் ஆர்ப்பரிக்க வைக்கத்தானே.

முஸ்லிம்களின் இன்றைய ஆத்திர வெளிப்பாடுகள் யாவும் பின்னாளில் அவர்களின் சுதந்திரத் தாகத்தின் வெளிப்பாடாகக் கருதப்படும் நிலைக்கு அவர்களைத் தள்ளலாமா? ஆஷ் துரையைக் கொன்ற வாஞ்சிநாதன் கோபம் சுதந்திரக் கனலின் வெளிப்பாடு தானே. அலி சகோதரர்களின் ஆயுதப் போராட்டம் விடுதலைப் போருக்கான சுதந்திர வேள்விதானே. அந்த விடுதலை கிடைக்காத போது அவர்கள் செயல் பயங்கரவாதம்தான்.

நீங்கள் நினைக்கிற மாதிரி அவர்கள் எங்கும் ஓடிவிடமாட்டார்கள். இது அவர்கள் பிறந்த மண். இந்துவாய் இருப்பவனுக்குத்தான் இந்த மண் என்று இழிவழக்குப் பேசி இடைவிடாத நெருக்குதலை உண்டாக்கினால், இன்னொரு பிரிவினைதான் கடைசித் தீர்வாகும். அப்படியொரு நிலை வந்தால், இஸ்லாமியர்

படிப்பகம்

www.padippakam.com



கள் மட்டும் பிரிய மாட்டார்கள். இவர்களை விடவும் ஊழித் தீயாய்க் கனன்றெழப் போகும் தலித்துகளும் பிரிவார்கள்.

அன்றைக்கு காந்தியடிகள் 'சாகும்வரை உண்ணாவிரதம்' தொடங்கி, தாழ்த்தப்பட்டவர்களின் அரசியல் தளத்திலான சமூக சமத்துவத்தை முடக்கினார். அதற்கு அவர் சொன்ன சமாதானம் 'இந்து மதம் பலவீனப் பட்டுப்போகும்' என்பதாகும். ஆனால் அன்றே அத்தனை தாழ்த்தப்பட்ட மக்களும் ஒட்டு மொத்தமாய் இஸ்லாமியர்களாய் மாறி, காந்தி முடக்கிய அதே உரிமையைப் பெற்றிருக்கக் கூடும். அப்படியொரு மாற்றம் நிகழ்ந்திருந்தால் அடிகள் ரொம்ப நிம்மதியாய், "இந்து மதம் புனிதம் பெற்றுவிட்டது," என்றுகூடச் சொல்லியிருக்கலாம். தலித்துகள் என்றும் இந்துக்கள் அல்லர். இந்த இருவரும் போனபின் இங்கென்ன மிஞ்சும்? ஒட்டுண்ணிகளும், புல்லுருவிகளும்தான். புதிய தலித்துகளும் பிறப்பிக்கப்படுவார்கள்.

ஜாதி மேன்மை பேசும் ஏழை மனிதர்கள் தலித்துகளைவிடவும் உசத்தியா என்ன?

---

தெருக்களெல்லாம் பாடல்கள் நிறைந்து
ஜீவ களை கட்டியிருக்கும்போது,
நம் இதயங்கள் விரும்பும் தாள லயத்தை
முரசுகள் கொட்டும்போது
பாடுவது எளிது...

மக்களெல்லாம் கிளர்ந்தெழுந்து
நீங்கள் விரும்புபவற்றையே
தாமும் கோரும்போது,
அவர்களை நெகிழ வைக்கும்
வார்த்தைகளைப் பேசுவது எளிது.

எங்கு, எவ்வளவு ஆற்றல் மிக்க
தீப்பொறியை மூட்டுவது என்பதை
வினாடிக்கு வினாடி யறிந்து
இருட்டில் வழி நடத்துவது
அத்தனை எளிதல்ல.

யாரும் பார்க்காதது
யாரும் பாராட்டாதது
அதுதான் உண்மையான பணி.

—by Randall Swinglar

தமிழாக்கம்: **எஸ்.வி. ராஜதுரை**

(நன்றி: Janashakti, Vol 2, No 11, Nov '94)

படிப்பகம்

www.padippakam.com



## தி. கமலி

### தடங்கல் வாழ்க்கை

மனிதரை நேசி;
அதர்மத்தை வெற்றி கொள்ள
அகிம்சை வழியில் போராடு;
காரணமின்றி யாரையும்
காயப்படுத்தாதே!

முடிந்த வரையில்
நல்லதையே செய்;
முடியாவிட்டால்
பல்லைக் கடித்துக் கொண்டு
ஒதுங்கிக் கொள்;
உடன்பட நினைக்காதே;
அடுத்தவரை அடியுரமாக்கி
வாழ முயலாதே!

அப்பாயிண்ட்மென்ட் ஆர்டருடன்
அம்மா அப்பா கால்களில்
விழுந்த போது
அவர்கள் சொன்ன அறிவுரைகளை
இதய சூட்கேஸில்
பூட்டிய லக்கேஜாகத் தூக்கியபடி
புறப்பட்டு வந்தேன்.

கால் மேல் கால் போடு;
காரணமில்லாமலேயே
காக்க வைத்திரு;
எதிரிலிருப்பவரைப் பேசவே விடாதே;
உன் பேச்சுதான்
சரியோ – தவறோ
எப்போதும் எடுப்பாக
ஓங்கி ஒலிக்க வேண்டும்;
முயலுக்கு கால் மூன்றே என்று
சாதித்திடு சபார்டினேட்களிடம்.
மேலதிகாரிகளிடம் பவ்யமாய்
காலில் விழுந்தும்
வாலைக் குழைத்தும்

படிப்பகம்

www.padippakam.com



விசுவாசத்தைக் காட்டிக்கொள்.
போடு கரணம் என்றால்
எண்ணிக்கொள் இதயதெய்வமே என்று
உவகை காட்டு;
மேலிருப்பவரது துதிபாடு;
பாதம் பணிந்து வழிபடு;
கீழிருப்பவரைத் தலையெடுக்க விடாதே;
பாதத்தின் கீழ் நசுக்கி வைத்திரு;
ஓயாமல் குறை கண்டுபிடி;
நியாய அநியாயத்தை
தோண்டித் துருவாதே;
ஓரத்திற்கும் தகுதிக்கேற்ப
ஜால்ரா போடு அல்லது
சவுக்கால் விளாறு;
நீ கீழ்ப்படி—
பட்டம், பதவியுயர்வு;
செல்வம், செல்வாக்கு,
அந்தஸ்து, மதிப்பு
அத்தனையும் தேடிவரும்.
உனக்குக் கீழ்ப்படிய வை—
எதிர்ப்பற்ற ஏகபோக அரசை
எஸ்டாப்ளிஷ் செய்.
அறம், தர்மம், மனசாட்சி, சத்தியம்
என்று எல்லாவற்றையும்
கட்டாய்க் கட்டி சீலிட்டு
உயிர்த்தெழவே முடியாதபடி
கான்க்ரீட் சமாதிக்குள் புதைத்து மூடிவிடு.
உத்தியோக உலகின் இந்த
எச்சரிக்கைப் பாடங்களை
ஏற்க முடியவில்லையே!
கட்டமைப்புக்குள் வந்தபிறகு
கட்டுப்படத்தான் வேண்டும்;
உன்னை நீ மாற்றிக்கொள்;
ஊருடன் ஒத்துப் போய்விடு;
தர்மம் நீதி என்று
தனிப்பட்டுப் போய்
அல்லலுக்காளாகி அனாதை ஆகாதே!

படிப்பகம்

www.padippakam.com



சக அதிகாரியின்
இரக்க அறிவுரையை
சகிக்க முடியவில்லையே!
போட்டோவுக்கு உள்ளிருந்து
அம்மா அப்பா
புன்னகைப்பதன் பொருள் புரியவில்லை;
முத்தமிடும் உதடுகளை
தடங்கல் வாழ்க்கையின்
நடைமுறைப் போராட்டம்
சவர முட்காடுகளாய்க் குத்தும்!

## தனுஷ்கோடி ராமசாமி

## முதல் சிடுசிடுப்பு

'எம் மொகத்தில என்ன
தேனா வழியுது —
ஏன்...
இப்படிப் பாக்றீங்க?'
மௌனமா யிருந்தேன்.
'இதில மட்டும் கொறச்சலில்ல.'
—விழிகளால் ஏங்கினாள்.
'குற்றாலத்துக்கு ஏன் போறாங்க...?'
'அருவியிலே குளிக்க!'
'கொடைக் கானலுக்கு...?'
'இயற்கை அழகில் மயங்க!'
'கோவளத்துக்கு...?'
'கடற்பரப்பில் சொக்க!'
'மகாபலிபுரத்துக்கு...?
'அறுக்காதீங்க!'
திருப்பதிக்கு...?'
'... ... ... ...'
'வேடந்தாங்கலுக்கு...?'
'ம்ம் .. ம் .. ம்?'
'குற்றாலம் ... கொடைக்கானல் ...
கோவளம் ... மகாபலிபுரம்...
திருப்பதி .. வேடந்தாங்கல்
எல்லாமே ஒண்ணாகி ...
பக்கத்திலிருக்கும் போது ....'

படிப்பகம்

www.padippakam.com



## சுப்ரபாரதிமணியன்

நாம் முதன் முதலில்
சந்தித்துக் கொண்ட அப்பாலம்
நினைக்கையில் எப்போதும் சந்தோஷம்.
அப்போது பால வேலைகள் முடிந்து
விடவில்லை.
சித்தாள்கள் நம்மைப் பார்க்க
பலமுறை கடந்து போயிருப்போம்.
அவர்கள் பார்க்கிற கூச்சம் மீறி
நடந்திருக்கிறோம்.
அவர்களின் சந்தோஷப் பேச்சில்
நாமும் இருந்திருப்போம்.
நமக்கும் வெட்கம் கலந்த
சந்தோஷம்தான்
நம் காதல் பதிவுகளை எங்கெங்கோ
தவறவிட்டிருந்தோம்.
பால வேலை முடிந்து
வாகன இரைச்சல்...
பாலத்தைத் திறந்து வைத்தவர்
தலைமை தாங்கியவர்கள்
முன் நின்றவர்கள்
முக்யமானவர்கள்
பட்டியல் கல் வெட்டாய்.
எத்தனையோ உயிர்களை அழித்தவர்கள்
எலும்புக் கூடுகள் மேல்
ஆசனமிட்டிருப்பவர்கள்
அவர்கள் பெயர்களைப் பார்த்தபின்
பாலத்தில் நடக்கவே தோன்றவில்லை.
நானும்—நீயும் நடந்த பாலம்
என்ற சந்தோஷம் மிஞ்சியபடி.

## எம். ஆர். முருகன்

### செடி

செடியைத் தந்தவர்
இப்போது அந்நியமாகிப் போனார்.

படிப்பகம்

www.padippakam.com



ஆனாலும் எனக்குச் செடியின்மேல்
ஆசை அதிகம்.
நீரூற்றுவேன்.
அவ்வப்போது களையும் எடுப்பேன்.
ஜாலம் காட்டும் செடிகளைவிட
பழச்செடிகளின் மேல்தான்
பாசங்காட்டுவேன்.

சில நாள்கள் —
எல்லாச் செடிகளையும்
மறந்துபோனேன்.
பழச்செடியைத் தவிர
மற்றவை சுருங்கிப் போயின.
குருத்து செத்த செடிகளுக்காக
வருத்தப்பட்டேன் சிலநாள்.

பழக்கத்தில் இப்போது
பையனே நீரூற்றுகிறான்.
புதிய தளிர்களில்
முகம் சிரிக்கிறான்.
பட்டுப் பூச்சிபோல்
சிறகு விரிக்கிறான்.
இச்செடியும் கிளைபரப்பிக்
கனிகுலுங்கும் ஓர்நாள்.
பறவைகள் விரும்பிவந்து
பசிதீர்ந்து எச்சமிடும்.
வரும் விருந்தில் உளம் நிறையும்
எதிர்பார்ப்புகளில்
மனைவியின் முகத்திலும் மலர்ச்சி!

## கோ. இராஜேந்திரன்

முனியப்ப சாமியே,
உன்னைப் போலவே நானும்.

சுத்திகரிக்கப்படாத வெயிலிலும்
போர்வையிடப்படாத குளிரிலும்
நடுங்குவேன்.

உன்னைப் போலவே

படிப்பகம்

www.padippakam.com



எனக்கும் மீசை
யாராலும் கவனிக்கப்படாமலே.

உன் வாசலில் கற்பூரங்கள் கூட
எரிவதில்லை — நீ
கவலைப் படுவதுமில்லை.

சுற்றுச்சுவர் இல்லாத
வீடு உன்னுடையது,
என்னுடையது போல.

வானம் பார்த்த வீடு,
நிழலுக் கொதுங்க மரம்,
அதுமட்டும்தான் உனக்கு.

ஆடு வெட்டுதல் எப்படி
உனக்கு சம்மதமில்லையோ
அப்படித்தான் எனக்கும்.

உன்னை எனக்குப் பிடித்திருக்கிறது;
நாத்திகனாயிருந்தும்.

உனக்கு ஆசையில்லை;
அதனால் —
பாலாபிஷேகம் தேவையில்லை.

இருப்பினும் - நீ
கம்பீரமாக இருக்கிறாய்-
சிதைக்க முடியாத கம்பீரம்.
உனக்குப் பூசையிட
அர்ச்சகர்கள் இல்லை.
பரவாயில்லை, பக்தர்களே அர்ச்சகர்கள்.
உன் உண்டியிலைப் போலவே
நீ சுத்தமாக இருக்கிறாய்.

உன்னை எனக்கு
ரொம்பப் பிடித்திருக்கிறது.

இராமனைப் போல் உனக்கு
கோவில் தேவையில்லை.

இருப்பினும் - நான்
முனியப்பனாகவே விரும்புகிறேன்.

நிரந்தரமாக வெட்டவெளியில்
எப்பொழுதும் பெரிய மீசையுடன்.

படிப்பகம்

www.padippakam.com



## நாசர்

'வாங்கன்னு என்னடா
மரியாதை வேண்டிக் கெடக்கு
அந்த சாதிகெட்ட நாய்க்கு?
செபாஸ்டியனாம்— செபாஸ்டி...
செவுடன்னு கூப்பிடு.'

'அப்பா, உங்க
அப்பா வயசிருக்குமேப்பா அவருக்கு?'

'திமிர் புடிச்ச கழுதே
மெத்தப்படிச்சவன் மாதிரிப் பேசினே
மென்னியத் திருவிப்புடுவேன்.
அவனுங்கள எங்க வெக்கனுமோ
அங்கதாண்டா வெக்கனும்.
இப்பப் புரியாது போ.'

விழுந்த அறையைவிட
ஆழமாய்ச் சுட்டது காரணம்.

ஆதிக்கப் பார்த்தீனியம் எனக்குள்
வேர்விடாவகையில் பண்பட்டுப் போனது
என் பத்தாவது வயது.

இருபத் தொன்பதில் —
வலி மறைந்துவிட்டாலும்
வடு வலிக்கிறது
யுகங்களின் ரணமாய்.

## கண்மணி குணசேகரன்

### எதிரி வாழ்க

எனக்கு முன்னே! என் எதிரி...!
ஒரு முடிவோடுதான் நின்றோம்.
என் கை தொடும் தூரத்திலேயே
கொடுவாள் கிடக்கிறது.
அவனை வெட்டிவிட முடியும் என்னால்.

கூப்பிடும் தூரத்திலேயே
என் சகாக்கள் இருக்கிறார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



குரல் போட்டால் போதும்-
குதறிவிடுவார்கள் அவனை.
இருந்தும் யோசனை எனக்கு:
பிரச்சினையைப்
பேசித் தீர்த்துவிடுவோமா— இல்லை
கொடுவாள்தானா?...
சிந்தனையின் ஊடே
கண்ணிமைக்கும் நேரம்-
எதிர்பார்க்கவில்லை நிகழ்வை!
எங்கோ மறைத்து வைத்திருந்த
என் எதிரியின் கொடுவாள்
சீவிப் போனது என் தலையை.
'முண்டம் வேறாய் தலை வேறாய்.'
முனகியது நான்.
வெட்டுப் பட்டதற்குக் காரணம்
என் எதிரியல்ல;
நானேதான்...
'களத்துக்கு வந்த பின்னே யோசனை'
என் பலவீனம். எதிரிக்கு பலம்.
கவிழ்ந்தன என் இமைகள்
மரண நாணத்தால்.
எதிரி வாழ்க!...

**சாந்தா தத்**

## முறிவு

அந்தத் தெருவின் அத்தனை பேரும்
வாங்குவார் பூக்கள்
அவள் தவிர.
தெருவில் விற்கும் அத்தனையும்
வாங்குவாள் அவள்
பூக்கள் தவிர.
அவளுக்குப் பூ பிடிக்கும்.
பூவுக்கும் அவளைப் பிடிக்கும்.
இடையில் குறுக்குச் சுவர்
இடை வந்து போனவனால்...

படிப்பகம்

www.padippakam.com



## வெ. இறையன்பு

எங்க ஊர்க் கோயிலில்
இடைவெளி
விட்டு விட்டுத் திருவிழா நடக்கும்.
மைதானம் முழுசும்
மக்கள் கூட்டம்.
எல்லாப் பொருளும்
கெடக்கிற மாதிரி
குவிச்சி வைச்சி விப்பாங்க.
கோடியில—
வேப்ப மரத்துத்துக் கீழ
கந்தசாமி கலர்க் கடையும்,
குப்புசாமி டீக் கடையும்.
'வெயிலுக்குக் குளுமையா கலர் குடிங்க'ன்னும்
'சூடா வாய்க்கு டீ சாப்புடுங்க'ன்னும்
போட்டி போட்டுக்கிட்டு
கூவிக் கூவி விப்பாங்க.
ஆளு அரவமில்லாதப்ப
கைமாத்திக் குடிப்பாங்க.

## க. அம்சப்ரியா

### என்ன சொல்ல...

உள் உணர்வுகளைச்
சீண்டி சுயம் அழிக்கும்
வார்த்தைச் சொடுக்கல்களை
இயல்பானதாய் எடுத்துக்
கொள்வதாக—
ஒரு மூன்று வேளை உணவுக்காக
அடகு போய்விடுகிற
'நான்' பற்றிய அக்கறையில்லாதது
போல் நடிப்பதில்—
தெருவில் பேசவேண்டுமென்பதற்காக

படிப்பகம்

www.padippakam.com



ஹலோ சொல்லி
நண்பர்களிடம் செயற்கைப் புன்னகைகளை
எவ்வித உறுத்தலுமின்றித்
தருகிறதில்—
பசி மறைக்க
கழுநீராய்த் தருகிற
சுடுநீர் காபியை
சுவையுணர்வற்று
வயிற்றுக்கு வார்த்துக்கொள்கிறபோது—
எவ்வித உணர்ச்சியுமற்று
வீசுகிற மறுப்புகளுக்கு
பதிலின்றிக் கையேந்தி
கடன்காரனிடம் நிற்கிறபோது—
'நீ பொறுமைசாலி
சகிப்புத்தன்மையுடையவன்'
என்கிறாய்.
இதுதான் சகிப்பெனில்
என்ன சொல்ல
உன்னைப் பற்றி நான்?

**ஜீவன்**

---

## தேடல்

அகண்ட வெளியில்
எதையோ தேடிக்கொண்டே செல்கிறேன்.
எதை?...
'மௌனமே' விடையாய்...
அந்தத் 'தேடலை'யும்
சுமந்துகொண்டு
வாழ்க்கை நகர்கிறது.
தேடியது கிடைக்காமல்
உயிர் கழன்ற பின்னும்
அந்தத் 'தேடல்' மட்டும்
சத்தியமாய்...

படிப்பகம்

www.padippakam.com

# ஆராயி

இரா. நடராசன்

"ஆராயி, ரெண்டாங் கிளாஸ் பக்கம் போ. ஒரு பய வாந்தி எடுத்துட்டான். போயி அள்ளு."

"ஆராயி, ஆராயி எங்க? ஏய் ஆராயி, எல். கே. ஜி. போ. சீக்கிரம் ஓடு. பையன் ரெண்டுக்குப் போயிட்டானாம். அந்த மிஸ்சு கத்துது. கண்றாவிடி. ஒரே நாத்தம் புடுங்குது. ஓடு."

"ஆராயி, கக்கூசுல யாரோ தண்ணி ஊத்திலயாட்ருக்குது. பாத்தாலே வாந்தி வருதும்மா, சனியனுங்க. கொஞ்சம் போயி சுத்தம் பண்ணிடு."

"ஆராயி, பிரின்சிபாலு கூட்டாரச் சொன்னாரு. பிரேயர் நடக்குற எடத்துல நாய் விட்ட போட்ரிச்சாம். அள்ள சொன்னாரு."

இத்தனை குரல்களும் காதில் விழாதவளாய் பத்தாங்கிளாஸ் வராந்தாவில வுளுந்து கெடந்தா ஆராயி. ஏற்கனவே கிளிஞ்சு இளிக்கும் உடுப்பு, கருத்துச் சுருங்கிய அவ உறுப்புகளை வெளிக் காட்டிக் கொண்டிருந்தது. இன்னிக்கு என்னவோ ஆயிரிச்சு கௌவிக்கு. இத்தனைக்கும் வழக்கமா ஏத்துற சரக்குதான். இவ்விசயத்தில மாறன் தங்கமான பய. கெட்ட சாராயத்த தரமாட்டான். "வேணா ஆயா, இன்னிய சரக்கு சரியில்ல"னு சொல்லிப் புடுவான். என்ன கருமாந்திரமோ, இப்படி பொணம் கணக்கா அவ வுளுந்து கெடக்கறா. கைய கால கூட அசைக்க வழியில்ல. கண்ண தொரக்க மாட்டாம கெடக்கறா.

கால கருக்கல்ல பள்ளிக்கூடம் வந்தப்ப இப்புடியில்ல. கக்கூசு களுவ முடிஞ்சிது. மூத்திர சாக்கடையை தள்ளி, பொடி தூவினவதானே. பொறவுதான் எப்புடியோ ஆயிருச்சு. தூக்கு போனில பழைய கஞ்சி அப்படியே கெடக்கு. செத்த படுக்கலாமுனுட்டு சாஞ்சவதான். போதையேறிப்போச்சா. நோம்பி நாளு கிட்டமா. பொங்க காசு சேரும் போது கொஞ்சம் அதிகமா குடிப்பா ஆராயி. அப்போ மட்டும் இது போல எங்கினவாவது வுளுந்து கெடந்து வாரது உண்டு. காலனியில ஆருதான் குடிக்காம இருக்காக. இன்னக்கி வேலன்னு வந்த எடத்துல இப்புடி ஆய்போச்சே. என்னத்த செய்வா ஆராயி.

எல். கே. ஜி. ஆயா வந்தாள். "ஆராயி, எளும்புவே. பட்ட பகல்ல ஒறங்குரியே. பொளப்பு நாறிப்போயிரும் வே" என்றபடி தோளை உலுக்கினாள். சின்ன முனகல்கள் சில ஆராயிடமிருந்து வெளிப்பட்டன. நாத்தம். "ச்செய். கால கருக்கல்லயே ஏத்திட்டு வந்திட்டியா சனியன் புடிச்சது"னு வைதவாறு போனாள் ஆயா.

ஆராயி பள்ளிக்கூடம் ஆரம்பித்த நாளிலிருந்து அங்க 'பீ' அள்ளுபவளாக, வாந்தி கழுவுபவளாக மூத்திர சாக்கடை, கக்கூசு சுத்தம் செய்பவளாக, வேலை பார்த்து வருகிறாள். அவளைப் பாத்த மாத்திரத்தில 'ஆய்' வருது என்கும் சின்ன குழந்தைகள்

படிப்பகம்

www.padippakam.com



முதல், மதிய சாப்பாட்டு நேரத்தில் ஆராயி எதிர்பட்டதால் சாப் பிடப் பிடிக்காமல் டிபன் பாக்ஸை கவிழ்க்கும் பெரிய பையன்கள் வரை அந்த பள்ளிக்கூடத்தில உண்டு. எல்லாரும் ஏதாவது ஒரு விதத்துல பொளச்சுகிட்டு இருக்கிற இந்த ஊர்ல ஆராயிக்கு வாச்சது இந்த பொளப்பு. அவளது நயினாவும் ஆத்தாளும் அவ ளுக்குத் தந்தது.

பீடி. இதுதான் புருசங்காரனோட பேரு. முனிசிபாலிட்டியில பொண வண்டி தள்ளுரவன். இன்னிக்கு நாய் வண்டி எடுத்து கிட்டு போயிருக்கிறான். பொளுது சாயிறதுக்குள்ள நூறு நாய்ங்க. ஒரு நாய்க்கி அஞ்சு ரூவா. முன்னூறு ரூவாவா. என்ன எளவோ. அவளுக்கு கணக்கு தெரியாது. கணக்கு புள்ளயளும், கூட் டாளியளும் எடுத்தது போவ மிச்சசொச்சம் முப்பதோ நாப்பதோ. அதுல கருவாட்டு கொளம்பு, அரிசி சோறு. எம்மா நாளாச்சு தெரியுமில்ல அரிசி சோறு ஆக்கிப் போட்டு.

ஆராயியோட பேத்தி இருக்காளே மலரு, அவளுக்கு அரிசி சோ றுன்னா உசுரு. எங்க. வேலைக்குப் போற வூடுகள்ல குடுத்தா தேன். மிச்சம் சொச்சம். ''எச்சி சோறுங்க அம்புட்டு ருசியில்ல ஆயா''ம்பா அவ. அவளுக்கு அம்புட்டு நாக்கு. எங்கினியோ பொறக்க வேண்டிய புள்ள அவ. இங்கின வந்து பொறந்து, சீரங் காயி கூட ஆசிடு தூக்கறா. ஆராயிக்கும் மருமகளுக்கும் பொளு தினிக்கும் சண்டைதான். சீரங்காயி ஆளு தளுக்கு. குளிச்ச உடன பாக்க என்னம்மா இருப்பா. அதான் பயல மயக்கிபுட்டா செரிக்கி. மன்னாரு எப்ப ப்ாரு, எந்த சண்டை சச்சரவுனாலும் பொண்டாட்டி பக்கந்தேன். மலரு புள்ள அப்டீல்ல. ஆயாள வுட்டு குடுக்க மாட்டாள்ல. ஆராயிக்கும் பேத்தின்னா உசுரு.

சங்கீதா மிஸ்சும், லாவண்யா மிஸ்சும் மூஞ்சிலயிருந்து கர் சீப்ப எடுக்கவேயில்ல. ரெண்டாங் கிளாஸ் வாந்தி இன்னும் பல ரது மூக்கையும் துளைத்துக் கொண்டிருந்தது. ஒரு புளிச்ச நாத் தம் எங்கயிருந்துதான் வருமோ. எக்கசக்கம்மா ஈயிங்க. உலகத் துல இருக்கிற எல்லா ஈயும் ரெண்டாங்கிளாசுக்கு படையெடுத்து வந்திட்டா மாதிரி அம்புட்டு ஈங்க. வாந்தி வெளியில லேசா தண்ணி ஊர்ந்து வந்திட்டிருக்குது. பசங்களோட சாப்பாட்டு பையி பக்கமா ஒரு கிளை, வாசல நோக்கி ஒரு கிளை. மினுக்கி கிட்டு இருந்த சங்கீதா மிஸ்சு நாற்காலியை நோக்கி ஒரு கிளை. இப்பிடி வாந்தியாறு கிளை பரப்புச்சு.

''எங்க மிஸ் வாந்தி? இங்கயா?'' என்றபடி விளையாட்டு மிஸ் லோகாம்பாள் வந்தாள். நிஜமாலுமே வாந்தி உள்ளதா என்று பார்க்க வந்தவளாக அவள் தெரிந்தாள். 'ஆமாம். வாந்தி எடுக் கப்பட்டுள்ளது' என்று பிரின்சிபாலுக்குத் தெரிவிப்பது அவளது உத்தியோகம் ஆகிவிட்டது. இந்த மேனா மினுக்கியும் ஒரு கர் சீப்பை மூக்கில், வாயில் வைத்து பொத்தி, மூஞ்சியை அஷ்டகோ ணலாக்கினாள். ''அப்பப்பா, என்ன நாத்தம், யாரு மிஸ் எடுத்தா இந்த வாந்திய?'' ஆமா, அது அவளுக்கு தெரிஞ்சாகாணும். இவ் வளவு நாத்தத்தோடு ஒரு அஞ்சு லிட்டர் வாந்தியை எடுத்தது யாரு?

படிப்பகம்

www.padippakam.com



அவளுக்கு அந்த சாதனை படைத்த நபர் அறிமுகமானதும் கேட்பாள், தனது இனிமையான குரலில் ஒரு வழவழப்பான ஆங்கிலத்தில்: "காலயில் என்ன சாப்பிட்டாய்?" அதுவும் அவளுக்கு தெரிந்தாகனும். "எங்க மிஸ் ஆராயி இல்லையா? வர்லயா அவ? வர்லனா சீரங்காயி வந்திருப்பாளே"ன்னா சங்கீதா மிஸ். வாந்தி இன்னும் ஒரு சுற்று பெருத்தது.

ஆராயி லேசா அசஞ்சு கொடுத்தா. உள்ளுக்குள் யாரோ பெரிய பாறைய வெச்சதுபோல இருந்திச்சு. மூச்சு மட்டும் சத்தமாச்சு. ஒடம்பு அடிச்சுப் போட்டது போட்டதுதான். வலது கையி வயித்துல மாட்டிக்கிச்சு. குப்புற அடிச்சி படுத்திருந்த ஆராயியால அதை வெளியில் இனிமே கொண்டு வர முடியுமான்னு தெரியில. வயித்துல எதுவோ பொர்னு இறங்குது. காது அடைச்சுப் போச்சு. தலவலி ஊரு கொள்ளாதபடிக்கு. ஊட்டுல இருக்கோமுன்ற நெனப்புல ஆராயி, "மலரு, புள்ளே, கஞ்சியெடுத்து வைய்யி"னு என்ன என்னமோ உளறி கொட்டுறா.

முத்து வந்தான். மணியடிக்கிற பியூன். பத்து வருசம் முந்தி ஆராயின்னா இளிச்சுகிட்டு நிப்பான். இப்போ அவளுக்கு வயசாய் போச்சுல்ல. மருமவள பாத்தா இளிக்கிறான். கொரங்குப் பய. கையோட தண்ணி கொண்டாந்திருந்தான். அவ கிட்டமா உக்காந்து மொத வேலயா அவளப் பொரட்டிப் போட்டான். வேத்துப் போனதால தரை ஈரமா கெடந்திச்சு. பத்தாங் கிளாஸ் பையன்கள் சன்னல் வழியா வேடிக்கை பாத்தாங்க. "ஏய், உக்காருங்கடா"னு மிரட்டி அவனுங்கள உக்கார வெச்சிட்டு வேடிக்கை பார்த்தாரு வாத்தியாரு. "சாராய நாத்தம் கொடல பொரட்டுது முத்து. ஏதோ பழஞ்சரக்க அடிச்சிபுட்டு தூங்கறா"ன்னாரு. பொளுது சாஞ்சா அரசமரத்தடி பிராந்தி கடையில போயி நிப்பாரு இவுரு. இப்போ உத்தியோக நேரத்துல இந்த நாத்தம் பொறுத்தமா இல்லியே.

மாறன் பய சாராய கொட்டாயில, ஆராயிக்கு காசு கீசு வாங்க மாட்டாக. மாசம் சம்பளம் வந்தா பத்தோ இருவதோ அவளா தாரதுதான். எங்கின போவா ஆராயி குடிக்க. மாறன் பய இல்லினா... இவ என்ன, இவ புருஷனகாரன் குடிச்சான்னா வுளுந்து பொரண்டு, கன்னி கோயில்லருந்து மஞ்சகுப்பம் வர முடியாம பாலத்து இறக்கத்துலயோ குப்பமேட்டுலயோ அக்கடானு கெடந்து போட்டு அப்பால வருவான். சமயத்துல மலரு போயி இட்டாருவா.

எல். கே. ஜி. பையன்கள் வரிசை கிரமத்தில வகுப்பறையை விட்டு வெளியேறிக் கிட்டிருந்தாங்க. கன்னா பின்னன்னு வயிறு கெட்டுப் போன பையனை பேதி வார வார தூக்கிக்கிட்டு கக்கூசுக்கு ஓடினா ஆயா. ஆயா வேல அங்கின முடியுது. களுவக் கொள்ள ஆராயிதேன். ரெண்டாங் கிளாஸ் நாத்தத்தை என்னானு கேட்ரும் எல். கே. ஜி.யில அடிச்ச நாத்தம். எம்மாடி. சாந்தம் மிஸ் தன் சாந்தம் இழக்கும்படியாய் அப்படியொரு நாத்தம். எங்கே போவார்கள் எல். கே. ஜி. குழந்தைகள். இந்த நாத்தத்தில

படிப்பகம்

www.padippakam.com



ஊறி முத்தெடுத்ததினால் "மிஸ் எனக்கும் ஆய் வருது" என்றான் இன்னொரு பய. சாந்தம் மிஸ், "ஓடுறா ஓடுறா" ன்னா.

பேதியான பய வழியெல்லாம் காலவெச்சு ஆக்கிட்டுப் போயிருந்ததால பையன்களை ரொம்ப ஜாக்கிரதையாக அழைத்துப் போக நேர்ந்தது. அப்படியும் மிதித்தவர் மிதிக்காதவர் என்று இரண்டு பிரிவாய் ஆனார்கள் அவர்கள். ஊரே நாறும்படியாய் அந்தப் பயலுக்கு பேதி. ஊட்லயே வச்சுக்க வேண்டியதுதானே. இந்த மாதிரி கேசையெல்லாம் கொண்டு வந்து விட்டு சாந்தம் மிஸ் கழுத்தை அறுக்கிறார்கள். எல். கே. ஜி. 'பி'யில் பரவாயில்லை. பையன்கள் கொஞ்சம் டீசண்டாக இருந்தார்கள்.

"ஏய், அட...ங்க பறப்பய மவளே. எளும்புடி நாயி" என்றான் முத்து. ஆராயியின் மூஞ்சியிலிருந்து வழிந்த தண்ணி உடுப்பை நனைத்தது. ஒரு நிமிசம் கண்ண முளிச்சி பாத்துபுட்டு மறுபடி இறுக்கமா மூடிகிட்டா அவ. "ஏய், என்னாடி பவுசு காட்டுற கண்டார ஒளி"ன்னு சொல்லி ஒரு உதை விட்டான். பத்தாங் கிளாஸ் சிரித்தது. முத்துவுக்கு குஷியாய்ட்டது. "அடங் கொப்புரானே" என்றபடி இன்னொரு உதை விட்டான். மாணவர்கள் குதூகலமடைந்தனர். "பள்ளிக்கூடத்துக்கே தண்ணி போட்டு வார அளவுக்கு கொளுப்பு"னு மயிர புடிச்சு ஒரு ஆட்டு ஆட்டினான். மற்ற வகுப்புகளிலிருந்தும் மாணவர்கள் எட்டிப் பார்க்க முயன்றனர். ஆராயி மறுபடி பொரண்டு படுத்தாள். முத்து மணியடிக்கப் போனான்.

இன்ட்ரெவல் மணி அடித்ததில் பையன்கள் கக்கூசுக்கு படையெடுத்தனர். பலரும் ஆராயியை சுற்றி கூட்டமிட்டனர். வாந்தி மிஸ்சும் பேதி மிஸ்சும் சந்தித்தனர். எப்போதும் குடிக்கும் நாயர் காப்பியை வேண்டாமென்று சைகை செய்தாள் சாந்தம் மிஸ். வயித்தை பொரட்டுது என்று வட்டமிட்டு காட்டிய சங்கீதா மிஸ்சுக்கு சொல்லிக் கொள்ளாமல் போய் வாந்தி எடுத்தாள் லாவண்யா மிஸ். அக்குமட்டல் ஒரு நோய் போல மத்த மிஸ்சுங்கள தொத்திகிச்சு. தமிழ் பண்டிட் கிரிஜா மிஸ் உடம்பை சிலுத்துக்கிட்டு மூக்கைப் பொத்தினாள்.

பையன்களுக்கு ஆராயி கிடந்தவிதம் சினிமா மாதிரி இருந்தது. "மூச்சு வருதாடா" என்றான் ஒருத்தன். "வயிறு ஏறி யெறங்குதே தெரியல"னு பதில் வந்தது. "கருமம் நாறுது. இல்லடா? வா போயிரலாம்" என்றவனின் கூட நின்றிருந்த பையன் சின்ன கல் ஒன்றை எடுத்து ஆராயியின் மேல் சுள்ளென அடித்தான். அது அவள் மேல் மோதி விழுந்ததில் அவள் லேசாய் அசைந்து முனங்கினாள். பையன்கள் பயத்தில் சிதறினர். இரைச்சலில் இருமாந்த அந்த பையன் மற்றொரு கல்லை கையில் எடுத்தப்போ "பிரின்சிபாலு ... ... பிரின்சிபாலு" என்றார்கள்.

"வாடா டாய்லட் போயிட்டு வருவோம்."

"சீ ச்சீ கர்மம். நா வர்ல. அதப்பாத்த...வ்...வேய். கழுவாம கெடக்குது அது."

படிப்பகம்

www.padippakam.com



பிரின்சிபாலு ஆராயியைப் பாத்துக்கிட்டு நின்றார். இப்போது என்ன செய்யலாம் என்பது போல மூஞ்சியை வைத்துக்கொண்டார். பிறகு "வகுப்புக்கு போங்கடா, போங்கடா" என்று ஆங்கிலத்தில் கத்தினார். பையன்கள் போனதும் தனது அறைக்குத் திரும்பினார். முத்து மறுபடி மணியடித்தான்.

சங்கீதா, லாவண்யா, சாந்தம் —ஆகிய மூன்று மிஸ்சுகளும் பிரின்சிபால் அறை வாசலில் நின்றனர்.

"கிளாசுக்கு எப்படி சார் போறது."

"கிளீன் பன்னவே இல்ல சார்."

"பாத்துக்கிட்டுதானே இருக்கேன். எதாவது உடனே செய்வோம். போங்க கிளாசுக்கு."

ஆராயி எழுந்து உட்கார முயற்சி செய்தாள். முத்து காலனிக்கு போனான் ஆள் கூட்டியார. அவனுக்குத் தெரியாது அங்கின யாரும் இந்நேரத்துக்கு இருக்கமாட்டாங்கன்னு. மலரு பன்னி மேய உட போயிருப்பா. இன்னிக்கு கல்யாண காச்சி இல்ல. இல்லீனா கூடை எடுத்துகிட்டு எலச்சோறு எடுத்தாற போயிருவா. ரொம்ப மோசமான நாட்களும் உண்டு. வயித்துக்கே வழியில்லாத அந்த நாட்களில் மலரு தட்டும் பாத்திரமுமாய் அக்கிரகாரத்துக்கு பிச்சை எடுக்கப் போவா. யாரு இருப்பா இப்போ ஊட்ல.

இரண்டாம் வகுப்பில் சிலர் மிதித்து வாந்தியை கலைத்திருந்தனர். எல். கே. ஜி. யில் மிதித்தவர் எண்ணிக்கை கூடியிருந்தது. மேலும் சிலருக்கு பேதி தொற்றிக் கொண்டதில் வருகை பதிவேட்டை கழிவறை போய் பதிவு செய்யும் அபாயம் கூடிற்று.

மாணவர் படையொன்று திரட்டி விளையாட்டு மிஸ் வாந்தி பேதியில் மண்ணைப் போட்டு வைக்க கிளம்பினாள். விளையாட்டு பீரியட் மாணவர்களுக்கு இப்படி ஒரு புதிய விளையாட்டு கிடைத்தது.

பள்ளி வாசல் கதவ தாண்டியிருக்க மாட்டான் முத்து. சீரங்காயி குய்யோ முறயோனு கத்திகிட்டு ஓடியாந்துகிட்டு இருந்தாள். "ஆயா, போச்சு. குடி முளுகிப் போச்சு. எல்லாம் போயிருச்சு."

ஆராயி எழுந்து உட்கார்ந்து இருந்தாள். சீரங்காயி அய்யோ அய்யோனு கத்திகிட்டு அவளாண்ட போயி "ஆத்தா நாய் கொதறி புடிச்சு. அய்யன் போயிரிச்சி நம்மள உட்டு. அய்யோ எல்லாம் போச்சு" என்று கதறி கூப்பாடு போட்டதும் ஆராயி திகிலடஞ்சு போயி ஒரு நிமிசம் கெடந்தா. அப்புறம் தெளிஞ்சு போச்சு அவளுக்கு. பெரிய சத்தம் பள்ளிக் கூடத்தையே உசுப்பிச்சு. ஒப்பாரி வெச்சு அளுக ஆரம்பிச்சா சீரங்காயி.

செவுத்துல தலைய முட்டிகிட்டு கதறினா. பையன்க வேடிக்க பாக்க, உடுப்பு கலஞ்சதுகூட தெரியாம தெரு வழியா வயித்துல வாயில அடிச்சிக்கிட்டு, அய்யோ அய்யோனு அலறிகிட்டு ஆராயி ஓடினா. சீரங்காயி "ஆத்தா, ஆத்தா"னு தலையில அடிச்சிக்கிட்டு பின்னாடியே போனா.

ரெண்டாங்கிளாசும் எல். கே. ஜி. யும் மூத்திர சாக்கடையும் கக்கூசும் சேர பள்ளிக்கூடம் நாத்தத்தில் முழுசாக மூழ்கிக் கொண்டிருந்தது.

படிப்பகம்

www.padippakam.com

தொடர் 17

# நினைவுத் தடங்கள்

## வல்லிக்கண்ணன்

சென்னைக்கு வந்து பாதிப்புகள் ஏற்படுத்திய புயல் பற்றி அதிகம் தெரிந்து கொள்ள முடியவில்லை; நீங்கள்தான் தெளிவாக எழுதுங்களேன் என்று ஒரு நண்பர் கேட்டிருக்கிறார்.

நவம்பர் மாதம் வந்து போன புயல் பற்றி நானும் எதுவும் அதிகமாக சொல்வதற்கில்லை. புயலின் பாதிப்புகள் பற்றி நானும் பத்திரிகைகளில் படித்துத் தெரிந்து கொண்டதுதான். நான் வசிக்கும் திருவல்லிக்கேணியின் கடைசிப் பகுதியிலும் அதன் சுற்றுவட்டாரத்திலும் புயலின் பாதிப்புகள் என்று அதிகமாக எவையும் பார்வையில் படவில்லை. இரவு முழுதும் காற்று இரைச்சலுடன் வீசிக் கொண்டிருந்தது; மழை பெய்து கொண்டேயிருந்தது. காலையில் எழுந்து பார்க்கையில் வாழை மரங்களும் முருங்கைகளும் ஆங்காங்கே முறிந்து விழுந்து கிடந்தன. பக்கத்தில் உள்ள பெரிய காலனியில் நிற்கும் பெரிய மரங்களில் சில கிளைகள் முறிந்து கிடந்ததையும், எங்கும் இலைகள் சிதறிப் பரவிக் கிடந்ததையும், தண்ணீர் தேங்கி நின்றதையும் காண முடிந்தது. மற்றப்படி கொடுமையாக, கோரமாக எதையும் நான் பார்க்கவில்லை.

ஆனால், புயல் என்பது எவ்வளவு கோரமானது, கொடுமையானது, எத்தகைய சேதங்களை விளைவிக்கக் கூடியது என்று என்னை உணரச் செய்த நிகழ்ச்சி ஒன்று உண்டு. அந்தப் புயல் என் உள்ளத்தில் ஆழமாய் சுவடுகள் பதித்துள்ளது.

1977ஆம் வருடம். கல்கத்தா தமிழ் இலக்கிய நண்பர்கள் தமிழ் நாவல் நூற்றாண்டு விழாவை சிறப்பாகக் கொண்டாடத் திட்டமிட்டு எங்களை அழைத்திருந்தார்கள். நாங்கள் ஏழுபேர்— நா.பார்த்தசாரதி, அசோகமித்திரன், ஞானக்கூத்தன், மு.மேத்தா, சேவற்கொடியோன், ஆர். நடராசன், (இப்போது அமெரிக்கத் தகவல் நிறுவனத்தில் பணி புரிபவர்) நான் — ரயிலில் போனோம்.

நவம்பர் மாதம்தான். மழைக் காலம். தினம் மழை பெய்து கொண்டிருந்தது. ஒவ்வொருவரும் மழையோடுதான் அவரவர் வீட்டிலிருந்து வந்து சென்ட்ரல் ஸ்டேஷனில் ரயிலேறினோம். புயல் வரக் கூடும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

'கோரமாண்டல் எக்ஸ்பிரஸ்' மழையோடு புறப்பட்டு, மழையிலே நனைந்து ஓடி, மழைப் பகுதியைக் கடந்து குளுகுளு பிர

படிப்பகம்

www.padippakam.com



தேசங்களில் சுகமாகச் சென்றது. வளமான பகுதிகள். பச்சைப் பசேல் வயல்கள். ஜிலுஜிலுக்கும் வாழைத் தோப்புகள். மரகதப் பசும் புல் பரப்புகள். கவலையற்று மேய்ந்து திரியும் ஆடு — மாடுகள். இப்படி காட்சி விருந்தை ரசித்தபடி பயணம் செய்தோம்.

கல்கத்தா சேர்ந்தோம். ரயில் நிலையத்தில் எங்களை வரவேற்கக் காத்து நின்றவர்கள் நிம்மதிப் பெருமூச்சு உயிர்த்தார்கள். நாங்கள் நலமாக வந்து சேர்ந்ததற்காக இறைவனுக்கு நன்றி செலுத்தி சந்தோஷம் காட்டினார்கள்.

ஏன் இவ்வளவு பரபரப்பு என்று கேட்கையில், உங்களுக்கு விஷயமே தெரியாதா என அவர்கள் வியப்புடன் கேட்டார்கள்.

என்ன விஷயம் என்ற கேள்விக்கு அவர்கள் விரிவாக பதில் தந்தார்கள். புயல். கடுமையான புயல். ஆந்திராவில் அழிவு வேலை பண்ணியிருக்கிறது. ரயில் பாதையில் சேதம். இங்கிருந்து போன வண்டிகள் அங்கங்கே நிறுத்தப்பட்டுவிட்டன. கொரமாண்டல் வந்து கொண்டிருக்கிறது என்ற தகவல் அவ்வப்போது கிடைத்தது. புயல் உங்களுக்குப் பின்னாலேயே வந்திருக்கிறது. நல்ல வேளையாக இந்த எக்ஸ்பிரசை எதுவும் பண்ணவில்லை. கடல் பொங்கி திருவல்லிக்கேணியில் புகுந்துவிடலாம் என்ற பீதி இருந்தது. ஆனால் புயல் திசை திரும்பி ஓடி வந்து ஆந்திராவில் புகுந்து அட்டூழியம் பண்ணியிருக்கிறது...

நாவல் நூற்றாண்டு விழா சிறப்பாக நடந்து முடிந்தது. நாங்கள் திரும்புவதற்கு ரயில் வசதி இல்லை என்றார்கள். இரண்டு மூன்று நாட்கள் ரயில் ஓடாது; பாதைகள் பழுது பார்க்கப்பட்டு அப்புறம்தான் சென்னைக்கு ரயில் போகும் என்று சொல்லப் பட்டது.

நாங்கள் கல்கத்தா நகரத்தை போதுமான அளவு பார்த்து மகிழ்ந்தோம். ஒரு வாரத்தில் நிலைமை சீர்பட்டுவிட்டது. நாங்கள் புறப்பட்டு வந்தோம்.

புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வண்டி மெதுவாகச் சென்றது. பழுது பார்க்கப்பட்ட பாதையில் எச்சரிக்கையாக எக்ஸ்பிரஸ் செலுத்தப்பட்டது. வண்டியின் இருபுறமும் தெரிந்த காட்சி கண்களை அறுத்தன; உள்ளத்தை உலுக்கின.

மண்ணின் வளத்துக்கு எடுத்துக்காட்டாக விளங்கிய பகுதிகள் எல்லாம் பாழ்பட்டு, கோரத் தோற்றங்களாகத் தென்பட்டன. மரங்கள் வீழ்ந்து தாறுமாறாகக் கிடந்தன. வாழைகள் சின்னாபின்னமாகியிருந்தன. நாசப்பட்ட வயல்களிலெல்லாம் பெரிய பெரிய மாடுகளும் கன்றுகளும் ஆடுகளும் செத்துக் கிடந்தன

படிப்பகம்

www.padippakam.com



உடல்கள் விகாரமாகப் பருத்தும் அழுகியும் கெட்ட வாடையைப் பரப்பிக் கிடந்தன. ஓரத்து ஊர்களில் குடிசைகள் சிதைக்கப்பட்டும், கட்டிடங்கள் இடிந்து விழுந்தும் புயலின் கொடுமையை விளம்பரப்படுத்தின. தந்திக் கம்பங்களும் விளக்குத் தூண்களும் கை காட்டி மரங்களும், வலுமிகுந்த அசுரக் கரங்களால் திருகிப் பிழியப்பட்ட துணிகள் மாதிரி, திருகல் முறுகலாக நெளிந்தும் வளைந்தும் விழுந்தும் கிடந்தன.

'இதை எல்லாம் விட மோசமாக, பயங்கரமாக உள்பகுதிகளில் நிறைந்து கிடக்கின்றன' என்று ரயில் பயணிகள் பேசிக் கொண்டார்கள்.

இவை எல்லாம் இயற்கையின் விளையாட்டு என்றால், மிகவும் கொடுமையான - வக்கிரமான விளையாட்டுதான் என்று என் மனம் எண்ணியது. இந்தப் புயல் திசை திரும்பி இந்தப் பிரதேசத்துக்கு வராமல், தமிழ் நாட்டில் சென்னை மீதே சாடியிருக்குமானால் அழகிய மாநகரத்தின் நிலைமை என்னாகியிருக்கும்? சிலர் குறிப்பிட்டது போல திருவல்லிக்கேணியே இல்லாது போயிருக்குமே என்ற எண்ணம் என்னுள் அதிர்ந்தது. அச்ச உணர்வு உள்ளில் ஊர்ந்தது.

'கொரமாண்டல் எக்ஸ்பிரஸ்' மிகுந்த கால தாமதத்துடன் சென்ட்ரல் ஸ்டேஷனை வந்து சேர்ந்தது. அப்போதும் மழை பெய்துகொண்டுதானிருந்தது. ஓயாது குளிக்கும் மாநகருக்கு ஒளி உதவி செய்வது போல் எங்கும் விளக்குகள் எரிந்து பிரகாசித்துக் கொண்டிருந்தன.

'விடாது மழை பெய்தாலும் பரவாயில்லை. சென்னை நகரம் புயலில் அடிபடாது நல்லபடியாக இருக்கிறதே?' என்ற சந்தோஷத்துடன் விடைபெற்று அவரவர் இடம் நாடிச் சென்றோம்.

பின்னர், சில வருடங்களுக்கு ஒருமுறை, புயல் வருகிறது, சென்னை அருகே கரையைக் கடக்கக் கூடும் என்ற அபாய அறிவிப்பு தெரிவிக்கப்படுவதுண்டு. அப்போதெல்லாம் புயல் சென்னை விட்டு விலகி ஆந்திரா பக்கம் போய் அங்கே பாதிப்புகளை விளைவிப்பதே வழக்கமாக இருக்கிறது. ஒரு வருடம் ஒரிசாவில் புகுந்து நாசக்காடாக்கியது புயல்.

அச்செய்திகளைப் படிக்கும் போதெல்லாம், ரயில் பயணத்தின் போது நான் காண நேரிட்ட கோரங்களும் கொடுமைகளும், சிதைவுகளும், சீரழிவுகளும் என் மனசில் உறுத்தும் நினைவுகளாய் எழுந்து அசையும்.

படிப்பகம்

www.padippakam.com

# எம். வி. வெங்கட்ராமின் 'காதுகள்' பற்றி...

எஸ்ஸார்சி

'காதுகள்' என்னும் நாவலின் முன்னுரையில், தஞ்சை பிரகாஷ் "மனிதன் தனது எல்லா நிலைகளிலும், இப்போது இருப்பதைவிட மேல் நிலையை அடைய வேண்டும் என்கிற அடிப்படையான இந்தியப் பண்பாட்டு தாகத்தோடும், உக்கிரத்தோடும் இந்த நாவல் எழுதப்பட்டிருப்பதால், இன்னும் இந்த நாவலினுடைய பல் வேறுபட்ட கலா மூலங்களை தரிசிக்கும் விமர்சர்களும் உள்ளிறங்கி எடுத்துக்காட்டி ரசனையை வளர்க்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்," என்று குறிப்பிடுகிறார்.

அவரின் வழிகளிலேயே நான் கீழ்க்கண்டவைகளைப் பகிர்ந்து கொள்ள எண்ணுகிறேன். எம்.வி.வி.யினுடைய கலா மேதைமையைப்பற்றி பேசுகிற அளவுக்கு அருகதை இருப்பதாக நான் எண்ணிக் கொள்ளவில்லை என்பதை முதலில் குறிப்பிட விரும்புகிறேன். இருப்பினும் என் மன நெருடல்களை, இலக்கிய நண்பர்கள் மத்தியில் வைத்து, முடிந்தால், அது உரக்கப் பேசப்பட்டு, அதிலிருந்து பெறப்படும் விமரிசன அலகுகள் எங்கு 'காதுகளை' பொருத்துகின்றன என்பதை அறியவே இந்த முயற்சி.

'காதுகளி'ல் ஏன் இப்படி ஆங்கில வார்த்தைகளை வாரி இறைக்கிறார் எம்.வி.வி.? அது என்ன புதிய வழி? ஆங்கில வார்த்தைகளை தமிழில் இயல்பாகக் கலந்துகொண்டு வருவதற்கு யாரும் மறுப்பு சொல்லத் துணிய மாட்டார்கள். ஏன் எனில் யாப்பு கற்றுக் கொண்டு சிந்தனை செய்வதோ. நிகண்டு கற்றுப் பின் பேசுவதோ இல்லைதான். ஆனால் நாவல் முழுவதும் ஆங்கில வார்த்தைகள் அநேக இடங்களில் பெரிய எழுத்துகளில் (காபிடல் லெட்டர்ஸ்) கொண்டு வரப் பட்டிருக்கின்றன. எடுத்துக்காட்டாக, SORRY, SPACEAGE, PSYCHIATRIST, PERSONAL, CLIMAX, DENOUEMENT, THANKYOU, THICKHEADED, BLUE FILM, இப்படி நூற்றுக் கணக்கில் நாவல் முழுவதும்.

மேலும் இன்சால்வென்சி, ஹைட்ரஜன்பராக்சைட், ஹிஸ்டிரியா ஹோல்ட்ஆன், ஹாண்டில்பார், இமிடேட், ப்ளீஸ் எக்ஸ்யூஸ் மீ, டினோபால், கிரிடிக்கு, இன்செக்ஷன், ஃப்ரண்ட், க்ரீன்ரூம், விசிடிங் பீஸ், கன்சல்ட், க்ளோஸ்அப் என்று கணக்கில்லாது ஆங்கிலச் சொற்கள் அப்படியே தமிழ் எழுத்துகளில் அடைத்துக் கொண்டும் ஒருவிதமாய்.

இது என்ன தடம்? தமிழ் இலக்கியப் படைப்பாளிக்கு ஒரு முன்னுதாரணமாய் இதுவே அமைந்துவிட்டால் என்ன ஆகும்? தமிழுக்காக, இலக்கியத்துக்காக ஒரு ஆகப் பெரிய விருது பெறும் ஒரு படைப்பிலா இப்படி?

படிப்பகம்

www.padippakam.com



ஆந்ம ஞானம் - Self realisation - என்பதுதான் இது, You realise yourself transcending flesh by means of flesh, Was that not a marvellous experience? Oh; You want a repeat performance? No, No, Not now, I am damne tired. Thank you very much, Mali, Ta, Ta என்று வரிவரியாய், பத்தை பத்தையாய் ஆங்கில விளக்கங்கள்.

தமிழ் இலக்கியத்தில் இப்படி வர முடியும் என்றால், நாளைக்கே இந்தியில், ஜெர்மனிய மொழியில், ஒரிய மொழியில், பஞ்சாபியில் என்றும் வரிகளை நுழைத்து நுழைத்து யாரேனும் எழுதினால், இலக்கிய உலகம் இருகை கொண்டு வரவேற்று பாராட்டுமா? பல தடங்களை, பல பிரதேச மொழிப் படைப்பாளிகளைச் சேரும் இத்தகைய படைப்புகள் 'நமது இலக்கிய மரபு'பற்றி என்ன முடிவுக்கு வர உதவும்.

தமிழ் மொழியில் அப்படியெல்லாம் சொல்ல முடியாது, சொல்ல வராது என்று, இவ்விருது பெறும் ஒரு நூலைப் பார்க்கின்ற அல்லது படிக்கின்ற பிற மொழிக்காரர்கள் ஒரு தீர்வுக்குச் சாதாரணமாய் வருவார்கள். 'இல்லை, மொழி ஒரு பொருட்டே இல்லை, நாங்கள் 'மனித பாஷை' பேசுகிறோம்' என்று லா.ச.ரா. மாதிரி அடம் பிடிக்கவும் ஒருவருக்கு உரிமை உண்டுதான்.

அங்கீகரிக்கப்பட்ட ஒரு படைப்புக்கென்று சில விழுமியங்கள் வேண்டாமா? இந்த முயற்சி, ஆதரிக்கப்பட்டால், இது தொடரும் கதையானால் நாம் எங்கே போய் நிற்போம்? ஒரு தவறான வழி காட்டுதலை - வக்காலத்து வாங்கி நின்றவர்கள் என்று வரலாறு நமக்கு பழி சேர்க்காதா? "தமிழில் பெற்ற 'ஞான பீட விருது'கூட ஆகச் சிறந்தது அல்ல. பிற நா. பா. வால் படைக்கப்பட்டிருப்பதை நோக்கும் போது" என்று ஆங்காங்கே முணுமுணுத்துக் கொண்டுதானே இருக்கிறோம்.

பழைய சித்தர் மரபையும், வடலூர் ராமலிங்க வள்ளலாரின் 'சாகாக்கலை' என்னும் அற்புத விஞ்ஞானத்தையும் தமிழன் இன்னும் கண்டு கொள்ளவில்லை என்பதற்கு வருத்தப்படும் சில இலக்கிய மூத்தவர்கள், எம். வி. வி. காதுகளுக்காக தூக்கி நிறுத்தப்படுவதை அங்கீகரித்தால் எங்கே போய் முடிவோம்?

'காதுகளி'ல் எண்ணற்ற அழகு தமிழ்ச் சொற்கள் விரவிக் கிடக்கின்றனதான். எம். வி. விக்கு அவை ஒன்றும் பெரிய விஷயமுமல்லவே.

கருக்கல், கடுங்குளிர், கண்ணயர்வு, அகச்சந்தை, ஆதனம், சிற்றொலி, கலவியின்பம், திருநெறி, பூவிதழ், நாநுனி, திருமுன் என்று வரிசை வரிசையாய் இவை. இவைகளையும் நுழைத்து, வடமொழியில் கடன் வாங்கி, ஜனனேந்திரியங்கள், சிருஷ்டி, ஜோதி, ஜனம், பிரமாணம், பூஜாரி, நிராயுதபாணி, ஹிம்சை, தாமஸ, ஆக்ஞை, ஸ்திரம், சூக்ஷமம், பிராணம், பாஷ்யம்... என்று இவைகளையும் அடுக்கிக் கொண்டால் இங்கு என்ன தோன்றுகிறது? நல்ல தமிழ் படைக்க முடியும் என்றாலும் வீம்புக்காய் சிலதுகளை

படிப்பகம்

www.padippakam.com



கலப்பேன் என்கிறாரா எம்.வி.வி. ? இப்படிச் சொல்கின்றபோது, வேறு சிலவற்றையும் நாம் குறிப்பிட்டாகவேண்டும். தமிழ்மொழி, தமிழ்ச் சூழல் ஆகியவை எம்.வி.வி.க்கு எப்படித்தான் பட்டதோ தெரியவில்லை; அவரின் ஆளுகையில், தமிழ் மரபைக் குத்திப் பேசுவதாகவே அறிய முடிகிறது.

எடுத்துக் காட்டாக: ‘நீ என்ன TAMIL COLLEGE STUDENT போல இலக்கணமா இங்கிலிஷ் கலந்து பேசறே?’

‘நான் படிச்சவங்கறது மாலிக்குத் தெரிய வேணாமாடா...... படிப்பாளி படிப்பாளியைத்தாண்டா காதலிப்பாள்.’

இதில் மறைமுகக் குத்தலாய் என்ன சொல்லப்படுகிறது?

‘கறுப்பன் என்ற தோற்றம் ஆதனத்தோடு மறைந்தது ஒரு தமிழ்ப் புராணப் படத்தைப் பார்த்தாற் போல் இருந்தது’ என்கிறார் எம். வி. வி. அது என்ன தமிழ்ப் புராணம்? புராணங்கள் வடக்கிலிருந்து வந்தவை. அவைகளிலும் மொழி மாற்றியே நீங்களும் நானும் பார்க்கிறோம். இங்கு ஏன் நக்கலாய் ‘தமிழ்’ இப்படி?

தன் அறையில் காதுகளின் தலைவனுக்கு, ஏர்ல் ஸ்டான்லி கார்டினர், அகதா கிறிஸ்டி, பெர்ரி மேஸன் என்கிற மேலை நாட்டாரின் ஆளுகை.

கதாநாயகனின் தந்தை கேட்பது ராமதாசர், கபீர், புரந்தர தாஸ், மீராபாய் ஆகியோரை. கதாநாயகனுக்கு தியாகராஜர், தீட்சிதர், புரந்தரதாஸ் இவர்களின் கீர்த்தனைகளைப் பாட வேண்டும் என்ற பேரவா. ஆனால் சாத்தியப்படவில்லை என்ற பெருமூச்சு வேறு.

மறக்காமல் காஞ்சீபுரம் பெரியவாளை தெய்வ அம்சமாக வழிபடுகிறவன் இவன்... ...பயப்படாதே உன் குரு உன்னைக் காப்பாற்றுவார் என்று ஆறுதல் உரைத்து, திருநீறு வழங்கி அனுப்பினார் என்ற ஒரு செய்தி.

அரவிந்த ஆசிரமும், மயிலாப்பூர் ராமகிருஷ்ண மடமும் இங்கு பேசப்படுகின்றன.

ராமனும் கறுப்பனும் என்ன ஒரு கற்பனை. கறுப்பன் ராமனை ‘மரத்துக்கு பின்னாலே ஒளிஞ்சிக்கிட்டு எதிரியை சுட்ட வரு (?) பொஞ்சாதியை பிறத்தியான் வூட்ல உட்டுட்டு’ என்று பேசுகிறான். ராமனே கறுப்பன்தான் என்றாலும் இவர்களின் சம்பாஷணை ராமலீலாவை, ராவணலீலாவை ஏனோ ஞாபகத்திற்குக் கொண்டு வருகிறது என்பதை சொல்லியே ஆகவேண்டும்.

கறுப்பன்—‘பிஞ்சின்’, ‘கஃசு’ (கக்கூசு) ‘பொஞ்சாதி’ என்றும் ‘பொட்டைக்குட்டி’ என்றும் கூடத்தான் பேசுகிறான். அவனே Pre-historic period, Twentieth century என்றும் குறிப்பிடுவது

படிப்பகம்

www.padippakam.com



அபத்தமாய் இருக்கிறதுதான். இவைகளை நோக்கும் போது, தமிழ்ச் சூழலை இந்த நாவல் நக்கல் பார்வையோடு அணுகியிருக்கிறது என்ற முடிவுக்கே நம்மை இட்டுச் செல்கிறது. 'அகாதெமி' விருதும் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது இன்னும் சந்தேகத்தை வலுவாக்குகிறதுதான்.

'காதுகளி'ன் பெண்ணியம் பற்றிய நோக்கினை விமரிசித்தே ஆக வேண்டும். காமாட்சி படும் சித்திரவதை நமக்கு கண்களைக் குளமாக்குகிறது. எம். வி. வி. ஏன் இப்படி பெண்களை வதைப்படுத்தி சித்தரிக்கிறார் என்று விந்தை மேலிடுகிறது. ஒருக்கால் சொந்த அனுபவமாகவே இது இருந்திருந்தாலும் ஏற்க முடியாத ஒன்றே.

'சதையை நறுவிசாக வழித்து எடுத்த வெறும் எலும்புக்கூடாக கால்களால் நடக்கக் கூட இயலாமல், தரையில் அமர்ந்து கைகளை ஊன்றி நகர வேண்டிய அவலநிலையில் அவள் இருந்தாள்.'

எங்கே 'மனித உன்னதமோ' தெரியவில்லை.

'செயற்கை வெறிக்கு இவள் காவு ஆகிவிட்டாள்' என வருத்தப்படுகிறான்' என்கிறார் எம். வி. வி.

'இந்தக் கொள்ளையிலே நீங்க வேற. உங்களுக்கு இரக்கமே இல்லையே என்று அனத்தினாள்.'

'வயிற்று ஜீவன் இறந்து போனது சுமந்து போகிறது' என்றும் சொல்கிறார் எம். வி. வி.

பெண்ணினம் மன்னிக்க முடியாத அளவுக்கு படைப்பாளியே தன்னைக் கொண்டு செல்கிறார். இவ்வளவு சோகத்திற்கும் மன்னிப்பு கேட்டதாகவோ, கண்ணீர் சிந்தியதாகவோ அவர் குறிப்பிட்டுக் கொள்ளவில்லைதான்.

'நாதவிந்து' பற்றி குறிப்பிடும் போது காதுகள் இப்படிச் சொல்கிறது:

'நாதவிந்து கலாதீன்னு' பாடறானே, அசிங்கப்பட்டா பாடறான்? அவனுக்கு விந்து பிடிக்காதுன்னா என்கிட்டே கொடுத்துட்டுப் போகட்டுமே. நான்தான் எப்போ எப்போன்னு காத்திட்டு இருக்கேனே' — இப்படியாய்த்தான் நாதவிந்துவைப் பார்க்கலாமா என்பதே கேள்வி.

அருணகிரி இப்படிச் சொன்னார்:

நாத விந்து கலாதீ நமோ நம |
வேத மந்த்ர சொரூபா நமோ நம |

இந்த அருணகிரி 'சரணகமலாலயத்தை அரை நிமிஷ நேர மட்டில் தவமுறை தியானம் வைக்க அறியாத சட,கசட மூடமட்டி' என்று தன்னையேகூடச் சொல்லிக் கொள்கிறார்தான்!

படிப்பகம்

www.padippakam.com



நாத விந்து என்பதனை 'முதல் ஒலி' அல்லது 'ஒலி முதல்' என்று சொல்லலாம். நாத விந்து கலாதீ என்று பிரணவத்தை சொல்லிய பிரணவரூபமான முருகனையே அருணகிரி குறிப்பிடு கிறார். சுப்ரமணியர் பத்மா சூரனை கொன்றபோது, மரமாகி நின்றவன் இரு கூறாகி, சேவலாகவும், மயிலாகவும் மாற, அவை களையே முருகன், சேவற்கொடியாகவும் மயில் வாகனமாகவும் அமைத்துக் கொண்டதாக கந்த புராணம் கூறும். 'அழகு மயில் விந்து, கூவும் சேவல் நாதம்', எனவே நாத விந்து ஆகிறது.

வடலூர் வள்ளலாரும்,
'வானத்தின் மீது மயிலாடக் கண்டேன்
மயில் குயிலாச்சுதடி' என்பார்.

முதலில் உரு தெரிந்தது, பிறகு குரல் புரிந்தது. 'நாதம் இங்கு பின்னே, விந்து முன்னே. வள்ளலாருக்கும் புரிந்துவிடுகிறது.

பட்டிணத்தார் கூட,
'விந்துருகி நாதமாம் மேல் ஒளியைக் காணாமல்
அந்தரத்தே கோல் எறிந்த அந்தகன் டுபால்' என்றும்,
'நாத விந்து தன்னை நயமுடனே பாராமல்
போதம் மயங்கிப் பொறி அழிந்தேன் பூரணமே' என்றும் குறிப்பிடுவார்.

சொல்லும் பொருளுமாய், பழமும் சுவையுமாய், மலரும் மண முமாய் 'ஓம்' என்னும் பீஜாட்சரமாய், அதில் மறைந்துள்ள படைப் புப் புதிராய் அறியப்படுவதுதான் நாதவிந்து பற்றிய விளக்கங்கள்.

எம். வி. வி போன்ற பழுத்த மரபு அறிந்தவர்கள், மேல் எழுந் தவாரியாக, கொச்சையாக ஒரு பெரும் தத்துவத்தை பயன் படுத் திக் கொள்வது பெருமையைச் சேர்க்காது.

'தமிழ்' என்பது நாலா பக்கங்களிலும் பல தடங்களில், தழைத்து வளர வேண்டும் என்ற அவா உந்தப்பட்டு இவை எழு தப்பட்டிருக்க முடியாது. இதனை சிலர் monumental masterpiece என்று 'உத்தி'யை வைத்து மட்டுமே பட்டம் கொடுத்தால் — தவ றான முன்னுதாரணமாய் — படைப்புகளுக்கு இதுவே இலக்கண மாய் இங்கேயும் சரி, விருது பெற்ற பல மொழி அரங்குகளிலும் சரி கருதப்படும் அபாயம் இருக்கிறது.

'வேள்வித் தீ'யையும், 'நித்திய கன்னி'யையும் படைத்த கர்த் தாவுக்கே இந்தக் கருத்துகளை இங்கு வைக்கிறோம். ஆனால், 'பிரமை' என்ற போர்வையில் ஒளிந்துகொண்டு நிற்கும் எம்.வி.வி. யும் அடிப்பட்டுப் போகிறார் என்பதே காதுகளின் தீர்ப்பு.

காதுள்ளவன் கேட்கக் கடவன். (மறை)

படிப்பகம்

www.padippakam.com

தொடர்: 3

# நானும் நாடகமும்

ஜெயந்தன்

— நாடகக் கூறு உள்ள பாஞ்சாலி சபதத்திலிருந்து எடுத்தாக்கப்பட்ட ஒரு ஸ்கிரிப்டைக் கொடுத்தீர்கள். அதே போல் நாடகமாகவே எழுதப்பட்ட நாடகப் பிரதி ஒன்றை கொடுங்களேன். அதில், இதுவரை நீங்கள் சொல்லிவந்த நாடக இலக்கணங்கள் யாவும் பொருந்தி வந்தால் புரிந்து கொள்ள வசதியாக இருக்கும்.

— நல்லது. அதற்குமுன் வசதியாக, ஒரு மரபு வழிக்கதையை (Legendary) விரித்து நாடகமாக்கிய பிரதி ஒன்றைப் பார்ப்போம்.

— சொல்லுங்கள்.

— கதை இதுதான். இரண்டு மோசடிப் பேர்வழிகள். வியாபாரிகள் என்ற வேஷத்தில் ஒரு அரசவைக்கு வருகிறார்கள். அவர்கள், தாங்கள் சில அபூர்வமான பொருட்களை விற்பனைக்குக் கொண்டு வந்திருப்பதாகவும், ஆனால், அந்தப் பொருட்கள் அன்புள்ள தாய்க்குப் பிறந்தவர்கள் கண்களுக்கு மட்டும்தான் தெரியும் என்றும் சொல்கிறார்கள். அவையில் ஒவ்வொருவருக்கும் பயம், எங்கே தங்கள் கண்களுக்கு மட்டுமே அவை தெரியாமல் போய் விடுமோ என்று. ஆகவே அவை தெரியாமல் போனால் தெரிந்ததாகக் காட்டிக் கொள்வது என்று தீர்மானிக்கிறார்கள். அரசன் முதல் காவலாளி வரை இதே நிலை.

இதன் படிப்படியான வளர்ச்சியில், அந்த மோசடிப் பேர்வழிகள் தரும் இல்லாத ஆடையை 'அணிந்து கொண்டு' அரசன் நிர்வாணமாக நிற்கிறான். அவையும் அந்த 'ஆடையை' சிலாகித்து அவனை ஊர்வலமாக அழைத்துச் செல்கிறது.

— இதை வைத்துத்தான் உங்கள் 'மனுஷா... மனுஷா' நாடகத்தை எழுதியிருக்கிறீர்கள் இல்லையா? நான் அதைப் படித்திருக்கிறேன். அது கணையாழியில் வந்ததில்லையா?

— தவறு. அதுவும் கணையாழியில்தான் வந்தது.

— இந்த legendary storyயில் என்ன சிறப்பு அம்சத்தைக் கண்டு இதை நாடகமாக்க எடுத்துக் கொண்டீர்கள்?

— சொல்கிறேன். ரொம்பச் சின்ன வயதிலேயே இந்தக் கதையை இரண்டொரு இடங்களில் கொஞ்சம் - கொஞ்சம் வித்தியாசத்தில் நானே கேட்டிருக்கிறேன். படித்தும் இருக்கிறேன். உலக மொழிகள் பலவற்றிலும் இது இருக்க வேண்டும் என்பதே என் அனுமானம். எங்கள் எதிர் வீட்டு முதியவர் ஒருவர், இந்தக் கதை தெலுங்கில் இருப்பதையும் சொல்லியிருந்தார். (தெலுங்குக்

படிப்பகம்

www.padippakam.com



கதையில் ஒருவன், தன்னால் கடவுளைக் காட்ட முடியுமென்றும், தான் கொண்டு வந்திருக்கும் சிமிழுக்குள்தான் இருக்கிறார் என்றும், ஆனால் உத்தம தாய்க்குப் பிறந்த பிள்ளைகளின் கண்களுக்கு மட்டுமே அவர் தெரிவார் என்றும் சொல்கிறான்.)

ஆங்கிலத்திலும் ஆண்டர்ஸன் இதை விரித்து எழுதியிருப்பதாகத் தெரிகிறது. இதற்கான குறிப்பு, ஒரு உளவியல் புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்த போது எனக்குக் கிடைத்தது, இதில் Exibitionism (நிர்வாண விருப்பம்) பற்றிப் பேச வந்த இடத்தில் இரண்டு வரிகள்:

''ஆண்டர்ஸன் கதையொன்றில் ஒரு அரசவைக்கு வரும் இரண்டு மோசடி வியாபாரிகள், இல்லாத பொருட்களை இருப்பதாகக் காட்டி... ...''

அந்தக் கணத்திலேயே அருமையான நாடகமொன்று அங்கே உட்கார்ந்து கொணடிருப்பது என் கண்ணில் பட்டுவிட்டது. இல்லாத பொருளை இருப்பதாகக் காட்ட வேண்டும் என்று வருகிறபோதே நடிகனுக்கு வேலை வந்துவிடுகிறதல்லவா? இதற்கு மேல் அவனுக்கென்ன சந்தர்ப்பமும் சவாலும் வேண்டும்?

அத்தோடு, அந்தக் கதையில் பேசப்பட்ட விஷயம் (Content) மேலும் எனக்கு வியப்பைத் தருவதாக இருந்தது. ஒரு சின்னதான, ஏதோ எந்தக் காலத்து மனிதர்களோ சும்மா தமாசுக்காக சொல்லிக் கொண்டது போன்ற தோரணை உள்ள கதையில் பெரும் இலக்கியங்களுக்கு ஈடு கொடுக்கிற ஒரு உள்ளடக்கத்தைக் கண்ட வியப்பு அது.

— என்ன உள்ளடக்கம் அது?

— நாலு பேர் வாய்க்குப் பயந்து, அறிந்த உண்மைகளை அறிந்தே காலடியில் போட்டு மிதித்துக் கொண்டு புன்னகை செய்கிற சமூகம் — மனித சமூகம். மனிதனின் Complex களில் எல்லாம் மிகப் பெரிய சோகம், இந்த 'நாலு பேர் என்ன சொல்வார்களோ, என்ன நினைப்பார்களோ' என்று பயந்து பயந்தே 10முதல் 100வரை வாழ்க்கையைக் கழித்துவிடும் சோகம்தான். இந்தப் பயம் மனிதனை பீடித்திருக்காத நேரமே இல்லை. இந்த நாலு பேர்' நன்மதிப்பில் நிலைத்து நிற்க வேண்டும் என்பதற்காக இவன் செய்யும் தகிடுதத்தங்கள், இவன் பண விஷயத்தில் கூட செய்கிறானா என்பது சந்தேகமே. மொத்தத்தில் இந்தப் பயத்தில் புதை குழிக்குப் போய் விடுவது உண்மை.

உண்மையில் அந்த அவையில் காவலாளி முதல் அரசன் வரை யாரும் அந்த வியாபாரிகள் காட்டும் அப்படியொரு ஆடைகளைப் பார்க்கவில்லைதான். ஆனால், அதைச் சொல்ல பயம். தான் முதலில், அப்படியொரு பொருள் தன் கண்ணுக்குத் தெரியவில்லையே என்று சொல்லப் போக, அதே சமயத்தில் மற்றவர்கள் தங்களுக்குத் தெரிவதாகச் சொல்லிவிட்டால்? தன் தாயினுடைய, தன்னுடைய, தன் குடும்பத்தினுடைய மானம் என்னாவது? ஆகவே

படிப்பகம்

www.padippakam.com



இருப்பதாகச் சொல். சமானி. தான் நிர்வாணமாக நின்றாலும் சரி, பட்டாடை பூண்டு ஜொலிப்பதாய் நடி. அதைப் பார்ப்பதாய் நடி.

— கொஞ்சம் இருங்கள். இந்தக் கதையொன்றும் நிதர்சன வகைப்பட்ட கதையில்லையல்லவா?

— ஆமாம். இல்லைதான்.

— இது உண்மையாக இருக்க முடியாதல்லவா?

— நடந்திருக்காதுதான்.

— நடக்க சாத்தியமாவது இருந்திருக்குமா?

— இருந்திருக்காது என்றே வைத்துக் கொள்ளலாம்.

— அப்புறம் எப்படி நடக்காத, நடந்திருக்க சாத்யமில்லாத ஒரு அலாதி கற்பனைக் கதையை எடுத்துக் கொண்டு, அதன் மேல் இப்படியொரு வாழ்வியல் உண்மையைக் கொண்டுபோய் அவ்வளவு பலமாக ஒட்ட வைக்கிறீர்கள்? பாராட்டுகிறீர்கள்?

— ஆகா, அருமையான கேள்வி. நிச்சயம் தெளிவு படுத்திக் கொள்ள வேண்டிய விஷயம்.

இலக்கியம், நாடகம், ஓவியம், சிற்பம் என்று எல்லா கலைகளுக்கும், ஒவ்வொன்றிற்கும் பல வடிவங்கள்(Forms) உண்டு இயற்கையாகவே.

நிதர்சன வடிவம் (Realistic), இந்தக் கதையின் வடிவம் போன்ற மறைபொருள் குறியீட்டு வடிவம் (Allegory), குறியீட்டு வடிவம்(Symbolic) வகையறா ... வகையறா.

ஆனால், எல்லா வடிவங்களுமே ஒரு விஷயத்தில் இரண்டு பெரும் பிரிவுக்குள் வந்து விடுகின்றன. ஒன்று: நிதர்சன வடிவம். இன்னொன்று நிதர்சனம் அல்லாத வடிவம் (Non-realistic). இந்த நிதர்சனம் அல்லாத வடிவங்களை, ‘செயற்கை வடிவங்கள்’ என்றும் சொல்வதும் உண்டு. இந்த இரண்டு பெரும் பிரிவுகளுக்கு இடையே உள்ள வேறுபாடு என்ன வென்றால், Logic.

நிதர்சன வடிவம் Logic கொண்டது. காரண காரியம் கொண்ட நிகழ்வுகளை நேரடியாகச் சொல்லிப் போவது. நீங்கள் கேட்டது போல, இது நடந்தது அல்லது நடக்க சாத்தியமுள்ளது என்ற காட்சிகளைக் கொண்டது.

ஆனால் நிதர்சனமல்லாத வடிவங்கள் இதற்கு நேர்மாறானது; லாஜிக் இல்லாதது. காரண காரிய தொடர்ச்சியை வேண்டுமென்றே அறுத்துக் கொண்டது. நிகழ்ச்சிகள் உண்மையாக இல்லாமல் இருக்கும். ஈஸாவின் நரியும் காக்கையும் கதையிலிருந்து காப்காவின் Metamorphasis (கதாநாயகன் ஒரு நாள் காலையில் எழுந்ததும் ஒரு பூச்சியாக ஆகி இருக்கிறான் அலலவா) வரையிலும் எல்லாமே நடக்க சாத்தியமில்லாத நிகழ்வுகளைக் கொண்ட கதைகள்தான்.

படிப்பகம்

www.padippakam.com



ஆனால் இந்தவகை வடிவப் படைப்புகளுக்கும் கூட வரவேற்பும் நிலைப்பும் இருப்பது எதனால்?

உண்மை இதுதான். இந்தவகை செயற்கை வடிவங்கள், வடிவங்கள் என்ற வகையில்தான் செயற்கையே தவிர, அவைகளின் உள்ளடக்கங்கள் (Contents) நிதர்சனமானவையே. லாஜிக்கிற்கு உட்பட்டவையே. இவைகளின் அடிநீரோட்டம் உண்மையே. உண்மையைப் பிரதிபலிப்பவையே.

இன்னொரு வகையில் இவை கவிதையை ஒத்தவை என்றும் சொல்லலாம். கவிதையை ஒரு Non-logical form என்று உறுதியாகவே சொல்கிறார்கள். ஆனால் கவிதையின் வடிவம்தான் Non-logical. அதன் உள்ளடக்கம் தர்க்கத்திற்கு உட்பட்டதுதான்.

தமிழன்பன் சொல்வார்: அந்த மலடாகிப் போன
நாட்களின் மடியில்...'

வடிவமற்ற நாட்களுக்கு வடிவம் கொண்ட 'மடி' ஏது? வயிறு ஏது? அது மலடாகிப் போவது அல்லது மகப்பேறு கொள்வது என்பதெல்லாம் ஏது? லாஜிக்கிற்கு அகப்படாத வரிகள்தாம்.

ஆனால் கவிதையின் பொருள்?

அது, 'அவர் எதையும் வாங்கிக் கொள்ளாது, எதையும் வெளியிடாது, எதுவுமே செய்யாது சோம்பிக் கிடந்த நாட்களையல்லவா' பிரதி செய்கிறது. அந்த நிலை லாஜிக் பூர்வமான ஒரு நடப்பு நிலைதானே?

சமீபத்தில் இந்திரனும் தனது 'சாம்பல் வார்த்தைகள்' நெடுங் கவிதையில் சொல்வார்: அறுவடை வயல்கள்
தீயில் எரிகையில்
அகதிகள்
மரணத்தின் மூச்சுக் காற்றை
பிடரியில் உணர்ந்தபடி ஓடுகிறார்கள்.

இங்கேயும் கவிதை வடிவம் ஆகாயத்திலும், கவிதைப் பொருள் மண்ணிலுமாக இருப்பதைப் பார்க்க முடியும்.

(ஒருவேளை மதவாதிகள் - கடவுளைக் காப்பாற்ற நினைப்பவர்கள் - மிஸ்டிஸிஸத்தைக் கட்டியழ நினைப்பவர்கள் கவிதையின் உள்ளடக்கத்தையும் Non-logicalஆக வைத்து கவிதை பண்ணிப் பார்க்கலாம். அப்படியானால் அது கவிதையல்ல; கப்ஸா. அது வேறு விஷயம்.)

கரடுமுரடாகவும், கோணலாகவும், கிறுக்குத்தனமாகவும் தெரியும் இந்த நிதர்சனமற்ற வடிவங்களை உடைத்துப் பார்த்தால் உள்ளே உண்மை பளிச்செனச் சுடர்வது தெரியும். பல நேரங்களில் நிதர்சன வடிவம் காட்டுவதைவிட அதிகப் பிரகாசமாகவே தெரியும். பெரும்பாலான நேரங்களில் உண்மையைக் காட்ட இந்த நிதர்சன வடிவம் போதாமல் இருக்கிறது என்பதற்காகவே இந்த செயற்கை வடிவங்கள் கையாளப்படுகின்றன.

படிப்பகம்

www.padippakam.com



— ஒரு உதாரணம் சொல்லுங்கள்.

— உதாரணமா? சரி.

ஊழல் இன்றைக்கு காற்றைப்போல எங்கும் நிறைந்திருக்கிறது. நாடுகள் என்ற வேற்றுமைகூட இல்லை அதற்கு.

உங்களுக்கே தெரியும், தமிழகத்தில் பூச்சி மருந்து, அல்லது கப்பல் பேரம் அல்லது... அல்லது... வகையறா.

வடக்கே பொஃபர்ஸ், ஹர்ஷத்... வகையறா.

ஜப்பானில் லாக்ஹீட். அமெரிக்காவில் வாட்டர் கேட்.

வியப்புக்குரிய பல ஒற்றுமைகளை இவைகளில் பார்க்க முடியும். உதாரணத்திற்கு, ஊழல் செய்யும் வாய்ப்பிலிருக்கிற ஆளுங்கட்சியின், அதன் தொண்டர்களின் மன நிலை. கட்சியும் தொண்டர்களும் கடைசி வரை தங்கள் தலைமை குற்றமுள்ளது என்று ஒத்துக்கொள்வதே இல்லை. பொஃபர்ஸ் விஷயத்தில் காங்கிரஸ் கட்சி போடும் குட்டிக்கரணங்கள் உங்களுக்கே தெரியும். தமிழ் நாட்டில் ஒரு ஆளுங்கட்சி மீதான ஊழல் புகார் பற்றி, டீக் கடை அரசியலில் நீங்கள் உண்மையைப் பேசிவிட்டு, அவ்வளவு எளிதாகத் தப்பிவந்து விட முடியாது.

எதிர்க் கட்சிகள் நிலையும் அதுதான். இப்போது சண்டப்பிரசண்டமாகக் குற்றம் சாட்டும் இதே கட்சிகள் ஆட்சிக்கு வந்துவிடும் போது, தங்கள் தலைமைகளைக் காக்க கயிறு மேல் நடந்து காட்டுவதையும் நீங்கள் பார்த்திருக்க முடியும்.

இந்நிலை ஜப்பானிலும் அமெரிக்காவிலும் கூடத்தான். இல்லையென்றால், சொந்தக் கட்சியின் தலைமை செய்த ஊழலைக் கண்டித்த அதே கட்சிக்காரர்கள் யாரையாவது எந்த நாட்டிலாவது பார்த்ததாக நீங்கள் சொல்லவேண்டும். அவர்கள் வெளிப்பட்டதும் சில சமயம் 'தண்டிக்கப்பட்டதும்'கூட எதிர்க் கட்சிகளால்தான். அப்படி எங்காவது சொந்தக் கட்சியே கண்டித்திருந்தால், அங்கே நிச்சயம் உட்கட்சி அரசியல் விளையாடியிருக்கும்.

இப்படி, மதம், அரசியல், இனம், மொழி, நாடுகள் கடந்த இந்த ஊழல் மயத்திற்கு 500 கோடி உலக மக்களின் குரல்வளையை நெரிக்கும் ஒரு காரியத்திற்குக் காரணமாக இருக்கும் அசுர சக்தி எது என்ற கேள்வியையும் தேடலையும் முன் வைக்கிற நாடகம் ஒன்றை எழுத முற்படும்போது, அது எப்படி, எந்த வடிவத்தில் இருக்க முடியும்?

உறுதியாக, என்னால் அதை ஒரு நிதர்சன வடிவத்தில் கொடுக்க முடியும் என்று தோன்றவில்லை.

செய்யலாம். ஒரு கிராமத்து டீக் கடையில் அல்லது சாராயக் கடையில், நான்கு ஆளுங் கட்சித் தொண்டர்களையும் நான்கு எதிர்க் கட்சித் தொண்டர்களையும் மோதவிடலாம். ரொம்ப சுவாரஸ்யமாகத்தான் இருக்கும். குறிப்பாக, அவர்களுடைய வெகுளித்தனம் நல்ல நகைச்சுவையாகவும் இருக்கும். ஆனால் அது பாவம். இந்தத் தொண்டர்களையும் அவர்களின் தமிழகத்துத் தலைவர்க

படிப்பகம்

www.padippakam.com



ளையும் மட்டுமே விமர்சிக்குமல்லாது ஊழலின் உலகு பரந்த தன் மையையும் முன் சொன்ன அந்த அசுர சக்தியையும் இனங் காண உதவாது. உலகம் இன்று தமிழ்நாடு மட்டுமல்ல. — யாருக்கும்.

இன்று துபாயிலிருந்து புறப்பட்டு, வெற்றிகரமாக பம்பாய் வந்து சேரும் அல்லது நடுவில் பிடிபட்டுவிடும் நான்கு கடத்தல் படகுகள் இந்திய தங்கத்தின் விலையை மேலும் கீழுமாக நிர்ணயம் செய்கின்றன.

சூரத்தில் கண்ட பிளேக் நோய், திருநெல்வேலியிலிருந்து சவூதி அரேபியா புறப்பட வேண்டிய அப்துல்லா பயணத்தைப் பாதிக்கிறது.

இங்கே 'பொஃபர்ஸ் குற்றவாளிகள்' யாராகத்தான் இருக்க முடியுமென்று, ஒரு சில சத்திய வேட்கை கொண்ட மனங்களாவது துடித்துக் கொண்டிருக்க, அந்த வழக்கின் கதியோ ஸ்வீடனின் வங்கி மற்றும் அரசு அதிகாரிகளின் மேஜைமேல் போட்ட கால்களின் சாவகாசமான ஆட்டத்தைப் பொறுத்ததாக இருக்கிறது.

ஆகவே ஒரு உலகளாவிய பிரச்சினையை படைப்பின் கருவாக எடுத்துக் கொள்கிற போது, இன்று படைப்பவன், அதன் சகல கோணங்களையும் Focus செய்ய வேண்டிய அவசியத்தில், இயற்கையாகவே நிதர்சன வடிவத்தைத் தவிர்த்துக் கொண்டு ஏதாவதொரு செயற்கை வடிவத்தை எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

இதற்கான எனது நாடகத்தில், மேடையில் நிற்கும் பத்து நடிகர்களின் முகமூடிகள் ஒரே மாதிரியாக அவர்கள் அனைவரையுமே 'ஒரே மனிதனாகக்' காட்ட, உடைகளோ அவர்களை 10 மனிதர்களாகக் காட்டுகின்றன. அவர்கள் பெயர்களில், அவர்கள் அழைத்துக் கொள்வதில், சில சொற்களில் உலகின் பல மொழிகள் கலந்திருக்கின்றன.

இந்த ஆதாரமான அமைப்புதான் எனது கருவை அந்த நாடகத்தில் பதிக்க வசதிமிக்கதாக இருக்கிறது.

— இந்த நாடகத்தை எழுதிவிட்டீர்களா?

— இல்லை. எழுத வேண்டும். அதிருக்கட்டும். உங்கள் கேள்விக்குப் பதில் கிடைத்ததா?

— கிடைத்த மாதிரிதான்.

— நல்லது. இப்போது 'மனுஷா ... மனுஷா' என்கிற செயற்கை வடிவ நாடகத்தில் — அதில் வரும் நிகழ்ச்சிகளுக்கும் வாழ்வின் உண்மைகளுக்கும் உள்ள உறவைப் பார்ப்போம்.

முதலில் இந்த செயற்கை ஒளி பட்டுத்தெறித்தது உண்மையின் மேல்தான் என்பதற்கு ஒரு தற்செயலான நிகழ்ச்சி.

இந்த நாடகத்தை ஒரு ஏழெட்டு வருஷங்களுக்கு முன் தொலைக் காட்சிக்குக் கொடுத்திருந்தேன். அப்போது வந்த பதில்: "வேண்டாம். இந்த நாடகத்தில் எம்ஜியார் வருகிறார். அவர்

படிப்பகம்

www.padippakam.com



Negativeஆக, சித்தரிக்கப்படுகிறார்.'' அப்போது முதலமைச்சர் எம்ஜிஆர்.

பிறகு, இப்போது நான்கு வருஷங்களுக்குமுன் மீண்டும் ஒருவர் வாங்கிப் போனார். இப்போது வந்த பதில், ''வேண்டாம். இதில் கலைஞர் வருகிறார். அவர் Negativeஆக சித்தரிக்கப் பட்டிருக்கிறார்.'' இப்போது முதலமைச்சர் கலைஞர்.

எப்படிக் கதை?

உண்மையில் இந்த நாடகத்தை எழுதும் போது இந்த இரு முதலமைச்சர்களும் என் மனதில் இல்லவேயில்லை. இருந்தது, துக்ளக்கும் அவுரங்கசீபும் மட்டுமே. துக்ளக்கை அவனது பிரசித்தி பெற்ற புத்திசாலித்தனமான கோமாளித்தனங்களுக்காகவும், அவுரங்கசீபை, அவன் காலத்தில் நடந்த இரண்டு சரித்திர சம்பவங்களுக்காகவும் சேர்த்திருந்தேன். அதிலும், இவர்கள் வருகிற இடமோ நாடகத்தின் மையப் பிரச்சனையில் அல்ல. அந்த அரசனும் அவனது அவையும் வரப்போகிற மோசடிக்கு சுலபமாக இரையாகக்கூடியவர்கள்தான் என்பதை, அந்தப் பக்குவத்தில்தான் இருக்கிறார்கள் என்பதை பார்வையாளர்கள் கருத்தில் துவக்கத்திலேயே Establish செய்து விடுவதற்காக, ஒரு வகையான முன்னோட்டம் போல் அமைந்த பகுதியில்தான் இவர்கள் வருகிறார்கள். வியாபாரிகள் அதன் பிறகுதான் வருகிறார்கள்.

— ஔரங்கசீப் இந்த நாடகத்தில் எங்கே வருகிறான்?

— அவுரங்கசீப் வாழ்க்கையில் ஒரு சம்பவம். ஒரு தடவை குரான் அனுமதிக்க வில்லையென்று மறுநாள் முதல் இசை நிகழ்சிகளே நடக்கக் கூடாதெனக் கட்டளை பிறப்பித்து விட்டான்.

மறுநாள் பாடகர்கள் பத்துப் பன்னிரெண்டு பேர் தலையில் முக்காடு போட்டுக் கொண்டு அரண்மனை வாசல் முன் வந்து நின்று, விஷயத்தை சொல்லி விட்டார்கள். ஆள் வந்து அவுரங்கசீப்பிடம் சொன்னான்: இசைவாணி இறந்துபோய்விட்டாளாம், அதனால் முக்காடிட்டு துக்கம் கொண்டாடுகிறார்கள் என்று.

இதைக் கேட்டதும் அவுரங்கசீப் தயங்காமல் சொன்னது: 'நல்லது. அவளைக் கொண்டு போய் ஆழமாகக் குழி வெட்டி புதைத்து விடச் சொல்லுங்கள்.'

இதையேதான் இந்த நாடகத்தின் அரசனும் சொல்கிறான். இவன், நாட்டியமாடுவதை தடை செய்து விட்டதைக் கண்டித்து பத்துப்பன்னிரெண்டு நாட்டியக்காரிகள் அரண்மனை வாசலில் முக்காடிட்டு நின்று நாட்டிய தேவதை செத்துப் போய் விட்டாள், அதற்காக துக்கம் கொண்டாடுகிறோம் என்று சொல்லும்போது, இவன் சிறிது யோசனைக்குப் பிறகு 'அப்படியா, அப்படியானால் நமது முன்னோன் ஒருவன் சொன்ன பதிலையே உனது அரசனின் பதிலாகவும் சொல்' என்று அதே பதிலைச் சொல்கிறான்.

இன்னோர் நிகழ்ச்சி. அவுரங்கசீப் மதுவிலக்கை கடுமையாக்கி, மீறிக்குடிப்பவர்கள் தலையை வெட்டி, குறிப்பிட்ட பள்ளத்தாக்கில்

படிப்பகம்

www.padippakam.com



போடும்படி உத்தரவிட்டான். இவ்வளவு கடுமையான தண்டனை விதிக்கப்பட்டும், அந்தப் பள்ளத்தாக்கு வேகமாகத் தலைகளால் நிரம்பி வந்ததே தவிர, குடிப்பது குறையவில்லையென்றும், அந்தத் தண்டனைகள் அளித்த நீதிபதியின் வீட்டுக்கே இரவில் பத்து கோப்பைகள் மது சென்றதாகச் சரித்திரக் குறிப்பு உள்ளது.

— ஆமாம். இந்தக் கட்டத்தில்தான் இந்த அரசனும் நீதி பதியின் உடம்பை சூரைப் பள்ளத்தில் உருட்டிவிடச் சொல்கிறான். அப்போது ஒற்றர் தலைவன் குறுக்கிட்டு அந்த நீதிபதியின் தலையையும் உருட்டி விட்டுவிடுவதில் மறுப்பொன்றும் இல்லையென்றும், ஆனால் இச்சட்டத் தின் விளைவுகள் பாரதூரமாயிருப்பதை அரசன் சிந்திக்க வேண்டுமென்று சொல்கிறான். அவன் எடுத்துரைக்கும் காரணம் மதுக் குற்றவாளிகள் மரணம் அடைந்துவிட, அவர்களது குடும்பப் பெண்கள் கடைசியாக விபசாரத்தில் இறங்கிவிடுகிறார்கள் என்பது. இதைக் கேட்ட அதிர்ச்சி யில் அரசன் உடனே மதுவிலக்குச் சட்டத்தை ரத்து செய்கிறான்.

— இந்த இடத்தில் வரும் எட்டு உரையாடல்களில் ஒரு விசே ஷம் இருக்கிறது. அதற்காக அதை அப்படியே திரும்பப் படிக்க லாம். அதை நான் சொல்கிறேன்.

ஒற்றர் தலைவன்: இந்த நீதிபதியையும் உருட்டிவிடுவதில் ஆட்சே பனை ஒன்றுமில்லை அரசே. ஆனால் நாம் ஒரு விஷயத்தைக் கவனிக்க வேண்டியிருக்கிறது. குற்றவாளிகள் என்னவோ போய்ச் சேர்ந்து விடுகிறார்கள். ஆனால் அவர்களின் குடும்பங்களின் நிலை. அவர்கள் ஒரே நாளில் தெருவுக்கு வந்துவிடுகிறார்கள்.

அரசன்: அது அவர்கள் தலைவன் செய்த வினை.

அமைச்சர்: அவர்கள் கொண்டு வந்த விதி.

ஒற்றர் தலைவன்: அது அவர்கள் வினையாக இருந்தாலும், விதி யாக இருந்தாலும் அவர்களால் இந்த நாட்டிற்கு உண்டாகும் பேராபத்தை அரசர் கவனிக்க வேண்டும்.

அரசன்: என்ன பேராபத்து?

ஒ. தலைவன்: அவர்கள் கடைசி அடைக்கலமாகவாவது விபச்சா ரத்தில் இறங்கிவிடுகிறார்கள்.

அரசன்: (அதிர்ந்து) என்ன?

ஒ. தலைவன்: ஆம் அரசே. இதற்காகவே குடிகாரனை சிப்பாய் களிடம் பிடித்துக் கொடுக்கும் அண்டை அயலார்களும் உண்டு.

அரசன்: (சிறிது நேரம் உலவிக் கொடுத்துவிட்டு) இது சிந்திக்க வேண்டிய விஷயம். கற்புதான் இந்த நாட்டின் உயிர் மூச்சு. இந்த நாட்டின் பண்பாட்டின் ஆனிவேர். எது இல்லாவிட்டாலும் இந்த நாட்டில் கற்பு இருந்தாகவேண்டும். எது இருந்தாலும் இந்த

படிப்பகம்

www.padippakam.com



நாட்டில் விபச்சாரம் மட்டும் இருக்கக் கூடாது. நான் இந்த நிமிஷமே மதுவிலக்கை ரத்து செய்கிறேன்.

— இந்த வசனங்களில் என்ன சிறப்பு, சொல்லுங்கள்.

— மரணதண்டனை விதிக்கப்பட்ட மதுக்குற்றவாளிகளின் குடும்பங்கள் ஒரே நாளில் தெருவுக்கு வந்துவிடுவது, 'அது அவர்கள் செய்த வினை'யாகிறது அரசனுக்கு. அமைச்சருக்கு, 'அது அவர்கள் கொண்டு வந்த விதி'யாகிறது. ஆனால், அவர்கள் கடைசியாக விபச்சாரத்தில் இறங்கிவிடுவது மட்டும் அவர்கள் சொந்தச் செயல் என்றாகிறது. அரசு அவசியம் கவனிக்க வேண்டிய காரியமாகி விடுகிறது.

அதாவது இவர்களது ஆவேசமெல்லாம் மனித ஜீவிகளின் துன்ப - துயரங்கள், அவஸ்தைகள், உணர்வுகள், உணர்ச்சி பற்றியதல்ல. தாங்கள் வரித்துக் கொண்டிருக்கிற தத்துவார்த்தத்தின் (இங்கே கற்பு) நிலைப்பு மட்டுமே. (அதிலும் இவர்கள் எவ்வளவு போலி என்பது வேறு விஷயம்.)

அது இருக்கட்டும். இங்கே ஒரு சுவாரஸ்யமான விஷயம். இங்கே நிதர்சனத்தில் இதே விஷயத்தில் இந் நூற்றாண்டின் மிகப் பெரிய மனிதர் ஒருவர் சிக்கிக் கொள்கிறார் தெரியுமா?

— மிகப் பெரிய மனிதரா?

— ஆம் ரொம்பப் பெரிய மனிதர்.

— யாரது?

— சாட்சாத் மகாத்மா காந்தி அவர்கள்.

— என்ன சொல்கிறீர்கள்?

— ஆம். அவர் விதவைகள் மறுமணத்தை ஆதரித்தவர் அல்லவா. அதற்கு அவர் சொல்லும் காரணம் என்ன தெரியுமா?

— சொல்லுங்கள்.

— முதலில் கவனிக்க வேண்டிய விஷயம் அவர் 'பால்ய விதவைகளைப்' பற்றிதான் கவலை தெரிவிக்கிறார் என்பது. 15 வயதுக்கு மேற்பட்ட விதவைகளைப்பற்றி அவர் என்ன கருத்து கொண்டிருந்தார் என்று தெரியவில்லை. பால்ய விதவைகள் பற்றிப் பேசும்போது ரொம்ப காரசாரமாகத்தான் பேசுகிறார். ஒரு புரட்சிக்காரராகத்தான் தோன்றுகிறார்.

அவர் பேசுகிறார்: ''பால்ய விதவைகளைக் கட்டாயப்படுத்தி வைத்திருப்பது போன்று, இயற்கைக்கு விரோதமான பொருள் உலகில் வேறொன்றும் இல்லையென்பது எனது திடமான நம்பிக்கை. விதவைத் தன்மை என்பது எந்தவிதத்திலும் ஒரு தர்மமாகாது. பலாத்காரத்தால் அனுஷ்டிக்கச் செய்யும் எவ்விதச் செயலும் அறமாகாது. பலாத்காரத்தினால் நடத்தும் விதவை வாழ்வு பாவமானது. 15 வயதுள்ள ஒரு பால்ய விதவை தானாகவே விதவை வாழ்வை மேற்கொண்டிருக்கிறாள் என்று சொல்வது, அவ்விதமாகச்

படிப்பகம்

www.padippakam.com



சொல்வோரின் கொடூர சுபாவத்தையும் அறியாமையையுமே விளக்குகிறது.''

பின்னர் அந்த பால்ய விதவைகளுக்கு 'புத்தி' சொல்ல வரும் போது பல படிகள் இறங்கி வந்து மிதவாதியாக, போகாத ஊருக்கு வழி காட்டுகிறார்.

'அமைதியுடன் தங்கள் துக்கத்தை சகித்துக் கொண்டு, தங்களுடைய உண்மையான கருத்தை தங்கள் பெற்றோர் அல்லது போஷகர்களான புருஷர்களிடம் ஸ்திரீ தைரியமாகச் சொல்லிவிட வேண்டும். அவர்கள் கவனிக்காவிட்டால் தாங்களே ஒரு புருஷன் கிடைத்தால் உடனே விவாகம் செய்து கொள்ளட்டும். அதுவரை யோக்கியமான புருஷனை அடைய தமயந்தி, சாவித்திரி போல் தவம் செய்வதே ஏற்ற வழியாகும்.'

அவர் இதோடு மட்டுமாவது நின்றிருக்கலாம். முடியவில்லை. கடைசியாக தனது அசலான நிலைப்பாட்டிற்கு — இந்து Fundamentalismதிற்கு வந்து நிற்கிறார்.

'விதவைகளின் போஷகர்கள்' இவற்றை சரிவரக் கவனியாவிடில் பின்னால் பச்சாதாபப் படுவார்கள். ஏனெனில் நான் ஒவ்வோரிடத்திலும் துராச்சாரமே பார்த்துக்கொண்டு வருகிறேன். விதவைகளைப் பலாத்காரமாகத் தடுத்து விதவைத் தன்மைகளை அனுஷ்டிக்கச் செய்வதால் விதவைகளுக்காவது, குடும்பத்திற்காவது, விதவா தர்மத்திற்காவது மேன்மை உண்டாகவே மாட்டாது. இம்மூன்று தத்துவங்களும் நசிந்து வருவதை என் கண்ணாலேயே பார்த்துக் கொண்டு வருகிறேன்.' ஏதாவது பழமொழி ஞாபகம் வருகிறதா?

— ஆடு நனைகிறதென்று...

— இதேமாதிரியான இன்னொரு விஷயத்தில் இன்னொரு பெரிய மனுஷியும் சிக்குகிறார்.

— பெரிய மனுஷியா?

— ஆமாம். அன்னை தெரஸா! நான் பொதுவாக சிலரைப் பற்றி சொல்வதுண்டு. 'இவர்கள்- இவர் எழை மக்களை நேசித்தார் என்பதற்காக யேசுவை நேசிப்பவர்கள் அல்ல. இவர்கள் யேசுவை நேசித்தனர் என்பதற்காக, ஏழைகளை நேசிப்பவர்கள்' என்று. அதே போல அன்னை தெரசாவின் அன்பு, மதம் சார்ந்தது. மத அனுஷ்டானங்களில் ஒன்று. நாளை மதத்திற்கும் அன்புக்கும் எங்காவது முரண்பாடு வந்தால் இவர் நிற்கப்போவது மதத்தின் கட்சியில்தான். அன்பின் கட்சியில் அல்ல. ஏன் இப்படிச் சொல்கிறேன் என்றால், இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன் மதத்திற்கும் உண்மைக்கும் இடையில் வேறுபாடு வந்த போது இவர் வெகு தைரியமாக (அல்லது அசிங்கமாக) நின்றது மதத்தின் பக்கம்தான். அப்போது அவரிடம் கேட்டார்கள். இப்போது கலிலியோ இருந்து, பூமி சூரியனைச் சுற்றி வருகிறது என்று சொல்வ

படிப்பகம்

www.padippakam.com



தற்காக மதகுருமார்கள் அவருக்குத் தண்டனை கொடுத்தால் நீங்கள் யார் பக்கம் இருப்பீர்கள்?'

விஞ்ஞான உண்மையை அறிந்தே, புறங்கையால் மறுதலித்துக்கொண்டு அன்னை தெரஸா சொன்ன பதில்: 'மதத்தலைவர்கள் பக்கம்தான்.'

இப்போது இந்த நாடகத்தின் அரசன், காந்தியடிகள், அன்னை தெரசா மூவரும் ஒரே நேர்க் கோட்டில் வருவது உங்களுக்கு தெரிகிறதல்லவா?

— தெரிவதென்ன. ஆச்சரியமாகவும் இருக்கிறது, ஒரு மறை பொருள் நாடகத்தில் இவ்வளவு விஷயங்களும் வரமுடியுமென்று.

— பொறுங்கள். இன்னும் நாடகம் நெடுக வரும் நம்மைச் சுற்றியுள்ள மனிதர்களைப் பாருங்கள்.

— சொல்லுங்கள்.

— இந்த அரசன் 'ராஜநர்த்தகி' பதவியை ஒழித்தது பற்றி குபேரன் என்கிற 'மொட்டை தத்துவார்த்தவாதி' (ராகுல சாங்கிருத்தியாயனுக்குப் பழைய பண்டிதர்கள் கொடுத்த பெயர்) மட்டும் எதிர்க் கருத்து தெரிவிக்கிறான். நாட்டியத்தில் ஆடுவது பெண் என்றாலும் அங்கே அந்தப் பெண்ணுக்கும் ரசிகனுக்கும் சம்பந்தமில்லை. அங்கே ஒரு பெண் மூலம் கலையானது தனது இருப்பை நிகழ்த்திக் காட்டுகிறது. அங்கே கலைக்கும் ரசிகனுக்கும் இடையே உண்டாவதுதான் நியாயமான உறவே தவிர, அங்கே போய் பெண்ணைப் பார்த்துக் கொண்டிருப்பவன் முதிராத மனிதன் என்று சொல்லியிருக்கிறான்.

இதற்கு அரசவைக் கவிஞன் எழுந்து பேசுகிறான். 'நான் பகிரங்கமாகவே சொல்கிறேன். நான் ராஜ நர்த்தகி கோமளாவின் ஒவ்வொரு அசைவிலும் பெண்ணைத்தான் கண்டேன். அவள் புதிது புதிதாக ஏதோ செய்து காட்டியபோதெல்லாம் அவள் தனது அங்க அழகின் முழுப் பரிமாணத்தையும் காட்டும் முயற்சியாகத்தான் அது எனக்குத் தோன்றியது. அதனால் நான் பெற்றதெல்லாம் வெறும் காமமே. இந்த உண்மையைச் சொல்ல எனக்கு வெட்கமில்லை. உண்மை மகத்தானது. அது வெட்கங்களுக்கு அப்பாற்பட்டது.'

இதைச் சொன்னதும்கூட நமது 'பெரிய' எழுத்தாளர்களில் ஒருவர்தான். அவர் என்னிடம் ஒரு நாட்டிய தாரகையின் பெயரைக் குறிப்பிட்டு, அவரிடமே 'நீங்கள் ஆடும்போது என்னால் ஒரு அழகான பெண்ணை மட்டுமே பார்க்க முடிகிறது' என்று சொல்லிவிட்டதாகச் சொன்னார். அப்போது நான் ஒன்றும் பதில் சொல்லவில்லை. ஆனால், இன்னும் 15 ஆண்டுகள் போகட்டும்; இவரது பெண் 'ஆடரச்சே' இவருக்குப் பெண்ணும் கலையும் தனித்தனியே தெரியும் என்று நினைத்துக்கொண்டேன். இப்போது அவருக்கு அவ்விதமே நேரும் என்றே நினைக்கிறேன். ஆயிற்றே அதுவும் 15 ஆண்டுகள்.

படிப்பகம்

www.padippakam.com

# விலை தேடும் பரிசு

ஜெயந்தன்

இலக்கியத்திற்கு பரிசு வழங்கும் வரிசையில் இவ்வாண்டு முதல் 'அக்னி' அமைப்பும் தன்னைச் சேர்த்துக் கொண்டிருக்கிறது.

பரிசின் பெயர் **'அக்ஷர'**

இது பற்றி இவ்வாண்டு ஜூலையில் பொதுவான அறிவிப்பு ஒன்று வந்தபோதே, நான் திரு. மாலனுக்கு ஒரு கடிதம் எழுதினேன், 'இது என்னய்யா, தமிழுக்காக, தமிழனுக்கு, 'தமிழன்' வழங்கும் பரிசுக்கு சமஸ்கிருதத்தில் பெயர்' என்று. கூடுதலாக ஒரு விஷயம்கூட எழுதியிருந்தேன். மார்க்ஸிஸத்தின் ஈர்ப்பால் மொழி பற்றி சுரணை அற்றுப் போயிருந்த காலத்தில் அரும்பிய என்னைப் போன்றவர்கள் ஜெயந்தன், அக்னிபுத்திரன், கவிதா சரண் என்று பெயர் வைத்துக் கொண்டோம். ஆனால் இப்போது 'தமிழன்' என்று பெயர் வைத்துக் கொள்ளக் கூடிய சுரணைமிக்க காலம். இப்படிப்பட்டதொரு கால கட்டத்தில் இப்படியொரு பெயர் வைக்கலாமா? தயவு செய்து அதை 'எழுத்து விருது' என்று பெயர் வைக்க முயற்சி செய்யுங்கள் என்று எழுதியிருந்தேன்.

இந்த அய்ந்து மாதங்களில் அவரிடமிருந்து எந்தவிதப் பதிலும் இல்லை. ஒரு சக எழுத்தாளன் எழுதிய கடிதம் என்கிற மரியாதையின் நிமித்தமாகவும் கூட, ஒருவேளை அவரும் அக்னி அமைப்பாளர்களும் அது பற்றிய சிந்தனையில் இருக்கலாம் என்று கூட நினைத்தேன்.

ஆனால் இப்போது ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் என்பது போல அறிவிப்பு வந்திருக்கிறது. 'அக்ஷர விருது' என்பது ரொக்கம் அய்யாயிரத்தோடு ஐம்பொன்னாலான சரஸ்வதி சிலையொன்றும் கொண்டதென்று.

'சரஸ்வதி', இந்து மத தத்துவார்த்தங்களில் ஒரு பெண் தெய்வம். கல்விக்கும் கலைக்கும் பொறுப்பான தெய்வம்.

மிக எளிய பகுத்தறிவு ஆரம்பப் பாடத்திற்குக் கூட தாக்குப் பிடிக்க முடியாத ஒரு கற்பனை வடிவம்.

நால் வருண- பார்ப்பனிய- இந்து மதத்தின் புன்மைகளைப் பற்றி நான் இங்கே திரும்பத்திரும்ப பேசிக்கொண்டிருக்க விரும்பவில்லை. அது பார்ப்பன இனத்திற்கு சுக போக சாம்ராஜ்யங்களை சமைத்துக் கொடுப்பது. அது தலித்துகளை ஒரு உயிருள்ள பொருளாகக் கூட மதிக்காதது. சுருக்கமாக இவ்வளவு போதும்.

இப்போது 'அக்னி' அந்த மதத்தின் பிரச்சாரக் கருவியான புராணங்களில் வரும் ஒரு பாத்திரத்தையும் அந்த மதத்தைத் தாங்கி நிற்கும் ஒரு மொழியையும் தூக்கிப் பிடிக்கிறது.

இலக்கிய செழுமைக்கும் ஞானத்திற்கும் ஒரு குறியீடான உருவம் வேண்டுமென்றால் வள்ளுவன், இளங்கோ, பாரதி, புதுமைப் பித்தன், தாகூர், டால்ஸ்டாய் என்று எத்தனையோ இலக்கிய

படிப்பகம்

www.padippakam.com



சிகரங்களில் ஒருவரது சிலையைத் தேர்வு செய்திருக்க முடியும். ஆனால் 'அக்னி' சரஸ்வதியைத் தேடிப் போயிருக்கிறது.

ஆச்சரியமாக இருக்கிறது. 'தமிழன்' என்று பெயர் வைத்துக் கொண்டும், நாங்களும் தமிழர்களே என்று சொல்லிக் கொண்டும், நாங்களும் தமிழ்ச்சேவை செய்கிறோம், நாங்களும் புரட்சி மனம் படைத்தவர்களே என்று சொல்லிக் கொண்டிருக்கும் ஒரு குழுவின் இதயத்தின் ஆணி வேர் இன்னமும் இந்த லட்சணமான இந்து மதத்தில்தான் பதிந்திருக்கிறதா?

அப்படியோர் இறுதியான முடிவுக்கு வந்திடத் தயக்கமாகவே இருக்கிறது. ஆனால் நமக்கு ஒரு சாராரைப் பற்றி நிச்சயமாகத் தெரியும். அவர்கள் சொல்கிறார்கள்: 'இந்தியாவிலுள்ள எவனாக இருந்தாலும் அவன் இந்து மதத்துக்காரன்தான். அவன் தாய் மொழி சமஸ்கிருதம். அந்த இலக்கை நோக்கி நகர வேண்டிய நாங்கள் துரதிருஷ்டவசத்தால் சரித்திர - பூகோள அமைப்பு சதிகளால் இந்த நீச பாஷை தமிழில் எழுதி அழுது கொண்டிருக்கிறோம்.' (நான் இங்கே சர்வசத்தியமாக 'நான் தமிழில் எழுதும் இந்திய எழுத்தாளன்' என்று சொல்லும் இந்திரா பார்த்தசாரதி அவர்களைச் சொல்லவில்லை.)

இவர்களில் 'அக்னி'யும் உண்டா? இருக்காது என்றே நம்புகிறோம். ஆனால் உண்டு - இல்லையென்று அக்னி அமைப்புதான் அதிகாரபூர்வமாகச் சொல்ல வேண்டும்.

ஒருவேளை இவர்களில் சிலரது பதில் 'ஆமாம்' என்று இருந்துவிட்டால் கூட நாம் அதிகமாக வருத்தப்படப் போவதுமில்லைதான். சுயநலம் என்பது பெரும்பாலோரின் இயற்கைதான். இந்து மதம் செழித்தால் பார்ப்பனியம் செழிக்கும். அவர்கள் இழந்த ஆகாயத்தை மீண்டும் பெறலாம். சமூகத்தின் முதற்படியில் நிற்கலாம். அரசனையே 'ஏ, ராஜன்' என்று மிரட்டலாம். (பார்க்க தாகூரின் நாடகம் — பலி) சூத்திரனையே, 'டேய்' என்று கூப்பிடலாம். பஞ்சமரை 'எதிரே வராதே. ஓடு' என்று விரட்டலாம். உழைக்க வேண்டாம். ஆனால் ராஜரீகம் உண்டு என்னும் போது பலர் ஜொல்லு விடுவது நமக்குப் புரிகிறது.

ஆனால், நம்மவர்கள் என்ன செய்யப் போகிறார்கள்?

இந்த விருதை முதன் முதலாகப் பெற்றுக் கொள்ளப் போகும் **வல்லிக்கண்ணனும் பூமணியும்** என்ன சொல்லப் போகிறார்கள்?

திரு. வல்லிக்கண்ணன் அவர்களிடமிருந்து நாம் எதையும் எதிர்பார்க்க முடியாது.

அவர் சிங்கம்தான்; ஆனால் கிழட்டு சிங்கம். 'கூறு' போய் விட்டது. நல்லது - கெட்டது, கருப்பு - சிவப்பு எல்லாம் ஒன்றாகத் தெரிகிறது. 'சுஜாதாவும் பேஷ் பேஷ்தான்' என்று சொல்லும்படி ஆகிவிட்டது.

கிங் லியரில், கிங் லியரால் வெளியேற்றப்பட்ட தளபதி கெண்ட் தனது மன்னன் கானகத்தில் ஒரு பைத்தியம் போல் புலம்பிக்

படிப்பகம்

www.padippakam.com



கிடப்பதை அறிந்து கொள்ளும் போது, லியரின் இளமைக் கால செயற்பாடுகளையெல்லாம் நினைவு கூர்ந்துவிட்டு, இப்போதிருக்கும் கிழவன் லியரோடு ஒப்பிட்டு, அவன்தானா இவன் என்று வியந்து கடைசியில் சொல்வான்:

O! It is the infirmity of age!

இதையே விரித்ததுபோல் அதே ஷேக்ஸ்பியர்தான் தன் Sonnet ஒன்றிலும் சொல்வான்:

Grabbed age and youth
Cannot live together.
Young is a summer brave
Age is like winter bare
Youth is hot and bold
Age is weak and cold
Youth is wild and Age is tame.

ஆனால் இந்த விதியை மீறி தொன்னூறு / நூறு வயதிலும் இளஞ்சிங்கங்களாய் வாழ்ந்தவர்களும் உண்டு, மாவோ, பெரியார், சி. சு. செல்லப்பா மாதிரி.

சில ஆண்டுகளுக்கு முன் 'ராஜ ராஜன்' பரிசைப் பெற இந்த ஆண்டு யாருக்கும் தகுதி இல்லையென்று பரிசுத் தொகையை ஐந்தாகப் பிரித்து தலைக்கு இருபதாயிரம் கொடுக்கத் தீர்மானித்தார்கள். அதற்கு சிபாரிசு செய்யப்பட்ட ஐந்து பேரில் சி. சு. செல்லப்பாவும் ஒருவர். ஆனால் கண் மருத்துவத்தின் காரணமாக கொடிய பணக் கஷ்டத்தில் இருந்த போதும், அதென்ன ஒரு லட்சம் என்று ஒரு பரிசை அறிவித்து விட்டு பிறகு அதைப் பிரித்துக் கொடுப்பது? தகுதி இருந்தால் யாருக்காவது கொடு. இல்லாவிட்டால் கொண்டு போய் பெட்டியில் போடு (சொற்கள் என்னுடையவைதான்.) என்று அதை வாங்க மறுத்துவிட்ட என்றும் இளமை மாறா சிங்கம் அவர்.

ஆனால் வல்லிக்கண்ணனையும் ஒரேயடியாக குற்றம் சொல்லி விட முடியாதுதான். ஷேக்ஸ்பியர் ஒரு மகாகவி. அவர் வார்த்தை பொய்த்துப் போய்விடாமல் இருக்க சிலராவது அவர் கட்சியில் இருக்க வேண்டுமேயென்று அவர் இந்த நிலைப்பாட்டை எடுக்கலாம் அல்லவா?

அதனால், இப்போது நமது எதிர்பார்ப்பு பூமணி என்ன சொல்லப் போகிறார் என்பதுதான்.

பூமணி, ஒரு பத்தோடு பதினொன்று என்கிற எழுத்தாளர் அல்ல. தான் வந்த இடம், வாழ்ந்த காலம், இவற்றின் காரணமாக கிடைத்த சுவையான நிகழ்வுகளை திரும்ப எழுத்தில் துப்பிவிட்டுப் போகிற ரகமல்ல. தனது ஒவ்வொரு வரியையும் வாழ்க்கை குறித்த உளவியல் பகுப்பாய்வாகக்(Psycho-Analysis)கொண்டு எழுதுபவர். மார்க்ஸியவாதி. பகுத்தறிவுவாதி. தலித்.

தலித்துகளுக்கும், இந்து மதத்திற்கும் இடையேயான 3000 ஆண்டு 'உறவை' அறியாதவரல்ல.

படிப்பகம்

www.padippakam.com



எந்த நுகத்தடியைக் கழுத்தில் வைத்து, இதுவரை தங்களை மண்ணோடு மண்ணாய் அழுத்தினார்களோ, அந்த நுகத்தடியையே (நீ என்னை நெருங்கினால் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊத்தச் சொல்வேன் என்று மிரட்டிய சாமிநாதனே இந்த சரஸ்வதிசாமி) தனக்குப் பரிசாக அளிக்கும்போது அதன் பின்னணி பற்றி சிந்திக்க முடியாதவராக அவர் இருக்க முடியாது.

ஆகவே நியாயமாக அவர் இந்தப் பரிசை உதற வேண்டும்.

உதறப் போகிறாரா, அல்லது 'என்னய்யா இதெல்லாம் கிறுக்குத்தனம்? வந்த வரையிலயும் வரப்பத்துன்னு போகாம' என்று பணம் அய்யாயிரத்தோடு இந்த சரஸ்வதி சிலையையும் சேர்த்து நெஞ்சோடு அணைத்துக் கொள்ளப் போகிறாரா?

எப்படியும் ஜனவரி 28 பதில் சொல்லிவிடும்.

நிற்க, ஒரு பரிசைப் பற்றிப் பேச்சு வந்துவிடுகிறபோது மற்ற பரிசுகளைப் பற்றிய சிந்தனைகளையும் தவிர்க்க முடிவதில்லை. 'இலக்கிய சிந்தனை, ராஜராஜன், வில்லி தெய்வ சிகாமணி விருது, ராஜா சர் அண்ணாமலையார் விருது, சாந்தோம் விருது, கமல ஹாசன் பரிசு' என்று எதைப் பார்த்தாலும் கொஞ்சம் கொஞ்சமாகவாவது அங்காலாய்க்க இடமில்லாமல் ஒன்றுமில்லை.

மொத்தமாக இந்தப் பரிசுகளின் புரவலர்கள் பற்றிய பொதுவான குற்றச்சாட்டை முன்னமேயே சொல்லிவிட்டால் இவைகளைப் பற்றிப் பேச இந்தக் கட்டுரையில் வசதி என்று தோன்றுகிறது.

பரிசு கொடுக்கும் எல்லாப் புரவலர்களின் நோக்கமும் அப்பரிசுகளைக் கொடுப்பதின் மூலம் அந்த எழுத்தாளனை கௌரவிப்பதை விடத் தங்களைக் கௌரவித்துக் கொள்வதே முதன்மையானதாக இருக்கிறது. சில சமயம் அது மட்டுமே இருக்கிறது.

ஒவ்வொரு பரிசாகப் பார்ப்போமே.

---

## 'அதிருத்ரம்' வரகூர் சாஸ்திரியின்

# சமூக நீதி தத்துவம்

### இரா. இளங்கோ

பேனாவில் மைக்குப் பதிலாக விஷத்தை ஊற்றி ந. விச்வநாதன் **அதிருத்ரம்** கதையைப் படைத்திருக்கிறார். வரகூர் சாஸ்திரிகள் நல்ல கூர்மையான பாத்திரம். அதன் மூலமாக இட ஒதுக்கீடு, கம்யூனிசம், போலி சாமியார்கள் என்று பல்வேறு பிரச்சினைகளை ஆய்வு செய்திருக்கிறார். பாலக்கட்டையில் உட்கார்ந்திருக்கிற பிராமணனால் பச்சைப் பசேல் என்று இருக்கின்ற வயல் வெளிகளையும், பாலத்துக்குக் கீழே கிழித்துக்கொண்டு போகின்ற

படிப்பகம்

www.padippakam.com



நீரையும், அதில் துள்ளுகின்ற மீனையும் ரசிக்க முடிகிறது. ஆனால் மம்பட்டியையோ, அல்லது கருக்கருவாளையோ எடுத்து உழைக்க தைகிரியமில்லை. உஞ்ச விருத்திதான் அவருக்கு தெரியுமாம். பிரமாதமான கேரக்டர். அவருடைய பையனுக்கு அரசாங்கம் கல்வி சொல்லி கொடுக்க முடியாதபடி கதவை அடைத்து விட்டதாம்! ஜனத்தொகையில் மூன்று சதவீதம் இருப்பவர்கள் அரசாங்க பதவிகளில் நூற்றுக்கு தொன்னூறு பேராய் முக்கிய சீட்டுகளை ஆக்கிரமித்திருப்பது வரகூர் சாஸ்திரிகளுக்குப் புரியாமல் போனது நமக்கெல்லாம் சந்தோஷமே! வேதத்தில் கூட ஏதேனும் ஒரு இடத்தில் சமூக நீதி சொல்லி இருக்கக் கூடும். 'வரகூர் சாஸ்திரி' கதையில் சில நேரம் சூத்திரர்களுக்காய் பரிதாபப்படுகிறார். ஆடு நனைகிறதே என்று ஓநாய் வருத்தப்பட்டதாம். தலித் பிரச்சினைகளை தலித்தால் மட்டுமே பேசமுடியும். அவர்களைத் தவிர வேறு யாரேனும் பேசினால் அது வெறும் நடிப்பு மாதிரி எளிதில் விளங்கி விடுகிறது. அதுவும் விச்வநாதன் மாதிரி வைதீக எழுத்தாளர்கள் 'தலித்'துகளுக்காய் பரிந்து கொண்டு கதை எழுத வருவது இலக்கியத்தில் ஒரு சோகமான நிகழ்வு. அண்மையில் மாலன்கூட தலித்துகளுக்குப் பரிந்து கொண்டு கட்டுரை எழுதியதாக ஞாபகம். இரண்டு பேருக்கும் நிறைய ஒற்றுமைகள் இருப்பதை ஆரம்பத்திலிருந்தே இலக்கியம் படிப்பவர்கள் உணர முடியும்.

'அதிருத்ரம்' மூலமாக மனு தர்மம் செத்துவிட்டது. ஏழை - பணக்காரன் என்று இரண்டு சாதிதான் இருக்கிறது என்று 'புதிய ஆத்திச்சூடி' எழுத விச்வநாதன் முனைந்திருக்கிறார். பிராமண சமூகம் என்றில்லாது எல்லா இடங்களிலும் இது விரவியிருப்பது வாஸ்தவமே. அக்ரஹாரத்துப் பெண்கள் சாதிக் கட்டுப்பாட்டை மீறி வேற்று சாதி ஆண்களை மணந்து 'பண்பாட்டுப் புரட்சி' நடத்தியிருக்கிறார்கள். ஆண்கள் அது மாதிரியான புரட்சிகளை நடத்துவதில்லை. வீட்டுக்குப் பொருத்தமான, கச்சிதமான பெண்ணாக, கலாச்சாரத்தைக் காப்பாற்றுபவளாக, பிற சாதியைச் சேர்ந்தவளாக இல்லாமல் இருப்பதில் சிரத்தை காட்டுவார்கள். வரகூர் சாஸ்திரி ஓடிப்போன மனைவிக்காய் நெக்குருகுகிறார். சங்கர சர்மா செத்துப் போனதும் அவர் நினைவில் ஆடுவது வாலத்தின் முகம்தான். என்ன ஒரு ஏக பத்தினி விரதம்!

கதைக்கு படு செயற்கையாய் இருப்பது பிராமண பாஷைதான். பிராமணர்களின் வாழ்க்கையைக் கூட அதே பாஷையில்தான் எழுத வேண்டுமா? 'பிராமணர்கள்' கட்டுரையில் கடைசி வரி சம்மட்டி அடியாய்ப் பலரையும் தாக்குகிறது. இதுபோன்ற சர்ச்சைகள் இலக்கிய வளர்ச்சிக்கு உதவாது என்று அரசூர்க்காரர் பொருமியிருக்கிறார். இலக்கியத்திற்கும் சமூக நீதிக்கும் நிறைய இடைவெளி இருப்பதை மெத்தப் படித்த வாசகர்கள் உணருவார்கள். ●

படிப்பகம்

www.padippakam.com

# நெஞ்சு பொறுக்குதில்லையே!

## ஆளுகை

ஒரு வழியாக எட்டாம் உலகத் தமிழ் மாநாடு மண்ணதிரக் கொண்டாடியாயிற்று.

'இது போலொரு கூட்டத்தை என் வாழ்நாளில் கண்டதில்லை' என்று ஆர். வெங்கட்ராமன் புகழ்ச் சான்று வழங்கிவிட்டார்.

இந்தத் திருவிழாவின் மறுபக்கமாக,— மாநாட்டுக்கு முறையாக அழைக்கப்பட்டு, ஆவலோடும் ஆய்வுரையோடும் வந்திருந்த, 62 வயது முதிர்ந்த, நடக்கச் சிரமப்படுகிற, உலகறிந்த தமிழறிஞர் கா. சிவத்தம்பி, காவல் துறையினரால் அப்புறப்படுத்தப் பட்டு சென்னை விமான நிலையத்தில் தமக்கு விதிக்கப்பட்ட சுங்க வரியைக்கூடச் செலுத்த வழியின்றிக் கதறியமுதவராய் இரக்கமின்றி வெளியேற்றப் பட்டார்; அவர் போலத் தமிழறிஞர்கள் இன்னும் சிலரும்.

தன் தாயகத்தில் தமிழன், பேட்டை ரவுடிக்கு அடங்கிப் போன ஒண்டுக் குடித்தனக்காரனைப்போல முடங்கிக் கிடக்கப் பழகிக்கொண்டுவிட்டான் என்பது மீண்டும் மெய்ப்பிக்கப் படுகிறது. இந்தியாவில் வேறு எந்த மொழிக்காரனுக்கும் இது நேராது. நேர விட மாட்டான். அவன் சுரணை அப்படி.

மாநாட்டைத் துவக்கி வைத்த குடியரசுத் துணைத் தலைவர் கே. ஆர். நாராயணன் சொன்னார்:

"திராவிட மொழிகளில் சமஸ்கிருதத்தின் தாக்கம் முதன்மையாக உள்ளது என்பதில் சர்ச்சைக்கு இடமில்லை. ஆனால் சமஸ்கிருதம் மீதான தமிழ் மொழியின் தாக்கம் உணரப்படாமலேயே போய்விட்டது."

— தமிழில் புழக்கத்தில் உள்ள எத்தனை சொற்கள் சமஸ்கிருதம் தந்தது என்று பட்டியலிடுவதைத் தான் நம் பிராமணர்கள் இன்று வரை செய்துகொண்டிருக்கிறார்கள். அப்படிச் சொற்களைப் பொறுக்க ஒரு சின்ன ஒலிக் குறிப்பே போதும் அவர்களுக்கு. ஆனால் சமஸ்கிருதத்துக்குத் தமிழின் கொடை பற்றி யாரும் பட்டியலிட முயல்வதே இல்லை. மானுடத்தின் சூழ்ச்சி முழுதும் ஒன்று திரண்டு அவர்கள் மரபணுக்களாயினவோ! பாருங்களேன், பரத நாட்டியத்தில் பட்டம் பெற்ற பத்மா சுப்ரமணியம்கூட இப்போது மொழியாராய்ச்சியில் சதிராடுகிறார். 'ஐயா' என்னும் சொல் 'ஆர்யா'விலிருந்து வந்ததாம்; சொல்கிறார். பரத முனிவர் இந்த அம்மாளுக்கு வழங்கியிருப்பார்.

படிப்பகம்

www.padippakam.com



'தமிழும் அறிவியலும்' என்னும் கருத்தரங்கிற்குத் தலைமை வகித்த எம். ஜி. ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் பி. பி. ராஜன் தெரிவித்த யோசனை:

"தமிழ் பயிற்று மொழியில் பயில்வதைக் கட்டாயமாக்காவிட்டாலும், அதில் பயில விரும்பும் மாணவர்களுக்கும் கற்றுத் தரும் ஆசிரியர்களுக்கும் ஊக்கத் தொகை கொடுத்து உதவலாம்."

இந்தத் துணைவேந்தர்தான் வி. ஜி. பி. நிறுவனங்களின் தலைவர் வி.ஜி. சந்தோஷத்திற்கு 'கவிச் சக்ரவர்த்தி' என்னும் விருதைத் தலைமையேற்று வழங்கிய வள்ளல். இந்தக் கொம்பருக்கு முன்னால் கம்பர் எம்மாத்திரம். தமிழ் படிக்க தமிழனுக்கு ஊக்கத் தொகை கொடுக்காமல் வேறென்ன பண்ண?

உணர்வாலும் பேச்சாலும் மூச்சாலும் இறுதிவரை தமிழனாய் வாழ்ந்து, தான் சொன்ன 'மும்மொழி'த் திட்டம் தவறாகப் புரிந்து கொள்ளப்படக் கூடாதென்று கடைசி நாளிலும் விளக்கம் சொல்லி, தள்ளாத வயதிலும் தலை தட்டாமல் சிந்தித்த கி. ஆ. பெ. விஸ்வநாதம் என்னும் 'முத்தமிழ்க் காவலர்' — இந்த சந்தை அரசியலிலும் தான் மலினப்பட்டுப் போக சந்தர்ப்பம் கொடுக்காமலேயே போய்ச் சேர்ந்துவிட்டார் என்ற ஆறுதல்தான் இழப்பை விடவும் நம்மை அமைதிப் படுத்துகிறது.

மற்றபடி தமிழ்?

இருக்கிறது, என்றும் போல; டிசம்பர் 31, 1994 வரை எப்படியோ, அப்படியே 6 - 1 - 1995க்குப் பின்னும்.

ஆய்வாளனிலிருந்து அன்னக்காவடி வரை எல்லாரும் சொல்லி விட்டார்களே- "தமிழ் நாட்டில்தான் தமிழே படிக்காமல் பட்டப் படிப்பு வரை படித்து வெளியேறலாம்," என்று? அந்த வாக்கியம் அப்படியே, என்றும் பதினாறாய், நூற்றாண்டு விழா காணும் நம்பிக்கையோடு வாழ்கிறது.

ஏன் இப்படி?

எல்லா மாநிலங்களிலும் அந்தந்த மாநில மொழிதான் முதல் மொழி. ஆனால், தமிழ் நாட்டில் மட்டும் தமிழ் முதல் மொழியில்லை. (ஊக்கத்தொகை மொழி!)

எப்படி இது நேர்ந்தது? எப்படி இது தொடர்கிறது?

இத்தனைக்கும், அரசியலில் நுழையும் வரை தமிழின் மறுமலர்ச்சிக்கு 'உந்து சக்தி'யாகத் திகழ்ந்து, அரசியல் களத்தில் 'தமிழ் வாழ்க' வையே முதலீடாக்கி அறுவடை செய்துவரும் திராவிடக் கட்சிகளே ஆட்சிக் கட்டிலில் வீற்றிருந்தும்கூட, ஏன் இந்தக் கேவலம்?

1968 இல் அண்ணா இருமொழித் திட்டம் கொண்டு வந்தார். அதில் முதல் மொழி தாய்மொழி என்றும், அடுத்தது பிறமொழிக

படிப்பகம்

www.padippakam.com



ளில் ஒன்று என்றும் குறிப்பிடப்பட்டதன் காரணம் என்ன? முதல் மொழி 'தமிழ்' என்று ஏன் குறிக்கப்படவில்லை?

சரி, அச் சட்டம் மீண்டும் பரிசீலிக்கத் தக்கது என்று சொல லப் பட்டதே, ஏன் பரிசீலிக்கப்படவில்லை?

தமிழ் ஆட்சி மொழிச் சட்டம் என்கிறார்களே, ஏன் அமல் செய்யப்படவில்லை?

இதன் 'சிதம்பர ரகசியம்' என்னவென்று யாரும் வெளிப்ப டுத்துவதில்லை.

ஆயிரம் கண்ணாமூச்சிகள் ஆடினாலும் உண்மை என் னவோ இதுதான்: இந்த மண்ணின் ஆட்சிக் கட்டிலில் தமிழன் வீற்றிருந்தாலும், அவனையும் அவன் மக்களையும் ஆள்வதும் ஆட்டிப் படைப்பதும் பிராமணக் கருத்தியல்தான். ராஜராஜன் காலத்தில் மெல்ல நுழைந்து, இன்று வெல்ல முடியாத வல்லமை யாய் நிலைத்திருக்கிறது.

பிராமணர்கள் தமிழைப் பேசினாலும், அதன் வளர்ச்சிக்குத் துணை செய்தாலும், தங்களை எப்போதும் சமஸ்கிருதக் கலாச் சாரத்துக்குரியவர்களாகவே அடையாளப் படுத்துகிறவர்கள். இந்தி யாவின் எல்லா மொழிகளும் சமஸ்கிருதத் தாக்கத்துக்கு ஆட்பட் டுப் போயின. (ஏனைய திராவிட மொழிகளும்தான்.)

தமிழ் மட்டும்தான் இன்னமும் தன் தனித்தன்மையை இழந்து விடாமல், மண்ணைப் பிசைகிறவனின் மண்டையில் வேரோடிய மொழியாய், தொன்மை மொழிகளில் தொடர்ந்து பேசப்படும் ஒரே மொழியாய்த் தன்னைத் தக்க வைத்துக் கொண்டிருக்கிறது. (தமிழில் ஆயிரமாயிரம் சமஸ்கிருத சொற்கள் கலக்கப்பட்டிருக் கலாம். அது இயற்பியல் கலப்படம்தானே தவிர வேதியல் கல வையல்ல. தமிழின் மேல் சமஸ்கிருதத்தின் தாக்குதல் ஒன்றும் அற்ப சொற்பமானதல்ல. ஆயினும் தமிழ் தன் ஆளுமையை இழக் காமைக்குக் காரணம் பிராமணர்களின் தீட்டுக்கு ஆட்பட்டவர் களிடம் இந்தக் கலப்படம் சென்றடையாமைதான். வழி வழியாய் தமிழ் வாழ்ந்து வருவதற்கு அந்த மண்ணைப் பிசைகிறவர்கள் தான் மூலம்.)

சமஸ்கிருதத்தை ஏற்றுக் கொண்ட எந்த மொழியையும் பிரா மணர்கள் ஏற்றுக் கொள்வார்கள். தமிழ் அப்படி ஏற்றுக் கொள் ளப் படுவதில்லை.

நீங்கள் இதைத் தெரிந்து கொள்ள வேண்டும்:

பிராமணர்கள் இந்தியா முழுதும் (வட கிழக்கு மாநிலங்க ளைத் தவிர) இருக்கிறார்கள். அந்தந்த மாநிலத்து மக்கள் தங் கள் மொழியை எப்படிப் பேசுகிறார்களோ, அதைப்போலவே பிரா மணர்களும் பேசுகிறார்கள். காரணம், அம்மொழிகள் சமஸ்கிரு தத்தால் சுத்தம் செய்யப்பட்டவை. ஆனால் தமிழ் அப்படியல்ல.

படிப்பகம்

www.padippakam.com



ஆகவே தமிழ் நாட்டில் மட்டும்தான், அவர்களுக்கென்றேயான பிராமண மொழியாக 'அவாள் பாஷை'யை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். காரணம், அவர்களின் சமஸ்கிருத அடையாளத்தைக் காட்டுவதற்காகவும், தமிழ் அந்த அடையாளத்தோடு உடன்பட மறுக்கிறது என்பதாலும்தான்.

'தமிழில் படித்தால் வேலை வாய்ப்பில்லை. தமிழர்கள் தனிமைப் பட்டும் போவார்கள்' என்னும் கருத்தை எல்லார் மண்டையிலும் ஏற்றியாயிற்று. ஏற்றியது யார் என்று சொல்லித் தெரிய வேண்டாம். இன்று பிராமணர்களைவிடவும் இன மானம் பேசும் தமிழன்கள் மனங்களில் இக்கருத்தியல் புற்று கட்டிய சிரங்காக நமநமத்துக் கொண்டிருக்கிறது.

பிராமணர்கள் வெளி நாடுகளுக்கு வேலை பார்க்கப் போகிறார்களே, தமிழர்களாகவா?

இல்லை. தமிழ் பேசும் இந்துக்களாய்த்தான் போய் வாழ்கிறார்கள். வெளி நாட்டில் இவர்களுக்கு வேண்டியது தமிழ் அல்ல. இவர்கள் கட்டிக் கொள்ளும் கோயில்களுக்கான அர்ச்சகர்களும், இவர்களின் சம்ஸ்காரங்களைச் செய்வித்துத் தர தர்ப்பைக் கட்டை அக்குளில் இடுக்கிக் கொள்ளும் சவுண்டி பிராமணர்களும்தான். 'தமிழன்' என்று இங்கே புனைந்து கொள்வதெல்லாம் ஒரு வசதிக்காகத்தானே தவிர, இவர்கள் தமிழர்களாய் எங்கேயும் அடையாளப் படுவதில்லை. தவிர்க்க முடியாத நெருக்கடி ஏற்பட்டு விட்டால், குறைந்த பட்சம் 'தமிழ் பிராமணர்கள்' என்றாவது அடையாளப்படுவார்களே தவிர, தமிழர்களாய் இல்லை.

நாளைக்கே 'சமஸ்கிருதம்தான் தமிழின் 'ஊற்றுக்கண்,' சமஸ்கிருதம் இல்லாமல் தமிழ் இல்லை' என்று சரண் பட்டுப் பாருங்கள். தமிழை ஆட்சிமொழியாக, பயிற்று மொழியாக, நீதி மன்ற மொழியாக ஆக்கிவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பார்கள். உங்களால் ஒன்றும் ஆகாது. உங்களுக்குத் தலை இருப்பதே எண்ணெய்க்குக் கேடாகத்தானே.

தமிழர்கள் என்ன செய்யப் போகிறார்கள்?

தன்னுடைய பட்டம், பதவி, அதிகாரம், ஆளுமை யாவும் பறி போனாலும், 'மொழிதான் என் இனத்தின் மூலம்' என்று உணர்ந்து செயல்படுகின்ற —பிராமணக் கருத்தியலை உடைத்தெறிகிற ஒரு தமிழன் என்றைக்குத் தலைமை ஏற்க வருகிறானோ, அன்றுதான் தமிழ் முதன்மைப்படும்.

அப்படியொரு 'தமிழன்' அரசியலுக்கு வருவானா? வந்தாலும் சொந்த நல அமிலத்தில் கரையாமல் நிற்பானா?

சோற்றுப் பிண்டங்களுக்கு இது வேண்டாத ஆசைதான்.

சுரணையுள்ள மனிதனுக்கு விடியலுக்கான ஒளி.

★

படிப்பகம்

www.padippakam.com



டிசம்பர் 18, 1994இல் திருச்சியில் புலம் பெயர்ந்த தமிழர் நல மாநாடு ஒன்று நடந்தது. 'நிறப்பிரிகை'யாளர்களும் நண்பர்களும் கூட்டிய மாநாடு. மார்க்ஸ், ரவிக்குமார் போன்றவர்கள் இதுபோல் சாதிப்பதைத் தங்கள் இயல்பாகக் கொண்டிருப்பதை மாநாடு காட்டியது. தஞ்சையில் பின்னர் கூடிய பல லட்சம் மக்களை விட இம் மையத்தில் கூடிய சில நூறு பேர்கள் உண்மையாகவே தமிழையும் தமிழனையும் அதிகம் அவதானித்தவர்கள்.

புலம் பெயர்ந்த தமிழர்களின் சொல்லொணாத் துயரங்களையும் மீறிய ஆறுதலாய் என்னை அழ வைத்த சேதி, உலகம் முழுதும் உள்ள சாதாரண மக்களும் 'தமிழன்' என்றோர் இனம் இருப்பதை, தவிப்பதை உணர்த்திக் கொண்டிருப்பவர்கள் இவர்கள் என்பதுதான். தமிழர்களின் தாயகம் இலங்கைதான் என்று உலக மக்கள் நினைத்தால் அது அவர்கள் தப்பில்லை. தமிழன் பிறந்த மண் இந்தியாவில் காணாமல் போய்க்கொண்டிருப்பது பற்றி எவனுக்குக் கவலை?

இந்த மாநாட்டில் 'கவிதாசரண்' வாசக நண்பர்கள் பலரைச் சந்திக்க வாய்த்தது எதிர்பாராத இனிய அனுபவம். இங்கேதான் கோவை ஞானியை முதன் முறையாகச் சந்திக்க வாய்த்தது. அறிமுகப் படுத்திக்கொண்டவுடன் கையைப் பற்றிக்கொண்டு, "லங்காதகனம் மாதிரி கவிதாசரண் பற்றி எரிக்கிறது. உங்களோடு நான் எல்லாவற்றிலும் உடன்பட மாட்டேன். ஆனால் நீங்கள் தெளிவாக இருக்கிறீர்கள்; நன்றாகச் செய்கிறீர்கள்," என்றார். நான் கேட்டுக்கொண்டேன். அதற்குப் பிறகு அவர் வெளிப்படுத்தியவை அவரை வெளிச்சப் படுத்தியவை.

எஸ். என். நாகராசன் எழுதிய 'மார்க்சியம்—கிழக்கும் மேற்கும்' நூலை ஞானி வெளியிட்டிருக்கிறார். அந்த நூலுக்கு வந்த விமர்சனங்கள் ஏதோ அவரையே விமர்சித்த மாதிரி அவரைக் காயப்படுத்தியிருப்பதாகப் பட்டது. "தமிழ்நாட்டில் அறிவுஜீவி என்று சொல்லிக் கொள்கிற எவன் மார்க்சை ஒழுங்காகப் படித்தான்? புரிந்துகொண்டான்?" என்று ஆதங்கப்பட்டார்.

ஒழுங்காகப் படிக்காதவர் பட்டியலில் நான் தலைப்பிலேயே இருக்கக் கூடும். (ஆனால் அது என்னைப் பற்றிய பேச்சல்லதான்.) என் பரம்பரை பற்றிய எல்லா விவரங்களும் எனக்குத் தெரியாமல் போனாலும் நான் அந்தப் பரம்பரை என்பது எவ்வளவு மெய்யோ, அவ்வளவு மெய்- மார்க்சை நுணுகி நுணுகிப் படித்துச் செரித்துக் கொண்டு, மார்க்சியப் பிரவசனக்காரனாகவோ, சனாதனியாகவோ இருப்பதை விட, 'மார்க்ஸ் என்னையும் என்னைப் போன்றவர்களையும்தான் சிந்தித்தான்' என்னும் மெய்யான சொந்தம் பாராட்டலில் நான் அவன் வழித் தோன்றலாய் அடையாளப்படுவது. இந்த அடையாளம் மட்டும் ஞானிக்குப் போதாமல் இருக்கலாம். மார்க்சிய சனாதனம் பற்றி என்னுள் ஒரு பிடிமானமும் இல்லை.

—தொடர்ச்சி அட்டையின் கடைசிப் பக்கம்.

படிப்பகம்

www.padippakam.com

— முன் அட்டை தொடர்ச்சி

கடவுள் குடியிருக்கக் கட்டிடம் கட்ட
சிற்பியும் வேண்டுமே! ஏழைத்
தட்டெழுத்துக் குமாஸ்தா
இதற்கெல்லாம் போவதெங்கே?

அதே ஊரில் பிறந்த கடுக்கா தனக்குத்
தான் குருபீடம் லாயக்கு என்று எண்ணு
கிறார். வயதாகவில்லையே என்று கேட்டால்
காத்திருப்பேன் காலியாக இருக்கட்டும்
பீடம் என்கிறார். சின்னக் கோமாளி
பத்திரிகை பீடம் என்னுடையதுதானே
குருபீடமும் என்னுடையதுதான்
என்கிறார். இவர்கள் போர் எப்படி
முடியுமென்று பார்க்கலாம்.
உலகை ஆட்டுவிக்கும் நிகழ்ச்சியல்ல
இது. சொல்பமான சொத்துக்கு
மாபெரும் போராட்டம்.
வேடிக்கையாக இருக்கிறது என்றும்
சொல்ல முடியாது. வினை புரையோடி
இருப்பதாக வேண்டுமானால் சொல்லலாம்.
குருபீடம் காலியாக இருக்கிறது.
அதைப் பார்த்தால் பரிதாபமாக இருக்
கிறது. காலியிடங்கள் நிரப்பப்பட்டா
கவேண்டும் என்பது ஒரு இயற்கை நியதி.

4–2–87

— கவிதை கிடைக்க உதவிய திருமதி க. நா. சு. அவர்களுக்கு நன்றி. கையெழுத்தை மிகுந்த முயற்சியில்தான் படிக்க முடிகிறது. கவிதையில் வரும் சில பெயர்கள் யாரைக் குறிக்கின்றனவோ தெரியவில்லை. அச்சுக்கு வராத க. நா. சு. வின் எழுத்துகள் அநேகம் என்ற உண்மை அதிர வைக்கிறது. அவர் விமர்சனம் சர்ச்சைக்குரியதுதான். ஆனால் விமர்சிக்கப்பட்டவர்களால் எப்போதும் கவனிக்கப்பட்டவர். —

படிப்பகம்

www.padippakam.com

Kavithaasaran, Dec. '94 & Jan. '95 Regd.No. TN/MSN746
CREATIVE LITERARY MONTHLY IN TAMIL. R. Dis. 5479/90

80ஐம் பக்கத் தொடர்ச்சி—

"நானும் பெண்ணியவாதிதான். தலித்தியவாதிதான். நான் வெள்ளையாகவா இருக்கிறேன்? பார்ப்பான் மாதிரியா இருக்கிறேன்? என்னை வித்தியாசமாய்ப் பார்ப்பதெப்படி?... தலித்தியம், பெண்ணியமெல்லாம் நாம் எப்போது வேண்டுமானாலும் பேசலாம். ஆனால் இன்றைக்கு உடனடியாகப் பேச வேண்டியது 'டங்கல்' பிரச்சினையில்லையா? இது எத்தனை பேருக்கு விளங்குகிறது? இந்தத் தேசமே அடிமைப் படப் போகிறது. அறிவுஜீவிகள் பேச வேண்டாமா?" என்று தன்னிச்சையாய்க் கொட்டினார்.

'நான் பார்ப்பான் மாதிரியா தெரிகிறேன்?' எனக் கேட்டதும் அவரைப் பார்த்தேன். எனக்கென்னவோ அவர் ஒரு நிலக்கிழார் மாதிரியே தெரிந்தார். (வெறும் தெரிதல்தானே.) 'டங்கல்' பற்றிப் பேச வேண்டும்தான். அதற்கு முன்பாக நம்மூர் வணிகர்களெல்லாரும் மார்வாடிச் சரக்குகளுக்கு வினியோகஸ்தர்களாகிவிட்டது பற்றிப் பேச வேண்டாமா? இந்தச் சுரண்டலுக்குப் பின்னுள்ள கலாச்சார சீரழிவும் பேசப்பட வேண்டும். 'டங்கல்' என்பது வந்து கொண்டிருக்கும் சர்வதேசச் சுரண்டல்; கலாச்சார சீரழிவு. இதில் சர்வ தேசியமும் சரி, தேசியமும் சரி நிகர்தான். சர்வ தேசியச் சீரழிவிலிருந்தாவது விடுபடலாம். தேசியச் சீரழிவிலிருந்து?...

பெண்ணியம், தலித்தியம் பற்றி எப்போது வேண்டுமானாலும் பேசலாம்தான். ஆனால் 'டங்கல்' என்பது பெண்ணியம், தலித்தியம் பேசுவதைத் தவிர்ப்பதற்கான வாய்ப்பா என்ன?

**நண்பர்களே, இனியும் தாமதியாமல் நம்பிக்கையுடன் சந்தாதாரர் ஆகுங்கள்; சந்தாதாரர் ஆக்குங்கள்.**

Printed by Mrs. Kavithasaran at 31, T.K.S. Nagar, Madras-19 and Published at 580, T.H. Road, Madras-21 & Edited by: Kavithaasaran.

படிப்பகம்